ISSN 2021-9041

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

ආසිරියම්

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

இதழ் 004 ஆகஸ்ட் 2011 ரூபா 50/=

## பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி



1932.05.10 2011.07.06

சபா.ஜெயராசா/ ஆர்.லோகேஸ்வரன்/ ந.அனந்தராஜ்
ஆ.செல்வநாயகம்/ கி.புண்ணியமூர்த்தி
அன்பு ஜவஹர்ஷா/ ஏ.சி.எல்.அமீர் அலி

# மே முதல்
# வெளிவந்துகொண்டிருக்கிறது...





# "AASIRIYAM"

180/1/50 People's Park, Colombo -11

Tel: 011-2331475

E-mail : aasiriyam@gmail.co

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
விளைத்திறன் மிக்க ஆசிரியர்"




# உள்ளே...


- ஆன்மிக நுண்மதி ... 04
- மனவெழுச்சிகளை முறைப்படுத்தலில் ... 07
- பாடசாலை மேம்பாட்டு ... 11
- தொலைநோக்கும் பணிக்கூற்றும் ... 19
- ஆசிரியர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் ... 22
- ஆசிரியைகளும் ஓய்வு பெறுதலும் ... 28
- தடையற்ற சந்தைப் பொருளாதாரத்தின் ... 32

ISSN 2021-9041

Aasiriyam

# ஆசிரியம்

மாத இதழ் 004

**ஆசிரியர் :**
தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**
அ.ஸ்ரீகாந்தலட்சுமி
எம்.என்.மர்சூம் மௌலானா
காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**
பேரா.க.சின்னத்தம்பி
பேரா.சபா.ஜெயராசா
பேரா.சோ.சந்திரசேகரன்
பேரா.எம்.ஏ.நு·மான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**
சுந்தரம் டிவகலாலா
சி.தண்டாயுதபாணி
அன்பு ஜவஹர்ஷா
வல்வை ந.அனந்தராஜ்

**ஆலோசகர் குழு :**
பேரா.மா.கருணாநிதி
பேரா.மா.சின்னத்தம்பி
பேரா.மா.செல்வராஜா
முனைவர் த.கலாமணி
ஆய்வாளர்.தை.தனராஜ்
முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்
முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்
செ.அருண்மொழி
சு.முரளிதரன்
பொ.ஐங்கரநேசன்

**நிர்வாக ஆசிரியர் :**
சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**
கோமளா/மைதிலி

**Printed by: cbc prees**
Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு :**
**"Aasiriyam"**
180/1/50 People's Park, Colombo -11
Tel: 011-2331475 E-mail : aasiriyam@gmail.com

## ஆசிரியரிடமிருந்து...

### "சிவத்தம்பி" எனும் பேராசான்!

இன்று தமிழியல் ஆய்வுலகம் தன்னிடையே வாழ்ந்து வந்த அதன் தலைமகனான பேராசிரியர் சிவத்தம்பியை இழந்துவிட்டது.

கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர், விரிவுரையாளர், பேராசிரியர், துறைத்தலைவர், வாழ்நாட் பேராசிரியர் மற்றும் விமரிசகர், ஆய்வாளர், மொழி பெயர்ப்பாளர் என்று பல்வேறு களங்களில் இயங்கி வந்தவர். இன்னொருபுறம் கலைஞராக, சுவைஞராக, யாவருக்கும் இனியவராக வாழ்ந்து வந்தவர். மொத்தத்தில் பல் பரிமாணங்களுடன் எழுச்சிபெற்றவர். இதனால் தனது ஆளுமை விகசிப்பை விரிவாக்கி வளமாக்கி தமிழியலு டன் இணைத்து புதிய மரபுகள் உரு

வாகக் காரணமாக இருந்தவர். பல்கலைக்கழக உயராய்வு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு கலை பண்பாட்டு நிறுவனங்கள் யாவற் றிலும் பங்குகொண்டவர். படித்தவர் பாமரர் என்ற பாகு பாடு காட்டாமல் அனைவரையும் ஒருங்கிணைத்து ஊடாடுவதில் பெரும் விருப்பங் கொண்டவர். இத்தகைய உறவாடலை பண்பாடாகவே வளர்த்து வந்தவர்.

எப்போதும் அறிவைத் திரட்டுதல் எனும் பணியில் ஆர்வ முடன் ஈடுபாடு காட்டியவர். பல்துறை சார்ந்த ஆக்கங் களை வாசிப்பதில் தனியான கவனத்தை வெளிப்படுத்திய வர். தொடர்ந்து மார்க்சியச் சிந்தனையின் தாக்கத்திற்கு உட்பட்டவர். இதனால் புத்தாக்கமான அறிவை, ஆய்வை மடைமாற்றும் விசையாகவும் தொழிற்பட்டவர்.

தமிழ்ச்சமூகத்தில் அல்லது தமிழ் வரலாற்றில் நடைபெற் றவை அனைத்தும் சமூக, பொருளாதார, அரசியல், பண் பாட்டு காரணிகளின் பன்முக இடைத்தாக்கங்களால் ஏற்பட்டவை. இந்தச் சிந்தனை பேராசிரியரது அறிவு, ஆய்வு சார்ந்த புலங்களில் பெரும் தாக்கம் பெற்றது அல்லது அவற்றை திசைமுகப்படுத்துவதில் முதன்மைப் பங்கு கொண்டது. இதனால் பண்பாட்டு இலக்கியச் சூழலில் குறிப்பான போக்கொன்று ஏற்படும்போது அதன் சமூக பொருளாதார வேர்களைக் கண்டறிய வேண்டும் எனும் உந்துதலுக்கு உட்பட்டார். இதற்கு மார்க்சியப் பார்வை துணை செய்தது. இந்தப் பார்வையின் துணை கொண்டுதான் பேராசிரியர்கள் கா.சிவத்தம்பி மற்றும் க.கைலாசபதி போன்றோர் இயங்கி வந்தனர். இவர்களது ஆய்வுகள் விமரிசனங்கள் மாறுபட்ட பொருள்கோடலை, புதிய விளக்கத்தை முன்வைத்தது.

அறிவுத்தேட்டம், ஆய்வுச் செயன்முறைகள் புதிய வழிக ளிலும் மாற்று வழிகளிலும் இயங்கும் பொழுது புத்தாக் கங்களும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களும் வெளிப் படும். பேராசிரியர் சிவத்தம்பியின் சிந்தனைகள் ஆய்வு கள் மற்றும் விமரிசனங்கள் யாவும் நமக்கு இதனையே உணர்த்துகின்றன.

பேராசிரியர் பல்கலைக்கழகத்தில் தனது முதற் பட்டத்திற்கு தமிழ், வரலாறு, பொருளியல் போன்ற பாடங்களை எடுத்தவர். இந்தப் பாடங்கள் இவரது அறிவுதேட்டத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. பின்னர் மார்க்சிய நோக்கு இதனுடன் இணைய வளமான அறிவின் படிப்படியான வளர்ச்சியில் ஆளுமையில் முன்னேற்றம் பெற்றவராக உயர்ச்சிபெற்றார். இதுவே பல்துறைச் சங்கம ஆய்வுமுறை வழிநின்று ஆய்வுகளை வெளிப்படுத்தும் தற்துணிவை, முதிர்ச்சியை இவருக்கு வழங்கியது. தமிழியல் ஆய்வில் சிவத்தம்பியின் ஆய்வுத்தடம் நிலைபேறாக்கம் பெற்றது.

பேராசிரியரது எழுத்துகள் மற்றும் அவருடனான நேரடி உரையாடல் முதலானவற்றில் பங்குகொள்ளாமல் இருப்பவர்களுக்கு பேராசிரியர் சிவத்தம்பி விளங்கிக் கொள்ள முடியாத ஆளுமை. இதனால் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவரை விளங்கிக் கொள்வதில் தடுமாறியுள்ளார்கள். இவரது நூல்கள் எழுத்துக்களுடன் முழுமையான பரிச்சயம் எதுவும் கொள்ளாமல் இவரது எழுத்துகள் விளங்குவதில்லை என்ற ஒன்றைப் பரிமாண விளக்கங்களையும் முன்வைத்துள்ளார்கள்.

இவரது சிந்தனையில் கட்டுரையில் உரையாடலில் பயன்படுத்தும் மொழிதல் பண்பு, எடுத்துரைப்பியல் ஒரு முறையியலில் இயங்குகிறது எனலாம். இங்கு மொழியாடலின் தன்மையே வேறுபடுகின்றது. இதனால் மொழிதல் நடை, எண்ணக்கருவாக்கம், கலைச்சொற்கள், பிரச்சினை விடுவித்தல், தருக்கித்தல், ஆய்வு நோக்கம், கட்டுரையாக்கம் முதலியவை பேராசிரியரது தனித்தன்மையை அடையாளப்படுத்துபவையாக எழுகின்றன.

"மேனாட்டு வழிவந்த விமரிசன முறைமை பிரதானமாக நவீன இலக்கியத்தின் பாற்பட்டதாக அமையவே, நவீன காலத்திற்கு முந்திய தமிழ்இலக்கியங்களையும் நவீன காலத் தமிழ் இலக்கியங்களையும் ஒருங்குசேர வைக்கும் தன்மை இல்லாமல் போய்விட்டது. புதிய தமிழிலக்கியப் பயில்வாளர் பலருக்கு பழைய தமிழிலக்கியப் பரிச்சயம் இல்லாதிருந்தமையும் பாரம்பரிய தமிழறிஞர்களுக்குப் புதிய தமிழிலக்கியப் பரிச்சயம் இல்லாதிருந்தமையும் இந்தப் பிளவை மேலும் அதிகரித்துவிட்டது" என்று பேராசிரியர் எப்போதும் குறைப்பட்டுக் கொள்வார். இந்த இரு மரபுகளையும் இணைத்து இயங்குவதற்கான சூழமைவுகளை பண்பாட்டை உருவாக்குவதில் உறுதியுடன் இருந்து செயற்பட்டுள்ளார். இது இவரது பெரும் பலமாகவும் ஆளுமையாகவும் வெளிப்பட்டது.

"நமது முழு இலக்கியத்தின் வளத்தை, வரலாற்றை, அழகை, குறைவை, வரையறைகளைக் கணக்கெடுத்து தோன்றிய விமரிசனத் தத்துவம் எதுவும் எம்மிடையே வளரவில்லை" என்று நிதானமாகவும் நேர்மையாகவும் கருத்துரைக்கும் பண்பு கொண்டவர். இதுவரை பேராசிரியர் ஆங்காங்கு வெளிப்படுத்திய விமரிசன சிந்தனைகளைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது நமக்கு ஆழமான விரிசிந்தனை, அறிவுநோக்கு, விமரிசன முறைமை கிடைக்கும். இந்த அறிகை மரபுக் கையளிப்பு பரவலாக்கப்பட வேண்டும். இதனை நாம் சமூகமயப்படுத்த வேண்டும். அடுத்த தலைமுறைக்கு இதனைக் கையளிக்க வேண்டும்.


"தமிழ்ச் சமூகத்தின் நடைமுறைகளில் ஒன்று என்ற வகையில் தமிழிலக்கியத்தின் வளர்ச்சியை நோக்குவது முக்கியமான அறிவுநிலைப்பட்ட தேவையாயுள்ளது. இந்நிலை நின்று ஆராயப்படும் பொழுதுதான் இலக்கியத்திடம் வேண்டப்படும் சமூக - அழகியல் அம்சங்கள், இலக்கிய பயில்வாளரின் சமூக நிலைமை, சமூகத்தின் பொதுவான உற்பத்தி முறைமைகளுக்கும் இந்த இலக்கியத்தின் உற்பத்தியாளருக்குமுள்ள உறவுகள், இலக்கியத்தின் கருத்துநிலைப்பாங்கு ஆகியன தெளிவாகும். இவ்வாறு நோக்கத் தொடங்குவதன் மூலம் தமிழ் மக்களின் வரலாற்றை அவர்தம் இலக்கியங்களின் மூலம் அவ்விலக்கியங்களின் நிலைநின்று விளங்கிக்கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து" செயற்பட்டுள்ளார்.

தமிழரின் சமூக உளப்பாங்கினை அறிவதற்கு இது ஒரு நல்ல வழி என்பதை தெரிந்துகொண்டார். "ஆய்வின் இக் கட்டத்திலேயே இலக்கியத்தின் வரலாற்றிற்குள் (அதாவது உள்ள இலக்கிய நூல்கள், வகைகள், மதிப்பீடுகள் ஆகிய வற்றின் கால வரன்முறையான வளர்ச்சிக்கும்) இலக்கிய வழி வரலாற்றிற்கும் (அதாவது இலக்கியத்தைச் சாதனமாகக் கொண்டு வரலாற்றோட்டத்தைப் புரிந்துகொள்வதற்கும்) வேறுபாடு உணர்த்தப்படல் வேண்டும்." இதனை உணர்ந்துகொண்டு "தமிழில் இலக்கிய வரலாறு" எழுதும் வரலாறெழுதியல் ஆய்வு முறைமையை உருவாக்கினார்.

"முன்னர் அறிந்திராத ஒன்றை உருவாக்குதலும் பிறிதொன்றை நோக்கிய நகர்ச்சியாகவும் புதிய இணைப்புகளின் உருவாக்கலாகவும் புதிய புலக்காட்சிகளின் மேலெழுச்சிகளாகவும் தனித்துவத்தின் பாய்ச்சல்களாகவும் ஆக்கமலர்ச்சி வெளிப்படுகின்றது. அது கட்டடற்ற சிந்தனை அல்லது திறந்த சிந்தனை அல்லது விரிசிந்தனையின் தொழிற்பாடுகளோடு இணைந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது." இந்த அறிகை மரபுப் பின்புலத்தில் பேராசிரியர் சிவத்தம்பியின் புலமைத்தளத்தை நோக்குவது மிகப் பொருத்தமாக இருக்கும். இவரது ஒவ்வொரு ஆக்கங்களையும், பனுவல் களையும், கட்டுரைகளையும், முன்னுரை/ அணிந்துரை களையும், விமரிசனங்களையும் நாம் ஆழமாக வாசிக்க வேண்டும். மறுவாசிப்புச் செய்ய வேண்டும். இதுவே இவ்வரைப் புரிந்துகொள்வதற்கான சிறந்த வழிமுறை.

பேராசிரியர் தனது இறுதிக் காலம் வரை தமிழியல் ஆய்வுச் சூழலில் உயிர்ப்புடன் இயங்கி வந்தவர். இதுவே அவரது பலம். இவர் தொடர்ந்து இயங்கி வந்தமையால் பல்வேறு விமரிசனங்களுக்கும் உட்பட்டார். ஆனால் இவர் இவை எவற்றையும் பொருட்படுத்தாது தொடர்ந்து இயங்கி வந்தார். இதுவே இவரை வாழ வைத்தது.

**தெ.மதுசூதனன்**




**சபா.ஜெயராசா**

# ஆன்மிக நுண்மதி புதிய கண்டுபிடிப்பு

**நு**ண்மதி பற்றிய ஆய்வில் பல்வேறு பன்முகப்பாடுகளும் கிளை பரப்பல்களும் ஏற்படத் தொடங்கியுள்ளன. பொது நுண்மதி (IQ) பன்முக நுண்மதி (MQ) மனவெழுச்சி நுண்மதி (EQ) ஆக்க மலர்ச்சி நுண்மதி (CQ) வியாபார நுண்மதி (BQ) அரசியல் நுண்மதி (PQ) ஆன்மிக நுண்மதி (SQ) என்றவாறான தனித்தனித் துறைகள் உருவாக்கம் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. இவற்றுள் "ஆன்மிக நுண்மதி" *(Spiritual intelligence)* என்பது அதிக கவன ஈர்ப்பைப் பெறத் தொடங்கியுள்ளது.

ஒருவரது தனியாள் விழுமியங்கள், வாழ்வின் எல்லைகளைத் தேடியறியும் ஊக்கல், தன்னுணர்வின் இயல்பு, நிகழ்வனவின் நீட்சி முதலியவை பற்றி ஒருவரின் விளக்கங்களை ஆன்மிக நுண்மதி உள்ளடக்குகின்றது.



***மகாத்மாகாந்தி, சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், நெல்சன் மண்டேலா*** முதலியோர் ஆன்மிக நுண்மதி கூடியவர்களுக்குரிய எடுத்துக்காட்டானவர்கள். அகநிறைவு, பொறுப்புடைமை, இறைநோக்கு தளராவுறுதி, உளவொடுக்கம், விடாமுயற்சி முதலியவை மட்டுமன்றி வேறும்பல காரணிகளும் ஆன்மிக நுண்மதியில் உள்ளடக்கப்படுகின்றன. விடைகளிலும் பார்க்க வினாக்களைத் தேடுதல் நம்பிக்கையற்ற தளம் பல்நிலையோடு இங்கிதப்படுதல், பல்வேறு அழுத்தங்களின் மத்தியிலும் தளரா இலக்குடன் தொழிற்படுதல் முதலிய ஆற்றல்களும் ஆன்மிக நுண்மதியில் உள்ளடக்கப்படுகின்றன.

மனித உள்ளுணர்வை *(Intuition)* ஆற்றலுடன் இயக்கும் திறனும் அதில் உள்ளடக்கப்படுகின்றது. உடல், பொது உள்ளம், மேன்மை நிலை உள்ளம் முதலியவற்றை ஒன்றிணைக்கும் தியானம், ஒழுக்கப் பயிற்சி, யோகப் பயிற்சி முதலிய செயற்பாடுகளும் ஈடுபாடுகளும் அதில் அடக்கப்படும். ஆன்மிக நுண்மதி கூடியோர் மேற்கூறிய விடயங்களிலே தீவிர ஈடுபாடு காட்டுவர்.

டனா சொகார் *(Danah Zohar)* என்பார் ஆன்மிக நுண்மதிக்குரிய பின்வரும் தொடு சுட்டிகளைக் *(Pointers)* குறிப்பிட்டுள்ளார்.

- நெகிழ்ச்சிப்பாங்கு
- தன்னறிவு

- விழுமியங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் நீண்ட நோக்கு
- எதிர்நிலையான அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்ளல்
- ஆன்மிக இணைப்புக்களைத் தேடுதல்
- பன்முக விழுமியங்கள்
- தாம் மேற்கொண்ட நம்பிக்கையைத் தளராது கடைப்பிடித்தல்
- குறிப்பிட்ட பிரச்சினையை மீள் வடிவமைக்கும் வினாக்களை எழுப்புதல்
- கருணையுள்ளம்

ஆன்மிக நுண்மதி ஈவு கூடியோருடன் இடைவினை கொள்வதனாற் பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கப் பெறும் என்று விதந்துரைக்கப்படுகின்றது. அவ்வாறான நுண்மதி கூடியோர் மாற்றங்களை இலகுவாகக் கையாளக் கூடியவர்களாகவுமிருப்பர். அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களும் அவர்களால் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும்.

ஆன்மிக நுண்மதியைத் தமது தொழிற்பாடுகளிலே பயன்படுத்திக் கொள்ளும் கல்வி நிறுவனங்களும் உற்பத்தி நிறுவனங்களும் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது.

- வாழ்க்கையின் நோக்கும் பொருத்தப்பாடும் பற்றிய உற்றுணர்வு மேலோங்கல்.
- வாழ்க்கைக்கும் தொழிலுக்குமிடையே சமநிலைப் பாங்கும் இதமான வேலைச் சூழலும் கிடைக்கப் பெறுதல்.
- பன்முகப்பாடுகளுக்கு அங்கீகாரம் கிடைத்தல்.
- நெருக்கீடுகள் குறைவாக இருத்தல்.
- தனியாள் மமதை மேலோங்காதிருத்தல், வெட்டிப் பேச்சும் இடம்பெறாதிருத்தல்.
- பொருத்தமற்ற போட்டிகள் தவிர்க்கப்படுதல்.
- ஆதரவும் அறிவாற்றற்படுத்தலும் *(Mentoring)* மேலோங்கியிருத்தல்.
- உயர்நிலையான ஆக்கமலர்ச்சியும், புத்தாக்க முனைப்புக்களும் காணப்படுதல்.
- தவறான செயற்பாடுகளும் வஞ்சக நடவடிக்கைகளும் வளராது இயல்பாகத் தடுக்கப்படுதல்.
- வளங்களுக்கு அங்கீகாரமும் மதிப்பும் தருதல்.

நவீன முதலாளித்துவத்தின் தீவிர வளர்ச்சி, இனத்துவ ஒடுக்குமுறைகள், தொழில்புரிவோரின் உணர்வுகள் சிதைத்துச் சின்னாபின்னமாக்கப்படல், வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்தல், வறியவர்களுக்குரிய தரமான கல்விச் சந்தர்ப்பங்கள் தொடர்ந்து வீழ்ச்சியடைதல் முதலாம் சமகாலத்தைய சூழலில் "ஆன்மிக நுண்மதி" பற்றிய சிந்தனை மேலைப்புலத்தில் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆன்மிக நுண்மதிமிக்கோரின் இடைவினைகளாலும், செல்வாக்கினாலும் கல்வி நிறுவனங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் பணிபுரிவோரது நடத்தைகளில் பின்வரும் மாற்றங்களும் எழுச்சிகளும் தோற்றம் பெறுமென்று சுட்டிக்காட்டப்படுகின்றது.


- அதிகாரத்தினால் அன்றி மனப்பூர்வமாக நிறுவன ஒழுங்குக்குக் கட்டுப்படும் தன்மை
- முட்டாள் தனமாக நடந்துகொள்வதற்குப் பயப்படுதல்
- சரியான விடையைத் தேடும் முனைப்பு மேலோங்குதல்
- ஆக்கமலர்ச்சி எழுச்சி கொள்ளல்

ஆன்மிக நுண்மதி கூடியோர் கற்றலிலும் வல்லவர்களாக இருப்பர். தவறான செயற்பாடுகளில் இருந்தும் பழக்க வழக்கங்களில் இருந்தும் தம்மை இலகுவாக விடுவித்துக் கொள்வர். தாம் யார் என்பது பற்றிய தெளிவான புலக்காட்சியைப் பெற்றுக்கொள்வர். ***உயர் கல்விமான்கள், நல்லாசிரியர்கள், கலைஞர்கள் முதலியோரிடத்து உயர்வான ஆன்மிக நுண்மதி காணப்படும் என்ற கருத்து*** முன்வைக்கப்படுகின்றது. கற்பதற்கும், தொழிற்படுவதற்குமுரிய இங்கிதமான சூழலை அவர்கள் தமக்குத் தாமே உருவாக்கிக் கொள்வர்.

ஆன்மிக நுண்மதியை வளர்த்துக்கொள்ளலும், இடைவிடாது தொடர்ந்து கற்றலும் இன்று அனைத்து நிறுவனங்களுக்குமுரிய தேவைகளாக வலியுறுத்தப் படுகின்றன. இலண்டன் பொருளியற் கல்விக்கூடம் (LSE) ***"உங்களுக்காகக் கற்றுக்கொள்ளல்"*** *(Learn For You)* என்பதை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்பிள் கணினிக் கம்பனி பிறிதொரு செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. அங்கு பணிபுரிவோர் ஒவ்வொருவரும் தமது உள்ளுணர்வையும் ஆக்கமலர்ச்சியையும் மேம்படுத்திக் கொள்வதற்கு நாள் ஒன்றுக்கு முப்பது நிமிடங்கள் ***"மௌன அறையை"ப்*** பயன்படுத்துமாறு விடப்படுகின்றனர். அதனூடாக அவர்கள் உயர்நிலையான உற்றுணர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்தக் கம்பனி கருதுகின்றது.


சில உற்பத்தி நிறுவனங்கள் ஆன்மிக ஆளுமை கொண்டவர்களை தமது நிறுவனங்களுக்கு வரவழைத்து பிரச்சினைகளுக்குரிய தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்த வேளை அவர்கள் பெற்றுக் கொள்ளும் லீவு குறைவடைந்தும் வருகை அதிகரித்தும் வருதல் கண்டறியப்பட்டுள்ளது. இதன் விரிவை குக் என்பாரும் வேறு இருவரும் இணைந்து எழுதிய நூலிற் *(Cook, 2005, p.88)* கண்டுகொள்ளலாம்.



பின்வருவனவற்றை அடியொற்றி ஒருவரிடத்து உட்பொதிந்த ஆன்மிக நுண்மதியை அறிந்துகொள்ள முடியும்.


- பிறரின் சிந்தனைகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்தல்.
- தாம் தவறு செய்யும்பொழுது மூடிமறைக்காது ஏற்றுக்கொள்ளல்.
- தாம் எங்கே செல்ல வேண்டும் என்பது பற்றிய தெளிவான தூரநோக்கு இருத்தல்.
- பிறரிடத்துக் காணப்படும் வேறுபாடுகளையும் பன்முகப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளல்.
- தமது மட்டுப்பாடுகளைக் கண்டறியும் திறன்.
- உணர்வுகள் சாதகமாக இல்லாவிடிலும் இணங்கிச் சரி செய்துகொள்ளும் நிலை.
- பிறரின் நன்மை கருதிய வினைப்பாடுகளை தாம் மேற்கொள்ளல்.
- வாழ்க்கையின் அர்த்தத்தையும் இலக்கையும் புரிந்துகொள்ளல்.
- மற்றவர்களை நேர்நிலையிலே சிந்திக்கத் தூண்டுவதாக தமது வினைப்பாடுகள் அமைதல்.
- தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு உதவும் உளப்பாங்கு.
- மற்றவர் தவறு செய்யும் பொழுது மன்னித்து விடுதல்.
- தம்மைப் பற்றிய உண்மைகளைப் பிறர் சொல்லாமலே உணர்ந்துகொள்ளல்.
- சம்பவங்களை அவற்றின் பொருண்மையை விளங்கிக்கொள்ளும் வண்ணம் பெரிய சூழமைவுடன் இணைத்தல்.
- தம்மிடமுள்ள ஆழ்ந்த ஊக்கல்களை விளங்கிக் கொள்ளல்.
- தமது பலத்தையும் பலவீனத்தையும் விளங்கிக் கொள்ளல்.
- நம்பிக்கையுடன் வாழ்க்கையிலே தொழிற்படல்.
- உயர் விழுமியங்களுடன் தொடர்ச்சி குன்றாது தொழிற்படல்.
- உலகிற் பிறந்தமை பற்றிய தெளிவான நோக்கைக் கொண்டிருத்தல்.
- எப்பொழுதும் கருணை உள்ளத்தோடு தொழிற்படுதல்.
- மட்டுப்பாடுகளை நோக்காது தம்மையும் பிறரையும் நேசித்தல்.

நுண்மதி என்ற உளவியல் தளத்தில் *ஆன்மிக வளத்தைக் (Spiritual Resource)* கொண்டு சென்று ஆன்மிக நுண்மதியை உருவாக்கியமை நவீன பொருண்மிய உலகின் தவிர்க்க முடியாத தேவையாகிவிட்டது. கல்வி நிறுவனங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் மேற்கிளம்பும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கும் விளைதிறன்களை அதிகரிப்பதற்கும் ஆளுமையை மறுபரிசீலனை செய்வதற்கும் ஆன்மிக நுண்மதியாற்றல் எடுத்தாளப்படுகின்றது.



ஆர்.லோகேஸ்வரன்

# மனவெழுச்சிகளை முறைப்படுத்தலில் ஆசிரியரின் பங்கு



பெற்றோர்களும், கல்வியியலாளர்களும் தற்போது முன்பில்லாத வகையில் மாறுபட்ட நோக்கத்தில் கல்வியைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். கல்வியின் மூலம் பிள்ளைகள் தமது எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் நிலையை உருவாக்க வேண்டும் என்றும், சமூகத்தில் காணப்படும் விரும்பத்தகாத நிகழ்வுகள் இதன் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்றும் பன்முகக் கருத்துக்களை மிக வலுவாக முன்வைக்க ஆரம்பித்துள்ளனர். இதற்கு அடிப்படை இன்றைய சமூகத்தில் ஏற்பட்டு வரும் சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களால் மாணவர் சமூகம் என்றும் இல்லாத வகையில் மன அழுத்தங்களுக்கும், மனகுலைவுகளுக்கும் உட்பட்டு வாழ தலைப்பட்டமையே ஆகும். மாணவர்களிடையே கடந்த சில காலங்களாக தற்கொலைகளும், தற்கொலைக்கான முயற்சிகளும், போராட்ட செயல்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இதனால் இன்று அறிவாற்றல் என்பதற்கு மேலாக மாணவரிடையே வாழ்க்கையில் முறையாக முன்னேற்றம் அடைவதற்கான திறன்களையும், நல்ல மனப்பாங்குகளையும் வளர்ப்பதற்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவே பாடசாலைக் கலைத்திட்டத்தில் மனவெழுச்சி தொடர்பான கல்வியை வழங்க வேண்டியதன் அவசியத்தையும், மனவெழுச்சி கல்வியூடாக ஆக்க சிந்தனையுடன், தனது மனவெழுச்சிகளையும், பிறரது மனவெழுச்சிகளையும் நோக்கி செயற்பட பயிற்றுவிக்க வேண்டிய தேவையையும் உணரச் செய்துள்ளது.

இவ்வாறு மனவெழுச்சிக் கல்வியின் அவசியம் பற்றி அதிகம் உணரப்பட்டதால் பல உளவியலாளர்கள் தற்போது இது பற்றி பல பரிமாணங்களில் சிந்திக்கத் தொடங்கியுள்ளதையும், அது தொடர்பான கருத்துக்களை எடுத்துரைப்பதையும், பல கருத்தாடல்களை மேற்கொள்வதையும் காண முடிகிறது. இதில் ஹாவார்ட் கன்டகர் *(Howard Handger)*, டேனியல் கோல்மேன், ஹேவார்ட் கார்டினர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

ஹாவார்ட் கன்டகர் *(Howard Gandger, 1983)* என்பவரே மாணவர்கள் தமது வாழ்க்கையில் முறையாக

முன்னேற வாய்ப்பளித்தல் இன்றியமையாததாக உள்ளது என்றும் இதற்கு பாடசாலைகளில் மனவெழுச்சிசார் கல்வியை சில பாடங்களினூடாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் முதன் முதலிலே எடுத்துரைத்தவராகும். இவரைத் தொடர்ந்து டேனியல் கோல்மேன் என்பவர் தன்னுடைய உணர்வுகளையும், பிறருடைய உணர்வுகளையும் அறிந்து அவற்றை சமாளிப்பதோடு நம்மையும் ஊக்குவித்து நமக்குள்ளே இணக்கமான தொடர்புகளை உருவாக்கிக்கொள்ளும் திறனை பிள்ளைகள் பாடசாலைக் கல்வி மூலமே வளர்த்துக்கொள்ள வழிசெய்ய வேண்டும் என்பதை வெளிப்படுத்தினார். இவர் மேலும் மனவெழுச்சிகளை முறைப்படுத்தி சூழ்நிலைக்கேற்ப செயற்படும் திறன்களை பாடசாலைகளிலேயே பிள்ளைகளுக்கு வளர்க்கப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து ஹேவார்ட் கார்டினர் என்பார் இன்று பொதுவாக நுண்ணறிவு அதிகம் பெற்றவர்கள் கூட தம் வாழ்க்கையில் செயல்பட முடியாது தோல்வி அடைகின்றனர். இதற்கு அடிப்படையான காரணம் மனவெழுச்சிசார் நுண்மதி இன்மையே என்பதை தனது ஆய்வுகள் மூலம் எடுத்துக்காட்டியதுடன் பாடசாலைகளானது மனவெழுச்சிசார் நுண்மதியை வளர்க்க உதவ வேண்டும் என்பதை மிக தெளிவாக முன்வைத்தார்.

**முதலில் மனவெழுச்சி என்னும்போது "ஓர் உயிரி யின் உள்ளும், புறமும் ஏற்படும் உணர்வுசார்ந்த மாற்றம்" அல்லது "ஓர் உயிரியின் கிளர்ச்சியுற்ற நிலை" என வரை யறுக்கலாம்.**


இவ்வாறான உளவியலாளர்களால் பாடசாலைகளில் மனவெழுச்சிசார் கல்வியின் அவசியம் பற்றியும், மனவெழுச்சிகளை முறைப்படுத்தலின் இன்றியமையாமை பற்றியும் எடுத்துரைக்கப்பட்ட போதும் அவை எந்த அளவு பாட்சாலைக் கல்வி முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது வினாவாகவே உள்ளது. எனவே இங்கு பாடசாலைகளில் மாணவர் மனவெழுச்சிகளை எவ்வாறு வெளிப்படுத்த முனைகின்றனர்? அவற்றைத் (பொருத்தமற்றவற்றை) தடுத்து முறைப்படுத்த ஆசிரியர் ஆற்ற வேண்டியவை யாவை? என்பன பற்றியே எடுத்தாராயப்படுகின்றது.

முதலில் மனவெழுச்சி என்னும்போது "ஓர் உயிரியின் உள்ளும், புறமும் ஏற்படும் உணர்வுசார்ந்த மாற்றம்" அல்லது "ஓர் உயிரியின் கிளர்ச்சியுற்ற நிலை" என வரையறுக்கலாம். *P.J.Young* என்ற உளவியலாளர் மனவெழுச்சி என்பது உடலில் உள்ள நரம்புத் தொகுதிகளில் ஏற்படும் மாற்றங்களாலும், ஹோர்மண்களின் செயற்பாட்டாலும் நிகழ்கிறது என்றும் இவை சில மெய்ப்பாடுகளால் வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் விளக்கமளிக்கின்றார். பிரட்ஜஸ் என்பவர் உடலையும் மனதையும் கிளர்ச்சி அடையச் செய்யும் நிலையே *(Emotion is the stirred up state of the organism)* மனவெழுச்சி என்றும் இம் மனவெழுச்சி வெளிப்பாட்டின்போது மனவெழுச்சி - மனவெழுச்சியின்மை, கவனித்தல்- கவனிக்க முடியாமை, செயலாற்றல் - செயலுறுநிலை என ஏதேனும் இரு முனைப்பட்ட உணர்வுகளுக்கு உட்படலால் என்பதையும் தனது ஆய்வுகள் மூலம் முன்வைத்தார். இவ் உளவியலாளர்களின் வரையறைகளை வைத்து நோக்கும் போது ஒரு உயிரியின் உணர்வு சார்ந்த மாற்றமே அல்லது மனதை கிளர்ச்சியடையச் செய்யும் நிலையே மனவெழுச்சியாகும்.

மனவெழுச்சிகளை உளவியலாளர்கள் அடிப்படை மனவெழுச்சி/ஆரம்பநிலை மனவெழுச்சி *Primary or Basic Emotions* என்றும் சிக்கலான/ முதிர்ச்சிநிலை மனவெழுச்சி *Complex or Secondary Emotions* என்றும் இரு வகையாக வேறுபடுத்தி காட்டியுள்ளனர். இதில் பிள்ளைகள் தமது வளர்ச்சிப் பருவங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் தமது மனவெழுச்சிகளை தாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு வெளிப்படுத்தினாலும் குழந்தைப் பருவத்தில் இவற்றை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத வர்களாகவே பெரும்பாலும் செயற்படுகின்றனர். ஆனாலும் அக்குழந்தைகள் பிள்ளைப் பருவத்தை அடையும் போது அவற்றை ஓரளவேனும் கட்டுப்படுத்த பழகிக் கொள்கின்றனர். அக்குழந்தைகள் கட்டிளமைப் பருவத்தை தாண்டும்போது தாம் பெற்றுக்கொண்ட பயிற்சியினாலும், கற்றலினாலும் மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தி மடைமாற்றி தனக்கும், சமூகத்துக்கும் பயன்படும் வகையில் வெளிப்படுத்த பழகிக்கொள்கின்றனர்.

இவ்வாறாக பிள்ளைகள் தமது வாழ்வில் மனவெழுச்சிகளை முறைப்படுத்தி வாழ முனைந்தபோதும் சில சந்தர்ப்பங்களில் தம்மை அறியாமலே தமது கட்டுப்பாட்டை மீறி அவற்றை வெளிப்படுத்தி விடுகின்றனர். குறிப்பாக பாடசாலையிலும், பாடசாலைப் புறச் சூழலிலும் மற்றவர்களிடம் சண்டித்தனம் காட்டுதல், சிறிய விடயங்களுக்கும் தீவிர உணர்வை வெளிப்படுத்துதல், அமைதியற்ற முறையில் நடந்துக்கொள்ளல், பதட்டமடைதல், பொருத்தமற்ற முறையில் அழுதல், வன்முறைகளில் ஈடுபடல், எதிர்த்துப் பேசுதல், ஒதுங்கிப் போதல், ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடுதல், வீண் அச்சம் கொள்ளுதல், அதிகமாக கவலையை வெளிப்படுத்தல், கூச்சப்படுதல், அளவுகடந்த அமைதியுடன் செயற்படுதல், அளவுகடந்த பணிவுக் காட்டுதல், அடிக்கடி மனதாக்கத்துக்குட்படுதல், தம்மை தாமே கொடுமைக்குள்ளாக்குதல் போன்ற உடல் ரீதியான/ உளரீதியான செயல்களால் வெளிப்படுத்துகின்றனர்.

மேற்கூறியவாறு தமது மனவெழுச்சிகளை அல்லது மனவுணர்வுகளை முறைப்படுத்திக்கொள்ள முடியாமல்



அவற்றை வெளிப்படுத்த சில சந்தர்ப்பங்களில் அதற்கான பயிற்சியை வழங்க வேண்டிய ஆசிரியர்களே காரணமாக அமைந்துவிடுகின்றனர். குறிப்பாக பாடசாலைகளில்,

- பிள்ளைகளின் திறனுக்கு ஒவ்வாத வகையில் அவர்களை வெற்றிப்பெற தூண்டுவது,
- வகுப்பறையில் ஒரு பிள்ளையை வேறு பிள்ளைகளோடு ஒப்பிட்டு காட்டுவது,
- பாடசாலையிலும், வகுப்பறையிலும் அதிக கட்டுப்பாடு அல்லது கட்டுப்பாடு அற்ற சூழலை நடைமுறைப்படுத்துவது,
- ஆசிரியரிடம் பிள்ளை எதிர்பார்க்கும் அன்பு கிடைக்காமலிருப்பது,
- பிள்ளைகளுக்கு பாடசாலையில் சமவயது குழுவில் அங்கத்துவம் கிடைக்காமல் தடுப்பது,
- பாடசாலையிலும், வீட்டிலும் அதிக வேலையை *(Home Work)* பிள்ளைகளுக்கு வழங்குவது,
- பிள்ளைகளின் ஆற்றல், நுண்ணறிவு, ஆக்கத்திறன் என்பவற்றுக்கு ஏற்ப செயற்பட வகுப்பறையிலும், பாடசாலையிலும் சந்தர்ப்பம் வழங்காமலிருப்பது,
- மரபுரீதியாக, உடல்ரீதியாக ஏதேனும் குறைபாடுகளைக் கொண்டிருப்பினும் அவற்றை கவனத்தில் கொள்ளாமல் பிள்ளைகளை ஒரே வகையில் நடத்துவது,
- பிள்ளைகளை ஆசிரியர் ஏனையோர் முன் அடிக்கடி மனம் புண்படும்படி பேசுவது,
- பாடசாலையிலும், வகுப்பறையிலும் பிள்ளைகளுக்கிடையே பாரபட்சம் காட்டுவது,
- பிள்ளைகளை பிறர் எதிரில் இகழ்ந்து பேசுவது
- பிள்ளைகளிடம் இருக்கும் குறைபாடுகளை அடிக்கடி சுட்டிக்காட்டுவது,
- பாடசாலையில் / வகுப்பறையில் ஆசிரியர் கடுமையான போக்குடன் செயற்படுவது,
- பிள்ளைகளுக்கு தீவிர வெறுப்பு அல்லது வேதனை உண்டாக்கும் வகையில் தண்டனை வழங்குவது,

போன்றவற்றை விசேடமாகக் குறிப்பிடலாம்.


ஆனால் இதற்கு மாறாகப் பிள்ளைகள் வெளிப்படுத்தும் பொருத்தமற்ற நடத்தைகளையும், அதற்கான காரணங்களையும் களையச் செய்து அல்லது மாற்றியமைத்து சிறந்த உயர்வான மானிட வாழ்க்கை மேம்பாட்டிற்கு காரணமாக அமையும் மனவெழுச்சி வெளிப்பாடுகளை முறைப்படுத்தி வாழ பயிற்றுவிப்பது ஆசிரியர்களின் மிக முக்கிய பணியாக இன்று கருதப்படுகின்றது. இதற்கு பிள்ளைகள் தமது உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் முறைப்படுத்தி வாழும் திறனை வளர்ப்பதுடன், மனவெழுச்சிப் போராட்டம் எழாவண்ணமும் எதிர்மறை மனவெழுச்சிகள் தோன்றா வண்ணமும் தடுத்து அவர்களிடம் மனவெழுச்சி சமநிலை எய்த உதவுவது ஆசிரியரின் கடமையாகும். இதற்கு மாணவர்களை,

- தவறாது இணைப்பாட செயல்களில் பங்குபற்ற செய்தல்.
- ஆக்க செயல்களில் (வரைதல், கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல்) அதிகம் ஈடுபடுத்தல்.
- பாடவேளைகளில் திட்டமிட்ட விளையாட்டுக்களை ஏற்பாடு செய்து ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து விளையாட சந்தர்ப்பம் வழங்குதல்.
- உடல், உள சார் பயிற்சிகளில் ஈடுபட வாய்ப்பு வழங்குதல் (யோகா/தியானம்).
- கலை மற்றும் தொழில்நுட்ப துறை சார்ந்த பயிற்சிகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குதல்.
- தினசரி கூட்டு வழிபாடுகள், நற்சிந்தனை கூறல் போன்ற நிகழ்வுகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- நல்ல இசை, நடனம், ஓவியம் போன்ற நுண்கலை செயல்களில் ஈடுபடுத்துதல்,
- நல்ல காட்சிகளை இரசிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்தல்.
- சாரணர் இயக்கம், செஞ்சிலுவை சங்கம் போன்ற சமூக சேவை இயக்கங்களில் இணைந்து செயற்பட தூண்டுதல்.
- பாடசாலையில் நன்னெறி வகுப்புக்களை *(Moral Instruction Classes)* ஏற்பாடு செய்து அதில் பங்கு பற்ற வாய்ப்பளித்தல்.
- கதைகள், பாட்டுக்கள் (வீரகதைகள், சுயசரிதைகள்) என்பவற்றின் மூலம் பொருத்தமற்ற மனவெழுச்சி வெளிப்பாடுகளால் ஏற்படக்கூடிய தீமைகளை எடுத்துக்கூறுதல்.
- உலகில் சிறந்த தலைவர்களின் வாழ்க்கை நிகழ்ச் சிகளை அவ்வப்போது எடுத்துக்காட்டுதல் (புத்தர், இயேசுநாதர், காந்தியடிகள், அன்னை திரேசா)
- பிள்ளைகளிடம் நகைச்சுவை உணர்வு வளர உதவுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் மனவெழுச்சிகளை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துக்கூறுதல்.
- பிள்ளைகள் தாம் விரும்பும் (சமூகத்துக்கு பொருத் தமான) செயல்களில் ஈடுபட சந்தர்ப்பமளித்தல். (சிரமதான பணிகள்/ முதியோருக்கு உதவுதல்/ ஆலய தொண்டுகள் புரிதல்)
- வகுப்பறையில் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கற்றல் நடவடிக்கைகளின்போது தீவிர மன வெழுச்சி வெளிப்பாடுகளால் ஏற்படும் பாதிப்பு களை அவ்வப்போது எடுத்துக்கூறுதல்.
- பிள்ளைகளுடன் நல்ல இடைத் தொடர்புகள் எப் போதும் ஏற்படுத்திக் கொள்ளல் (நல்வாழ்வுக்கு உதவும் வகையில்)
- பிள்ளைகள் குழுவாக இணைந்து செயற்பட / பணி களை செய்ய அதிக சந்தர்ப்பம் வழங்குதல்.

போன்ற பாட, பாடப்புற செயல்களில் பங்குபெற சந்தர்ப் பங்களை உருவாக்கிக் கொடுப்பது மிக அவசியமான தாகும்.

இவ்வாறான செயல்களூடாக பிள்ளைகளின் மனவெழுச்சிகளை முறைப்படுத்தி பிள்ளைகளின் எதிர் கால நல்வாழ்வுக்கான ஆளுமைப் பண்புகளையும், மன வெழுச்சிசார் முதிர்ச்சியையும் பெற்று வாழ உதவுவதுடன் தாமும் அதில் முன் மாதிரியாக நடந்துகொள்ள வேண்டி யது ஆசிரியரின் பொறுப்புகளில் அடிப்படையானதா கும். மாறாக ஆசிரியர் பிள்ளைகளின் மனவெழுச்சிகளை



அளவுமீறிக் கட்டுப்படுத்த முயற்சி செய்வாறாயின் அது அவர்களிடம் பெரும் பாதிப்பினை ஏற்படுத்திவிடும். அது மாத்திர மன்றி அது பிள்ளைகளின் நனவிலி மனதில் ஒடுக்கப் பட்டு, மறைந்து கிடந்து பின்னர் வேகத்துடன் வெளிவரத் தொடங்கி அவர்களை பிழையான/ பொருத் தமற்ற நடத்தை கொண்டவர்களாக வழிப்படுத்தி விடும். எனவே மாணவர்களின் தேவைகளை மதித்து, பொறுப்புகளை வழங்கி, தனித்தன்மையைப் புரிந்து, உணர்வுகளை மதித்து, அவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகளை முறைப்படுத்தி செயற்பட செய்வதன் ஊடாக அவர்களை எதிர்காலத்தில் மகிழ்ச்சிகரமாக வாழ வழிப்படுத்துவது ஆசிரியர்களின் கடமைகளுள் முக்கியமானதாகும்.

ஆனால் இன்று ஆசிரியர்கள் தமது கடமைகளை கற்றல் - கற்பித்தலோடு மட்டுமே மட்டுப்படுத்திக் கொள்வதுடன், பிள்ளைகளின் அறிவாற்றல் விருத்திக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்பது பொதுவான விமர்சனத்துக்கு உட்பட்ட விடயமாக உள்ளது. ஆகவே ஆசிரியர்கள் தமது இந்நிலையில் மாற் றத்தை ஏற்படுத்திக் கொள்வதோடு தமது பிள்ளைகள் அறிவாற்றலோடு நல்ல மனநலத்துடன் எதிர்காலத்தில் மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வாழ நெறிப்படுத்த வேண்டியது அவர்களின் முன்னுள்ள முக்கிய கடமை களுள் ஒன்றாகும் என்பதை மனதில் கொண்டு செயற் பட வேண்டும்.

இவ்வாறாக பிள்ளைகளின் மனவெழுச்சிகளை முறைப்படுத்தி செயற்படும் ஆசிரியர் தாமும் மனவெழுச்சி முதிர்ச்சியுடையவராக, நல்ல ஆளுமைப் பண்புகளைக் கொண்டவராக வாழ முடியும் என்பதோடு அது அவர்க ளின் வாழ்வின் வெற்றிக்கு அடித்தளமாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ந.அனந்தராஜா




# பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

**பாடசாலைகளின் விளைதிறனை அதிகரிக்கும் பாடசர்லை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

"என்ன சேர்!... PSI அப்படியே தூங்கிக் கிடக்குது..... நீங்கள் தந்த PSI பயிற்சிக்குப் பிறகு ஒன்றையும் காண வில்லை" அலுவலகத்தில் இருந்து வீட்டை நோக்கித் திரும்பிக் கொண் டிருந்த பொழுது, வழியில் இடை மறித்த ஒரு பாடசாலை அதிபரின் இந்த வார்த்தைகளால் அதிர்ந்து போய் அவரை ஏற இறங்கப் பார்த் தேன். நான் அப்படி அவரைப் பார்த் ததும் எனது நிலையைப் புரிந்திருக்க வேண்டும். தன்னை ஒரு மாதிரிச் சுதாகரித்துக் கொண்டு,

" PSI பற்றி நிறையப் படித்து விட்டோம். நல்ல விடயம் தான், ஆனால் அதற்குப் பிறகு நிதி ஒன்றும் அனுப்பவில்லை அதுதான் உங்க ளைக் கேட்டுப் பார்ப்போம் என்று...." அவர் வார்த்தைகளை இழுத்துக் கொண்டே சென்றார். அந்த அதிபரின் ஆதங்கம் அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது.



பாடசாலை மேம்பாட்டுத் திட் டம் என்று தமிழிலும் *"Programme on School Improvement"* என்று ஆங்கிலத்திலும் அதனைச் சுருக்க மாக PSI என்ற சுருக்கக் குறியீட்டி னாலும் குறித்துக் காட்டப்பட்டு இன்று எல்லோருடைய மனதிலும் ஆழப் பதிந்துவிட்டது. பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாக பல்வேறு செயலமர்வுகளும் கலந்து ரையாடல்களும் வலயம், மாகாணம் மற்றும் இடைநிலைக் கல்வி நவீன மயப்படுத்தல் செயல்திட்டம் *(SEMP)* என்று அழைக்கப்பட்டு தற்பொழுது கல்வி அறிவுசார் சமூக மயப்படுத் தல் செயல்திட்டம் *(EKSP)* என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இப் பிரிவின் வளவாளர்களாலும் பல கையேடுகளும் கைந்நூல்களும் வழங்கப்பட்டு தொடர் செயலமர்வுக ளினூடாக அதிபர்கள், பிரதி அதிபர் கள், பகுதித் தலைவர்கள், சேவைக் கால ஆலோசகர்கள் எனப் பல்வேறு தரப்பினர்களும் அறிவூட்டப்பட்டு வலுவூட்டப்பட்ட நிலையில் *PSI* பற்றிய தெளிவையும் அதன் குறிக் கோள்களையும் அறியாத நிலையில் அவர் இப்படி ஒரு சந்தேகத்தை எழுப்பியதும் எனக்கு அதிர்ச்சி தான் ஏற்பட்டது.

பொதுவாக செயலமர்வுகளில் பங்கு பற்றித் தமது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் "கொடுப்பனவுகளை" எதிர்பார்த்து தமது வினைத்திறனை அதிகரித்துக்கொள்ள முன்வராத ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்கும் அரச கொள்கைகளின் கீழ் பழக்கப்பட்டு வரும் எங்களால் அதிலிருந்து மீண்டெழுவதற்கும் கூட இன்னும் சில காலம் தேவையோ என்னவோ!...

**பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் என்பது ஒவ்வொரு பாடசாலையிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சித் திட்டமே ஒழிய மாறாக அது ஒரு செயல்திட்டமல்ல என்பதை அதிபர்கள் தொடக்கம் கல்வியாளர்கள் வரை புரிந்துகொள்ள வேண்டும்.**

எது எப்படி இருந்தாலும் PSI என்பது இன்று கல்விச் செயற்பாடுகளுடன் ஒன்றித்துப் போய்விட்டது. இனி எதிர்காலத்தில் பாடசாலைக் கல்வி அபிவிருத்தி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் இருந்து பிரித்துவிட முடியாது என்பதற்கு பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. PSI என்ற அந்தக் கருத்துருவாக்கம் இன்று நாடளாவிய ரீதியில் கல்விச் சமூகத்தின் உதடுகளில் மட்டுமல்லாது பதவி உயர்வுக்கான போட்டித் தேர்வுகளிலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இதிலிருந்து "பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" பற்றி ஒரு ஆசிரியரோ அல்லது அதிபரோ அல்லது கல்வி அதிகாரியோ அறியாது இருப்பது என்பது சாதாரணமாக எழுத வாசிக்கத் தெரியாதவர்களை "எழுத்தறிவற்றவர்கள்" என்ற வகையினுள் உள்ளடக்குவது போல் இதனையும் அந்த வகையினுள் சேர்க்கலாம். இந்த நிலை உருவாகிவிடும் என்பதால், எதிர்காலத்திலாவது "பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்" பற்றிய கருத்துருவாக்கம் தொடர்பான விழிப்புணர்வு சமூக மட்டத்தில் ஏற்பட வேண்டும்.

இதுவரை காலமும் பாடசாலையை நிர்வகிக்கும் பாரிய பொறுப்பைச் சுமந்து பாடசாலை என்ற ஒரு நிறுவனத்தை ஆளணி பற்றாக்குறைகளின் மத்தியிலும் நிர்வகித்து வரும் அதிபர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமே இருந்து வந்துள்ளது. சேவைக்கால ஆசிரிய ஆலோசகரில் இருந்து உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் வரை தட்டிக்கேட்டுத் தமது கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்திருக்க முயற்சித்து வருகின்றனர். இதனால் அதிபர்களால் சுயாதீனமாக தீர்மானம் எடுத்தல், அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றில் காலதாமதமும், பல நல்ல விடயங்களைக்கூட செயற்படுத்தப்பட முடியாத வகையில் அதிபர்களின் கரங்கள் பணிக்குழு ஆட்சி அமைப்பினுள் இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதனை உலக வங்கியின் ஆய்வு முடிவுகள் எடுத்துக் காட்டியதன் அடிப்படையில் இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தற்பொழுது பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் 2006ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் என்றால் என்ன?**

**"மத்திய அமைச்சின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை ஒவ்வொரு பாடசாலைக்கும் கையளித்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலையைக் கொண்டு நடத்துவதற்கு பொறுப்புக்களையும் அதிகாரத்தையும் அதன் பயனாளிகளிடம் ஒப்படைத்தல் என்பவற்றுக்கான உத்திகளாகும்"**

இந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில், PSI என்பது அதிபர்களுக்கு முழுமையான அதிகாரத்தை வழங்கியுள்ளதுடன் வகை கூறவேண்டிய பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையின் எழுச்சிக்கோ அல்லது வீழ்ச்சிக்கோ பொறுப்புக் கூறவேண்டியவர்களும் அதிபர்கள் தான்.

பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் என்பது ஒவ்வொரு பாடசாலையிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சித் திட்டமே ஒழிய மாறாக அது ஒரு செயல்திட்டமல்ல என்பதை அதிபர்கள் தொடக்கம் கல்வியாளர்கள் வரை புரிந்துகொள்ள வேண்டும்.

**பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் குறிக்கோள்கள்:**

- மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குதல்.
- பாடசாலை முகாமைத்துவச் செயன்முறையில் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல். இதற்கமைய பாடசாலையின் சகல செயற்பாடுகளும் குறிப்பாக நிதி தொடர்பான விடயங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் போன்ற பாடசாலை தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளும் பாடசாலையின் அனைத்துத் தரப்பினருக்கும் வெளிப்படையாகத் தெரியப்படுத்துதல் வேண்டும். எடுத்துக்காட்டாக பாடசாலைக்கு வழங்கப்படுகின்ற தர உள்ளீட்டு நிதி தொடர்பான முழுமையான விபரங்கள் ஒவ்வொரு பெற்றாருக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும். அவற்றைப் பற்றி ஒவ்வொரு பெற்றாரும் அறிய விரும்புவது அவர்களது உரிமையாகும்.
- முடிந்தவரை பாடசாலையின் உள்ளகச் செயற்பாடுகளில் நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டுதல். ஒரு அதிபர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறுக்கமான போக்கையே கடைப்பிடிப்பாராயின் தோல்வியடைந்த ஒரு முகாமையாளராக முகவரி இல்லாமலேயே போய்விடுவார். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் விட்டுக்கொடுத்து நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டும் முகாமைத்துவப் பாணியே தற்காலத்திற்குப் பொருத்தமான ஒரு முகாமைத்துவமாக இருக்கும்.

* பாடசாலைச் சமூகத்தின் தேவைகள் மற்றும் எதிர்பார்க்கைகளுக்குக் கூடுதலாக உணர்வுபூர்வமாக இருத்தல் வேண்டும். பாடசாலைச் சமூகத்தை ஒரு அதிபர் முதலில் இனங்காண வேண்டும். முன்னர் பாடசாலையில் கல்வி பயிலுகின்ற பிள்ளைகளின் பெற்றாரே பாடசாலைச் சமூகம் என வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது பாடசாலைகளின் தேவைகளும் குறிக்கோள்களும் பரந்துபட்டவையாக மாறி வருவதால் பாடசாலையுடன் தொடர்புடைய ஒவ்வொருவரையும் உள்ளடக்கியதாக பரந்துபட்ட வகையில் நோக்கப்படுகின்றது. இன்று "பாடசாலைச் சமூகம்" என்ற பதத்திற்குப் பதிலாக "பயனாளிகள்" *(Beneficiary)* என அழைக்கப்படுகின்றனர். **பாடசாலைகளைச் சமூகத்துடன் இணைத்து அபிவிருத்தியை முன்னெடுப்பதில் தொடர்பாளராகவும் அனுசரணையாளராகவும் செயற்பட வேண்டுமானால் அவர்களை எவ்வாறு இனங்காணுவீர்கள்? அவர்களே இன்று "பயனாளிகள்" *(Beneficiary)* என நவீன கல்வியியலாளர்களினால் அழைக்கப்படுகின்றனர்.** அந்த வகையில் பின்வருவோர் பயனாளிகளாக உள்ளனர். அதிபர் ஆசிரியர் மற்றும் ஆளணியினர், மாணவர்கள், பெற்றார், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், சமூகத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வி அலுவலர்கள், பிரதேச அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோரைப் பயனாளிகள் எனலாம்.

* வினைத்திறனைக் கூட்டி பாடசாலையின் விளைதிறனை அதிகரித்தல்.

* பாடசாலையில் ஏற்கனவே உள்ள வளங்களின் உச்சப் பயன்பாட்டினூடாக வினைத்திறனையும் விளைதிறனையும் அதிகரிக்கச் செய்தல்.




### அபிவிருத்தி செய்வதற்காக இனங்காணப்பட்டுள்ள துறைகள்:

பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் இனங்கண்டு ஒரு அதிபர் தனது பாடசாலையில் தனது ஆளணி மற்றும் கிடைக்கின்ற நிதி, பௌதிக, வளங்களை சமூகத்தின் உதவியுடன் வினைத்திறனுடையதாகச் செயற்படுத்துவாராயின் மிகக் குறுகிய காலத்தினுள் பாடசாலையை உன்னதமான நிலைக்குக் கொண்டுவர முடியும் என்பதைப் பல பாடசாலைகளில் PSI நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைபடுத்தப்படத் தொடங்கிய காலத்தினுள் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. அந்த வகையில் பின்வரும் துறைகள் இனங்காணப்பட்டு அபிவிருத்தி செய்வது தொடர்பான பயிற்சிகள் நாட்டில் உள்ள அனைத்து அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

### பாடசாலை மட்டத்தில் திட்டமிடல்
*(Lanning at School Level):*

பாடசாலைகளின் ஒவ்வொரு செயற்பாடுகளின் வெளியீட்டு விளைவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றினூடாக பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகள் இனங்காணப்பட வேண்டும். *(Planning at school level)* அவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அவை ஒவ்வொன்றுக்குமான நடைமுறைப்படுத்தப்படக்கூடிய திட்டங்களை ஆசிரிய ஆளணியினர் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினரின் ஆலோசனையுடன் வகுத்துச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் திட்டங்கள் ஒவ்வொன்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய காலத்தின் அளவு, கிடைக்கின்ற நிதி,ஆளணி மற்றும் அவற்றின் முக்கியத்துவம் அல்லது அவசரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்தாண்டுத் திட்ட மாகவோ அல்லது குறுங்காலத்தினுள் செயற்படுத்தக் கூடிய ஆண்டுத் திட்டங்களாகவோ இருக்கலாம். எப்படி இருந்தாலும் உருவாக்கப்படுகின்ற ஒவ்வொரு திட்டமும் சுட்டிப்பானவையாக அல்லது குறிப்பானவையாக *(Specific)*, அளவிடக்கூடியதாக *(Measurable)*, அடையக் கூடியதாக *(Achievable)*, பொருத்தமானதாக அல்லது யதார்த்தமானதாக *(Reliable or Reality)* அதேவேளை குறித்த கால எல்லைக்குள் *(Timeliness)* நிறைவேற்றக்கூடியதாக



இருத்தல் வேண்டும். இதனையே திட்டமிடல் முகாமைத்துவத்தில் ***SMART*** என்ற சுருக்கக் குறியீட்டில் அழைப்பர்.

**பாடசாலை முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும்**
*(School management and organization)*

பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆரம்பத்தில் வைக்கப்பட்ட பெயர் பாடசாலை மட்ட முகாமைத்துவம் *(School Based Management) (SBM)* என்பதாகும். ஆனால் சில காரணங்களின் அடிப்படையில் அந்தப் பெயரை மாற்றி இலங்கைக்குப் பொருத்தமாக அமையக்கூடிய வகையில் "பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்" என்ற பெயருடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த இரு நிகழ்ச்சித் திட்டமும் ஒரே குறிக்கோளையே கொண்டிருக்கின்றது. இதனூடாக பாடசாலை என்ற நிறுவனத்தின் முதனிலை முகாமையாளராக விளங்கும் அதிபர்களை வினைத்திறனுடையவர்களாக்குதலையே முக்கிய நோக்கமாகக் கொண்டது. பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக ஒரு அதிபர் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் அவருடைய முகாமைத்துவத்திறன் வினைத்திறனுடையதாக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் பாடசாலையின் முகாமைத்துவக் கட்டமைப்பு ஒரு சீரான ஒழுங்கிற்குள் கொண்டு வரப்படும்.

**தலைமைத்துவப் பண்புகள்** *(Leadership qualities)*

இன்றைய இளைஞர்களாக இருக்கின்ற மாணவர்கள்தான் நாளைய பிரஜைகளாக இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியவர்கள். ஆதலால் அவர்களைச் சமூகத்திற்குப் பொருத்தமானவர்களாக மாற்றவேண்டிய பொறுப்பு பாடசாலைகளிலேயே தங்கியுள்ளது. இதற்காக சிறந்த தலைமைத்துவப் பயிற்சியை வழங்குவதனூடாக அவர்களிடையே சிறந்த பண்புகளை வளர்த்தெடுத்தல் வேண்டும். மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்தக்கூடிய வகையில் வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். மாணவர்களிடம் சில பொறுப்புக்களையும் கடமைகளையும் வழங்கி அவர்களை நெறிப்படுத்திவரும் பொழுது அவர்களிடையே நல்ல மனப்பாங்குகள் வளர்ந்து மேலோங்குவதை அனுபவவாயிலாகக் கண்டுகொள்ளலாம். வளரும் பிள்ளைகளிடையே பெரியவர்களாகிய நாங்கள் நற்பண்புகளை உரிய காலத்தில் வளர்க்க நடவடிக்கை எடுக்காது இருந்துவிட்டு, "இந்தக் காலப் பெடியள் சரியான குளப்படி" என்று சொல்லிச் சொல்லியே அவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கின்ற ஒரு நிலையையே இன்று பல பாடசாலைகளிலும் வீடுகளிலும் காணமுடிகின்றது. பாடசாலைகளில் மாணவர் தலைவர் *(School prefect)* முறையை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கான பொருத்தமான தலைமைத்துவப் பயிற்சியையும் வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக சாரணியம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு, கடற்சாரணியம், *(Sea Scouts)* கடேற்பிரிவு போன்றவற்றையும் பாடசாலை இன்னியவாத்திய அணி, சுகாதாரக் குழுக்கள், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கள், நூலக வாசிப்பு வட்டம் போன்ற பல்வேறு குழுக்களை அமைத்து மாணவர்களிடையே பொறுப்புணர்வை வளர்ப்பதற்கு பாடசாலைகள் களம் அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

**பாடசாலைச் சமூக உறவு நிலை பேணல்**
*(School-community Relationship)*

பாடசாலைக்கும் அது சார்ந்த சமூகத்திற்கும் இடையிலான உறவு என்பது மலரும் மணமும் போல் பிரிக்க முடியாத ஒன்றாக உள்ளது. ஒரு அதிபர் இன்று இருப்பார். நாளை சந்தர்ப்பம் கிடைத்தால் வேறொரு பாடசாலைக்குப் போய்விடுவார். பின்னர் நாளை வேறு ஒருவர் புதிதாக வருவார். ஆனால் யார் வந்தாலும் யார் போனாலும் அந்தப் பாடசாலைச் சமூகம் மட்டும் எங்கும் போய் விடாது. எனவே பாடசாலையுடனான சமூகத்தின் உறவையும் உரிமத்தையும் எவராலும் பிரித்துவிட முடியாது. பாடசாலையின் உரிமம் *(Ownership)* என்பது அவர்களுக்கே உரியது என்பதை ஒவ்வொரு அதிபரும் உணர்ந்து அவர்களுடனான நல்லுறவைப் பேணி வருவதுடன், அவர்களுக்கு வழங்க வேண்டிய முக்கியத்துவத்தையும் அளித்தல் வேண்டும். பாடசாலை நடவடிக்கைகளில் பாடசாலைச் சமூகத்தைப் புறந்தள்ளி வைத்துவிட்டு, ஒரு அதிபரால் வெற்றிகரமான முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த முடியாது. ஏனெனில் அந்தச் சமூகம் வாழும் கிராமத்தின் குறிகாட்டியான "பாடசாலையின்" வளர்ச்சியில் பெருமிதம் அடைபவர்களும் அவர்களாகவேதான் இருப்பர்.

பாடசாலை ஒன்றின் காப்பரண்களாக விளங்கும் பெற்றார் பழைய மாணவர்களை உள்ளடக்கிய சமூகத்தின் எதிர்பார்க்கைகளை பாடசாலையானது

நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். பாடசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் பெற்றார் மற்றும் சமூக உறுப்பினர்களும் பங்குபற்றக்கூடிய வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை அதிபர்கள் ஒழுங்கு செய்து நடைமுறைப் படுத்த வேண்டும். உதாரணமாக பாடசாலை சமூக உறவை மேம்படுத்தக்கூடிய வகையில் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்:

- பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பெற்றாரையும் அழைத்து ஈடுபாட்டை உயர்த்துதல்.
- பாடசாலை பரிசளிப்பு நாள்
- கலை இலக்கியம் மற்றும் நாடகப் போட்டிகளை நடாத்தி பெற்றாரையும் கலந்துகொள்ள வைத்தல்.
- கல்விக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.
- மத ரீதியான விழாக்களை சகல மத மாணவர்களும் பங்குபெறும் வகையில் ஒழுங்கு செய்து அந்த நிகழ்வுகளில் பெற்றாரையும் பங்குபற்றச் செய்தல்.
- மாணவர்களின் பரீட்சை விடைத்தாள்களைப் பார்வையிடுவதற்காகவும், கலந்துரையாடுவதற்காகவும் அவரவர் பெற்றாரை அழைத்துத் தனித் தனியாகக் கலந்துரையாடுதல்.
- சமுதாயக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை கிராம மட்டத்தில் ஏற்படுத்துவதன் மூலம் சமூக அறிவூட்டல் ஏற்படுத்தப்படுகின்றது. உதாரணமாக சமூக, சுகாதாரப் பிரச்சினைகளில் சமூகத்திற்கான அறிவூட்டல் கருத்தரங்குகளை பாடசாலைகள் மேற்கொண்டுவரும் பொழுது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவுநிலை மேலும் மேம்படுத்தப்படும். டெங்கு ஒழிப்பு, இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்தல் போன்ற விழிப்பூட்டலை ஏற்படுத்த கருத்தரங்குகள், குறும்படக் காட்சிகள் போன்றவற்றை ஒழுங்கு செய்யலாம். பெரிய பாடசாலைகள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வகையில் போதிய வளங்களைக் கொண்டிருக்கின்றன.
- வாசிப்பு மற்றும் எழுத்தாக்க முகாமில் பெற்றாரையும் ஈடுபடுத்துதல்.
- வீட்டுக்கு வருகை தருதல் எப்பொழுதாவது இருந்துவிட்டு பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று வருவதை அதிபரோ அல்லது ஆசிரியர்களோ நியமமாகக் கொண்டிருப்பார்களேயானால் இதைவிட வேறு ஒரு சமூக உறவு பேணப்பட முடியாது.
- ஊரில் நடைபெறும் பொது வைபவங்கள் மற்றும் ஆலயத் திருவிழாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்ளுதல்.
- சிரமதான முயற்சிகளில் பெற்றாரையும், பழைய மாணவர்களையும் ஈடுபடுத்துதல். உதாரணமாக பல பாடசாலைகளில் புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கும் முன்னர் தங்கள் தங்கள் பிள்ளைகள் கற்கும் வகுப்பறைகளை தீந்தை அடித்து அழகு படுத்துவதையும் வகுப்பறை நூலகம் அமைத்துக் கொடுத்ததையும் பார்க்கும்பொழுது சமூக உறவு பேணுகை மூலம் எத்தனையோ விடயங்களைச் சாதிக்கலாம்.
- நூலக வாரத்தை ஒழுங்கு செய்து வீடு வீடாகச் சென்று நூல் சேகரிப்பில் ஈடுபடுத்துதல்.
- வகுப்பு ரீதியாகப் பெற்றார் கலந்துரையாடல்களையும் ஒன்று கூடல்களையும் ஒழுங்கு செய்தல்.
- பாடசாலையில் கொண்டாடப்படும் மதரீதியான வைபவங்களில் பெற்றாரின் பங்களிப்பை உயர்த்துதல்.
- தேர்ச்சி அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகள் *(Competency Based Learning Activities –CoBLa)* வகுப்பு மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் பொழுது, பெற்றாரையும் அழைத்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் அவர்களையும் ஈடுபட வைத்தல். கல்வி அபிவிருத்தி மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் பாடசாலைச் சமூகமும், பாடசாலையும் இணைந்து செயற்படும் பொழுது மாணவர்களின் அடைவு மட்டமும் பாடசாலையுடனான ஈடுபாடுகளும் அதிகரிக்கின்றன. இவ்வாறான ஈடுபாட்டினூடாக தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் தாமும் விருப்பத்துடன் ஈடுபடுவதுடன் கற்றலுக்கான சூழலைத் தமது வீட்டிலும் ஏற்படுத்திக் கொடுப்பர்.
- பாடசாலை சமூக உறவின் ஒரு செயற்பாடாகவே பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு மேலதிகமாக பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள்" *(School Development Committe-SDC)* நிறுவப்பட்டு பாடசாலையுடனான சமூகத் தொடர்புகள் மிக நெருக்கமாகப் பேணப்படுகின்றன. இதில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றார், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், கல்வித் திணைக்களப் பிரதிநிதிகள் என பாடசாலையுடன் தொடர்பான பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பதால் தீர்மானங்களை எடுப்பதிலும் அவற்றைப் பாடசாலை முகாமைத்துவக் குழுவூடாக *(School Management Committee-SMT)* நடைமுறைப்படுத்துவதிலும் எதிர்காலத்தில் எவருடைய தடையும் ஏற்படாத நிலை ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

**வளங்களை முகாமிப்புச் செய்தல்**
*(Management of ressources)*

வளமுகாமைத்துவமானது பொதுவாக இன்று அரிதாகவே அதிபர்களிடம் காணப்படுகின்றது. இருக்கின்ற வளங்களில் இருந்து உச்சப் பயன்களைப் பெற நடவடிக்கைகள் எடுக்காது இல்லாத வளத்திற்காக

ஏங்குகின்ற சுபாவம் சாதாரணமாக இன்று காணுகின்றோம். கிடைக்கின்ற வளங்களில் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறக்கூடிய வகையில் செயற்றிட்டங்களை உருவாக்கி செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்குத் தேவையான வளங்களை உரிய காலத்திற்குள் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை அதிபர் எடுக்கவேண்டும். அதேவேளை பாடசாலையில் தேவைக்கு அதிகமாக உள்ள பொருட்களையோ அல்லது தேவையற்ற பொருட்களையோ அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் சமாந்தரமாக எடுக்க வேண்டும்.

**எதுவுமே அறியாத வெள்ளை மனம் கொண்ட பிள்ளைகளைப் பெற்றார் பாடசாலையில் சேர்த்தபின் அவர்களுக்கான முழுமையான பாதுகாப்பு வழங்குவதில் இருந்து அவர்களது ஒவ்வொரு செயற்பாட்டையும் கண்காணித்து நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலையைச் சார்ந்தது.**

**நிதி முகாமைத்துவம்** *(Financial management)*

பாடசாலைகளின் முகாமைத்துவ மற்றும் கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டிற்காக வருடந்தோறும் பல்வேறு வகையான நிதி பல்வேறு மூலங்களில் இருந்து கிடைக்கின்றது. உதாரணமாக தர உள்ளீட்டு நிதி, வசதிகள் சேவைகள் கட்டணம், பாடசாலை அபிவிருத்திக் குழு நிதி, பழைய மாணவர் சங்கத்தின் நிதி, அன்பளிப்புக்கள் என பல்வேறு மூலங்களில் இருந்தும் நிதிகள் கிடைக்கின்றன. அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி கல்வி அபிவிருத்தியில் உச்ச விளைவைப் பெறக்கூடிய வகையில் முகாமை செய்வதே நிதி முகாமைத்துவம் ஆகும்.

**மாணவர்களை முகாமைத்துவம் செய்தல்**
*(Management of students)*

மாணவர்களை முகாமைத்துவம் செய்வதே ஒரு பாடசாலையின் உயிர் நாடியாகும். பிள்ளைகள் பாடசாலையில் புதிதாகச் சேர்க்கப்படும்பொழுது அவர்களில் எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் இருப்பதில்லை நாளாக நாளாக அவர்கள் வளர்க்கப்படுகின்ற முறையும் பெற்றுக்கொள்கின்ற அனுபவமும் தான் அவர்களின் போக்கை மாற்றி அமைக்கின்றது. இதைத்தான் கவிஞர் கண்ணதாசன், "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே - அவர் நல்லவராவதும், தீயவராவதும் பிள்ளை வளர்ப்பினிலே." என்ற பாடல் அடிகளினூடாக குழந்தை வளர்ப்பு முறையை தெளிவாக விளக்கியுள்ளார்.

எதுவுமே அறியாத வெள்ளை மனம் கொண்ட பிள்ளைகளைப் பெற்றார் பாடசாலையில் சேர்த்தபின் அவர்களுக்கான முழுமையான பாதுகாப்பு வழங்குவதில் இருந்து அவர்களது ஒவ்வொரு செயற்பாட்டையும் கண்காணித்து நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலையைச் சார்ந்தது. மாணவர்களின் வரவு, ஒழுக்கம் மற்றும் அவர்களது தொடர்பாடல் முறைகள், துாய்மை, பொறுப்புக்களை நிறைவேற்றும் தன்மை, கற்றல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அவர்களது ஈடுபாடும் பெறு பேறுகளும் மாணவர் நலன்புரி நடவடிக்கைகள் பாடசாலைக் குச் சமூகமளிக்காத மாணவர் கள் மீதான கவனம் என்பவை தொடர்பாக மாணவர் களை முகாமிப்பு செய்வது ஒரு அதிபரின் சிறந்த முகாமைத்துவத்திற்கு நல்லதொரு சான்றாகும்.

**ஆளணி முகாமைத்துவம்** *(Management of staff):*

பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பெறுப்புக்களையும் கடமைகளையும் பகிர்ந்தளித்தலும் பணிச் செயலாற்றுமையைக் கண்காணித்தலும் உரியமுறையில் நிறைவேற்றப்படாவிட்டால், பாடசாலையின் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியாது போய்விடும். பாடசாலையின் தூர நோக்கு, பணிக்கூற்று ஆகியவற்றிற்கேற்ப ஆளணியினரின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பதைக் கண்காணித்து வழிகாட்ட வேண்டிய பொறுப்பும் அதிபரையே சார்ந்தது. பாடசாலைக்குச் சமூகமளிக்காத ஆசிரியர்களுக்குப் பதிலாக எடுக்க வேண்டிய மாற்று ஒழுங்குகள் அன்றாடம் காலையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். கற்றலை மேற்கொள்வதற்காகப் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் முழுமையான கற்றலைப் பெற்றுக்கொண்டு செல்வதை அதிபரின் தலைமையிலான பாடசாலை முகாமைத்துவக் குழு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதேவேளை கற்றல், கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களின் தேவை அறிந்து அவர்களது வாண்மை விருத்தியை மேம்படுத்தும் வகையில் திட்டமிட்ட ஒழுங்கில் ஆசிரியர்களுக்கான உள்ளகப் பயிற்சிகளை ஒழுங்கு செய்வதுடன் அவர்களது நலன்புரி நடவடிக்கைகளிலும் கவனம் வெலுத்துவதன் மூலம் அதிபர் ஆசிரியர் உறவு நிலையைப் பேணிக்கொள்ளலாம். ஆளணி முகாமைத்துவத்தில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் பாடசாலையின் ஆளணிக் கோப்புக்கு அமைவாக குறித்தொதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க ஆசிரியர் எண்ணிக்கையை எப்பொழுதும் குறைவாகவே வைத்திருக்க வேண்டும். இதனால்,

- ஆசிரிய ஆளணியினரிடம் இருந்து உச்சப் பயன் பாடடைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பற்றாக்குறை நிலவும் நிலையில் தேவைக்கேற்ப தரமுள்ள ஆசிரிய ஆளணியைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- பாடசாலையில் மேலதிக அசிரியர்கள் இருப்பதோ அல்லது ஒரே நேரத்தில் பலர் பாடங்கள் இன்றி ஓய்வாக இருப்பதோ சுமுகமான முகாமைத்துவத் திற்குத் தடையாக அமையும்.

**பாடசாலைக் கவிவுநிலை** *(School Climate):*



பிரித்தானியாவின் பிரதமராக இருந்த வின்ஸ்ரன் சேர்ச்சில் பின்வருமாறு குறிப்பிட்டது போன்று, ஆரம்பத்தில் எமது கட்டடங்களை செம்மைப்படுத்தினால் இறுதியில் அவை எங்களைச் செம்மைப்படுத்தும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான சூழலை உருவாக்கி அதனை மேலும் மேலும் செம்மைப்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் பற்றி சேர்ச்சிலின் இக்கூற்று சுட்டிக்காட்டுகின்றது.


ஒரு பாடசாலையின் பௌதிகச் சூழலானது கட்டங்கள் மாத்திரமின்றி வகுப்பறையின் அழகான கவிவுநிலை, விளையாட்டு மைதானம், பாடசாலைத் தளபாடங்களை பேணுதலும் தேவைக் கேற்ப ஒழுங்குபடுத்தலும், நூலகங்கள், ஆய்வு கூடங்கள், மகிழ்வூட்டும் இடங்கள், மலசல கூடங்களின் தூய்மை, அலுவலக ஒழுங்கமைப்பு, பாடசாலைச் சூழலில் தாவரங்களை நடுகை செய்து அவற்றை முறையாகப் பராமரித்தல், பாடசாலையில் சேரும் கழிவுகள் குப்பை கூழங்களை இடுவதற்கான குழிகள் அல்லது குவிமுறையில் அமைத்து அவற்றைக் கூட்டுப் பசளையாகத் தயாரித்தல், பாடசாலையைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைத்தல் போன்றவற்றையும் உள்ளடக்கும் வகையில் பாடசாலை முகாமைத்துவமானது பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் உதவியுடன் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

பாடசாலைச் சூழலானது, கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் மனதுக்குப் புத்துணர்ச்சியூட்டுவதாகவும் மாணவர்கள் ஆசிரியர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கு ஏற்ற இடமாகவும் இருக்க வேண்டும். நன்கு பராமரிக்கப்பட்ட அழகுமிக்க பாடசாலைச் சூழலானது முறையான கற்றலுக்கு அவசியமானது. மாணவர்களின் அடைவுக்கும் பாடசாலைச் சூழல் நிலைமைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவதை ஆய்வாளர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வகுப்பறைச் சூழலை கற்றல், கற்பித்தலுக்கு உகந்த இடமாக மாற்றி அழகுபடுத்துவதில் வகுப்பு ஆசிரியருடன் மாணவர்கள் அவர்களது பெற்றார் ஆகியோர் ஈடுபடும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். வகுப்பறை ஒன்றை ஒழுங்கு செய்வதில் ஆசிரியர் பின்வரும் ஒழுங்கு முறையைக் கையாளலாம்:

- ஆரம்பத்தில் ஆசிரியர் வகுப்பறையில் உள்ள பொருட்களின் பட்டியலைத் தயாரித்தல்.
- மாணவர் மேசை, கதிரை ஆகியவற்றைக் குழு முறைச் செயற்பாட்டிற்கு ஏற்றவகையில் ஒழுங்குபடுத்தல் இங்கு நான்கு மாணவர் மேசைகளும்,ஆறு மாணவர் கதிரைகளும் ஆறு மாணவர்கள் இருந்து செயற்படப் போதுமானது.
- மாணவர்கள் எல்லோரும் பார்க்கக்கூடிய வகையில் கரும்பலகை அல்லது வெண்பலகையை வைத்தல். அனால் முடிந்த அளவு ஆசிரியர் கரும்பலகை பாவிப்பதைத் தவிர்ப்பது நல்லது. குழு முறைச் செயற்பாடுகளினூடாக மாணவர்களை தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ப கவனிப்பதுடன் எல்லா மாணவர்களையும் ஒரேநேரத்தில் உயர்ந்த அடைவைப் பெற வழிகாட்டலாம்.
- இடவசதியை ஏற்படுத்துவதற்காக வகுப்பறையில் உள்ள தேவையற்ற தளபாடங்களை அப்புறப்படுத்துதல்.
- கற்றல்,கற்பித்தல் சாதனங்களும் ஏனைய உபகரணங்களும் கிடைக்கக் கூடியதாக ஆசிரியர் ஏனைய பாட ஆசிரியர்களுடன் கலந்துரையாடி ஒழுங்கு செய்தல். மேலும் மேந்தலை எறியி (OHP), பல்லூடக எறியி *(Multi media Projector)*, கணினி போன்ற நவீன கற்றல் சாதனங்கள் போன்றனவும் கற்றல்-கற்பித்தல் செயல்முறையை வளப்படுத்துபவையாகும்.
- கற்றல் கற்பித்தல் சாதனங்களை தர உள்ளீட்டு நிதியில் இருந்தும் பாடசாலைச் சமூகத்திடம் இருந்தும் சேகரித்துக் கொள்ளலாம்.
- பொருத்தமான வரைபடங்கள், கற்றல் சானங்கள், சித்திரங்களைக் கொண்டு வகுப்பறைச் சுவரை அலங்கரித்தல்.
- வகுப்பறை நூலகங்கள் அல்லது வாசிப்பு மூலைகளை அமைத்து நூல் சேகரிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- வகுப்பறையைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் வகையில் மாணவர்களுக்குப் பொறுப்புக்களை வழங்குதல்.



எங்களுடைய தனிப்பட்ட வாழ்விடங்களான வீடுகளை திட்டமிட்டு அமைப்பதிலும், அவற்றை அழகுபடுத்துவதிலும் தூய்மையாக வைத்திருப்பதிலும் நாம் எவ்வளவுக்கு அக்கறை காட்டுகின்றோமோ அந்த அளவுக்காவது எமது பாடசாலைகளை அழகுபடுத்த வேண்டும். இன்று பல பாடசாலைகளில் சிறந்த கவிவுநிலை உருவாக்கப்பட்டு வருவதானது அதிபர்களிடையே புதிய சிந்தனை ஒன்று வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

**கற்றல் விளைவு** *(Learning outcomes):*


**மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் யாவும் நன்கு திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் மாணவர்களின் கற்றல் விளைவுகள் படிப்படியாக அதுவும் விரைவாக உயர்ந்து வருவதைக் காணலாம். ஒரு பாடசாலையின் நிறைவான இலக்கு மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளை உயர்த்துவதும் அவர்களை நாட்டிற்கு உதவக்கூடிய நற்பிரஜைகளாக உருவாக்குவதுமேயாகும் என்பதைக் கல்விச் சமூகம் புரிந்து செயற்பட வேண்டும்.**

**பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகள்:**

- அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கல்வி அலுவலர்களுக்கும் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான எண்ணக்கரு குறித்த, போதிய விளக்கம் இன்மை.
- தமது ஆசிரியர்களின் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக குறித்த மனப்பாங்குகளை மாற்றுவதற்கான ஆற்றல் அதிபர்களிடம் குறைவாகக் காணப்படுதல்.
- பாடசாலையின் உயிரோட்டத்தை வளப்படுத்த வழங்கப்படும் நிதி வரையறுக்கப்பட்டுள்ளமை.
- பலவீனமான சமூக ஈடுபாடுகள் காரணமாக பாடசாலை முகாமைத்துவத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் பாரிய இடைவெளி நிலவுகின்றது.
- வலயக்கல்வி அலுவலர்களின் ஊக்குவிப்பு குறைவாக இருத்தல். பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுக்களுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னரும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களில் கல்வி அதிகாரிகளின் தலையீடுகளும், கட்டுப்பாடுகளும் இருப்பதால் அதிபர்கள் சுயமாகச் செயற்பட முடியாத நிலையே இன்றும் காணப்படுகின்றது.
- மாணவர் மையக் கற்பித்தல் *(Student centered)* முறைகளில் ஆசிரியர்களுக்குப் போதிய தெளிவின்மை.
- இதனை வழமையாக அறிமுகப்படுத்தப்படும் செயற்றிட்டமாகவே அதிபர்களும், ஆசிரியர்களும் கருதுதல்.
- பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதில் அக்கறை காட்டாது இருத்தல்.
- ஒவ்வொரு படிநிலையிலும் வினைத்திறன் மிக்க தொடர்பாடல் திறன் குறைவாக இருத்தல். இதனால் தகவல்களை உரியமுறையில் பெறமுடியாது இருக்கின்றமை பொதுவாக எல்லா நிலைகளிலும் காணப்படுகின்றது.

இத்தகைய தடைகளை அகற்றி பாடசாலைகளின் விளைதிறனை உயர்த்துவதற்கு ஒவ்வொரு அதிபரும் தனது பாடசாலையின் பலங்கள் *(Strength)*, பலவீனங்கள் *(Weekness)*, வாய்ப்புக்கள்*(Opportunities)*, அச்சுறுத்தல்கள் *(Thretening)* எவை என்பவற்றை உள்ளடக்கிய *SWOT* பகுப்பாய்வை மேற்கொண்டு திட்டங்களைச் செயற்படுத்தும் பொழுது பாடசாலையின் முழுமைத்தர அபிவிருத்தி என்பது வெகுதூரத்தில் இல்லை.

பாடசாலைகளின் மேம்பாடு என்பது முழுமையாக அதிபர்களின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. தமது பாடசாலையின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் வகைகூற வேண்டியவர்களும் அதிபர்கள்தான். இந்த தார்மீகப் பொறுப்பை ஏற்று அதிபர்கள் தமது வினைத்திறனை உயர்த்துவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும்.



ஆ.செல்வநாயகம்

# பாடசாலைகளின் தொலைநோக்கும் பணிக்கூற்றும்

ஒவ்வொரு நிறுவன செயற்பாட்டிற்கும் அந்நிறுவனத்தின் தொலைநோக்கும் *(Vision)* அதை நோக்கிய பணிக்கூற்றும் பணிபுரிகின்ற பயன்பெறுகின்ற அனைவருக்கும் தெளிவாக விளங்கியிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பாடசாலைகளில் கலைத்திட்ட செயற்பாடுகளுடன் சமூக சூழ்நிலைக்கமைவாக தொலைநோக்கும் பணிக்கூற்றும் அமைக்கப்பட்டு செயற்பட வேண்டியது அவசியமாகும்.

எந்த ஒரு பணிக்கும் இலக்கு இருக்க வேண்டும். அனைத்து பணிகளும் இலக்கு நோக்கியதாக அமைவதோடு ஒவ்வொரு செயற்பாட்டின் இலக்கை அண்மித்ததாக நகர்வு மிகவும் அவசியமானது.

நோக்கமும் - செயற்பாடுகளும் ஒன்றிக்கும் போதே எடுத்துக் கொண்ட கருமம் வெற்றி பெறும். இதை பின்வரும் கூற்றுக்கள் தெளிவுபடுத்துகின்றன.

- *VISION WITHOUT ACTION IS ONLY A DREAM*
- *ACTION WITHOUT A VISION IS PASSING THE TIME*
- *VISION WITH ACTION CAN CHANGE THE WORLD*

அதாவது ,

- செயற்பாடுகள் அற்ற ஒரு நோக்கம் வெறும் கனவாகவே இருக்கும்.
- நோக்கமில்லாத ஒரு செயற்பாடு வெறும் நேர விரையத்தையே கொடுக்கும்.
- நோக்கங்களைக் கொண்டிருக்கும் செயற்பாடுகள் உலகை மாற்றியமைக்கக் கூடிய வல்லமை படைத்தவை.

ஒவ்வொரு பாடசாலையும் தமது ஊட்டப் பிரதேசத்தில் *(CATCHMENT AREA )* அதாவது தமது பாடசாலைக்கு வரும் மாணவர் வாழும் பிரதேசங்களின் நிலைக்கேற்ப, சமூகத்தின் நிலைக்கேற்ப தொலைநோக்கு *(Vision)* அமைக்கப்பட வேண்டும்.

பொதுவாக இன்று உலக மயமாக்கத்தில் உலகம் கிராமமாக தொழில்நுட்ப சாதனங்களால் மாற்றமடைந்த நிலையிலும் பாடசாலைகளுக்கு பல தனித்துவமான தொலைநோக்கு அமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.



**அமைக்கப்பட்ட தொலைநோக்கு, பணிக்கூற்றுக் கள் பாடசாலைச்சமூகம் ஏற்று செயற்படக் கூடியதாகவும் அனைவருக்கும் இலகுவாக விளங்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.**

ஒரு நாட்டின் எல்லாப் பாடசாலைகட்கும் எல்லா விடயங்களிலும் ஒருமைப பாடு காணப்படுவதில்லை. பாடசாலைகளின் உள்ளீடு களைப் பொறுத்தவகையில் முக்கிய வளத்தேவைகளா வன. மனிதவளம், பௌதீகவளம் என்பவற்றின் பற்பல வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக மனிதவளத்தில் ஆசிரியர் வலயப் பகிர்வு, ஆசிரியர் அதிபர்களின் தகைமைத்திறன்கள், மனப்பாங்குகள் போன்றவைகளில் வேறுபாடுகள் உள்ளன. அத்துடன் மாணவர், பெற்றோர் நிலைகளிலும் சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, தொடர்புசாதன, போக்குவரத்து, பிரதேசநிலை முதலான விடயங்களின் தாக்கங்களைப் பொறுத்தவரையிலும் கட்டடம், தளபாடங்கள், மைதானம், தொழில்நுட்ப சாதனங்கள், கற்பித்தல் தொழில்நுட்ப சாதனங்கள் போன்றவைகளில் பாடசாலைகளுக்கிடையில் வேறு பாடுகள் உள்ளன. இதனால் பாடசாலைகள் தமது தொலைநோக்கை தமது பாடசாலை அடைய வேண்டிய தேவைக்கேற்ப அமைக்கப்பட வேண்டியது அவசியமானது.

தொலைநோக்கை *(Vision)* அமைக்கும்போது பாடசாலை எத்தகைய குழுக்களுக்கு உதவ வேண்டும்? சேவை செய்ய வேண் டிய ஊட்டற்பிரதேசம் எது? பாடசாலை எதிர்நோக்கும் சவால்கள் எவை? எதிர் காலத்தில் கட்டியெழுப்ப விரும்பும் நிறுவன இயல்புகள் யாவை? தங்கள் பாடசாலை எத்தகைய கல்வியை வழங்க வேண்டும்? போன்ற வினாக்களுக்கு விடை காணக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும்.

பாடசாலையின் நிலையை நன்கு அறிந்து அங்கு என்ன தேவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என பகுப்பாய்வுக்குட்படுத்தி - உணர்ந்து தொலைநோக் கினை அமைப்பதற்கான குழுவைத் தீர்மானித்தல் வேண்டும். குழுவில் பாடசாலை முகாமைத்துவக்குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கக்குழு, மாணவத்தலைவர் கள், கல்வி புலத்திலுள்ளோர், நலன் விரும்பிகள், அறி ஞர்கள் போன்றோரின் ஆலோசனைக்கமையவும் அமைக்கப்படல் வேண்டும். அவை பரிசீலனைக்குட் படுத்தப்பட்டு பொதுவான உடன்பாட்டுத் தீர்வுக்கு வந்து பாடசாலைச் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அமைக்கப்பட்ட தொலைநோக்கு, பணிக்கூற்றுக் கள் பாடசாலைச்சமூகம் ஏற்று செயற்படக்கூடியதாக வும் அனைவருக்கும் இலகுவாக விளங்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அனைத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொதுவாக பாடசாலை சமூகத்திற்கு தெளிவுடையதாக இருக்க வேண்டும். அப்போது தான் இதை இலகுவாக நடைமுறைப்படுத்தவும் வெற்றி பெறவும் முடியும்.

குறிப்பிட்ட காலத்தில் அமைக் கப்பட்ட தொலை நோக்கு நிறைவுக்கு வந்தால் பின்னர் கால தேவைக்கு ஏற் பவும்,சமூக தேவைக் கேற்பவும் புதிய தொலை நோக்கை மாற்றியமைக்க லாம்.

இலக்கை அடைந்துவிட்டால் புதிய இலக்கைத் தீர்மானித்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும். அமைக்கப்பட்ட தொலைநோக்கை பின்வருமாறு மதிப் பீட்டிற்குட்படுத்த வேண்டும்.


- சகலருக்கும் தெளிவாகவும் விளங்கக்கூடியதாக வும் உள்ளதா?
- ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு சுருக்கமாக உள்ளதா?
- நிறுவனத்தின் நோக்கம் என்ன என்பதை கூறுகின்றதா? என்ன? யாருக்கு? எப்படி? ஏன்?
- முதன்மையான இலக்கு என்ன என் பதை கூறுகின்றதா?
- நிறுவனத்தின் மையத் -தேர்ச்சிகளை வெளிக்காட் டுகின்றதா?
- நோக்கக் கூற்று எந்தளவிற்குப் பரந்தது?
- அது தங்களது நிறுவனத்தில் தீர்மானம் மேற்கொள் வதற்கு ஒரு தளமாகப் பயன்படுகின்றதா?
- நிறுவனத்தின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றதா?
- அடையக்கூடிய தராதரங்களைக் காட்டுகின்றதா?
- ஒரு சக்தி மையமாக விளங்கும் வகையில் சொல் லாட்சி கொண்டுள்ளதா?

அமைக்கப்படும் தொலைநோக்கும் அல்லது தூர நோக்கு அல்லது இலட்சிய நோக்கினை *(Vision)* மேற் கூறப்பட்டவாறு வினாக்களூடாக மதிப்பீடு செய்த பின்பே வெளியிட வேண்டும். பாடசாலைகளில் அமைக்கப்பட் டுள்ள பின்வரும் தொலைநோக்கு, பணிக்கூற்றுகளை மாதிரிக்காக கவனத்தில் கொள்ளலாம்.

01. i. *Vision* – தனியாள் விருத்தியூடாக சமூக விருத்தி *Individal development as social development*

    ii. *Mission* - சிறந்த ஆளுமைப் பண்புடையவர் களாக ஒவ்வொரு மாணவரையும் உருவாக்கும் பணியின் வினைத்திறனான கலைத்திட்ட செயற்பாடுகளூடாக சிறந்த சமுதாயத்தை தோற்றுவித்தல்.

*Personality development of every student through effective curricular activities to make a good society.*



02. i. Vision – நவீன தொழில்நுட்ப உத்திகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய அறிவும் திறனும் சிறந்த பண்பும் கொண்ட சமூகம்

ii. Mission – நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மேம்பாடடைந்த ஒரு சமூகத்தை அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்.

03. i. Vision – மாறும் உலகுக்கு ஏற்ப தேர்ச்சி பொருந்திய தரமான கல்விச் சமூகம் To build a skilled educational society to the trend of the changeable globe

ii. Mission ___ வினைத்திறனும் விளைத்திறனும் மிக்க தரமான கல்வியைப் பெறுவதன் மூலம் செயல்துடிப்புள்ள மாணவரை உருவாக்குதல் *To produce an active and energetic student through an efficient effective and qualitative education.*

04. i. Vision - அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரசைகள் *Competent Citizens who cope with the erudit world*

*ii. Mission* - கடந்தகால நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சவால்களை ஆராய்தறிந்து மேம்பட்ட கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும், திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்

இவைகள் பாடசாலைகளுக்கானவை. இதேபோல கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், மாகாண கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகங்கள் தங்களது இலக்குகளை - *Vision ,Mission fis* அமைத்துள்ளன. பொதுவாக பாடசாலைகள் உலக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் UNESCO வினுடைய


*Learn to know*

*Learn to Do*

*Learn together*

*Learn to be* போன்ற கருத்துக்களோடு எமது நாட்டினுடைய கல்வி அமைச்சின் தேசிய கல்விக் குறிக்கோள்கள் (08), மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகள் முதலானவையையும் உள்ளடக்கியதாக பாடசாலை கலைத்திட்ட முகாமைத்துவம் அமைய வேண்டும்.

பாடசாலைகள் சிறந்த ஆளுமைப் பண்புடையதாக எதிர்கால சமூகத்தை அறிவு, திறன், மனப்பாங்கு பயிற்சி ஊடாக *(KASP – Knowledge, Attitude, Skill, Practice)* உருவாக்கி எதிர்காலத்தில் ஓம்பக்கூடிய வாழ்க்கைப் பாங்கை அமைக்கக்கூடிய தரமான நற்பிரசைகளாக உருவாக்குவதற்கு பாடசாலைகளின் தொலைநோக்கு *(Vision)* பணிக்கூற்று *(Mission)* மிகப் பொருத்தமாக அமைக்கப்பட்டு அதன்படி செயற்பட்டால் பாடசாலைகள் வெற்றி பெறும். எதிர்கால தரமான சமூக உருவாக்கம் சிறந்தோங்கும்.




கி.புண்ணியமூர்த்தி

# ஆசிரியர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் ஒரு விமரிசன நோக்கு



ஒரு பாடசாலையின் இயங்கு சக்தி ஆசிரியர்களாவர். ஆசிரியர்களில்லாத பாடசாலை உயிரில்லாத உடலுக்கு ஒப்பானதாகும். "ஒரு உண்மையான ஆசிரியர் மாணவனது மட்டத்திற்கு இறங்குபவராக இருப்பதுடன் தனது ஆத்மாவை மாணவனது ஆத்மாவுடன் இணைப்பவராகவும் இருத்தல் வேண்டும்" என சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.

மனுதர்ம சாத்திரத்தில் ஒரு ஆசிரியன் பிரம்மத்தின் மறு பிரதியாகவே கருதப்படுகின்றான். H.G. வேல்ஸ் (H.G.Wells) ஆசிரியர்கள் வரலாற்றை உருவாக்கும் சிற்பிகள் என்கிறார். சேர் ஜோன் அடம்ஸ் (Sir John Adams) ஒரு ஆசிரியர் மனிதனை உருவாக்குபவர் என்கிறார். இவ்வாறான மகிமை பெற்ற ஆசிரியர் தொடர்பாக ரவீந்திரநாத்தாகூர் குறிப்பிடும்போது "ஒரு ஆசிரியர் சுயமாகவே தொடர்ச்சியாகக் கற்றுக் கொண்டிராவிட்டால் அவர் உண்மையான ஆசிரியராக விளங்கமுடியாது. ஒரு விளக்கு தொடர்ச்சியாக எரியாவிட்டால் அவ் விளக்கு தனது சுடரினால் மற்றொரு விளக்கை ஏற்றி வைக்க முடியாது என்கிறார்.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஆசிரிய சேவைக்குள் நுழைந்து விட்டோம் ஆனால் இச்சேவைக்குள் நுழைவதற்கு முன்னர் நம்மில் எத்தனை பேர் இச்சேவைக்கான நமது பொருத்தப்பாட்டைப் பற்றிச் சுய மதிப்பீடு செய்திருக்கிறோம்? அதாவது நுழைவுப் பரீட்சைகளில் சித்தியெய்தினால் மாத்திரம் நாம் ஆசிரிய சேவைக்குப் பொருத்தமானவர்கள் என்று எவ்வாறு கூறுவது? நாம் உடல் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், சமூக மனவெழுச்சி ரீதியாகவும் இத்தொழிலுக்குப் பொருத்தப்பாடுடையவர்களா? என்பதைப் பல தடவைகள் சிந்தித்துக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஆசிரிய சேவைக்குள் நுழைந்த பின்னர் பலர் இத்தொழிலைப் பற்றி மனம் சலித்துக் கொள்கிறார்கள். ஏதோ ஒரு தொழில் புரிய வேண்டும் என்பதற்காக இத்தொழிலைப் புரிவதாகக் குறிப்பிடுகிறார்கள். இதைவிடச் சம்பளம் குறைந்தாலும் வேறு தொழில் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்கிறார்கள். சில பாடசாலை அதிபர்கள் உயர்தகைமை பெற்ற ஆசிரியர்களைப் புறக்கணித்து விட்டுத் தமக்குத் தேவையான அல்லது தமது சொற்படி கேட்கின்ற தகைமை குறைந்த

ஆசிரியர்களுக்குப் பாடசாலையிலுள்ள பதவிகளை ஒப்படைக்கும்போது தாம் விரக்தியடைவதாகச் சில ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சில ஆசிரியர்கள் திடீரென இடமாற்றத்துக்குட்படுவதால் தொழில் விரக்தியுற்றுக் காணப்படுகின்றனர். இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களும் புதிய அதிபருடன் பொருத்தப்பாடடையாமல் தடுமாறுகின்றனர். அடிக்கடி கல்வியில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் பல ஆசிரியர்கள் வெறுப்படைந்து காணப்படுகின்றனர். அதிலும் குழுப் பரிசீலனை (Team inspection) இடம்பெறுவதை முன்கூட்டியே தெரிந்துகொண்டால் சுகவீன விடுமுறை பெறுபவர்களும், தெரியாமல் வந்து விட்டால் அரை நாள் விடுமுறை பெறுபவர்களும் அதிகமாகக் காணப்படுகின்றனர். இதைப்பற்றிக் கேட்டால் அதிகாரிகள் பிழை பிடிப்பதற்காகவே குழுப் பரிசீலனைக்காகப் பாடசாலைக்கு வருவதாகத் தமது மன விரக்தியைத் தெரிவிக்கின்றனர்.

குழுப் பரிசீலனை தொடர்பாக அதில் பங்கு பற்றும் ஒரு சேவைக்கால ஆசிரிய ஆலோசகரிடம் வினவிய போது "நாம் ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்காகவே குழுப் பரிசீலனைக்குச் செல்கிறோம் ஆனால் பல ஆசிரியர்கள் மதிப்பீடு, கணிப்பீடு, ஆசிரியர் வகிபாகங்கள் அதிலும் நிலைமாற்று வகிபாகம், (Transformation Role) நிலைபேண்தகு விருத்தி (Sustainability development) ,5E மாதிரி, செயற்றிட்டம், செயல்நிலை ஆய்வு போன்றவை தொடர்பாக விளங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும், விளங்கிக்கொள்ள விரும்பாதவர்களாகவும் காணப்படுகின்றனர். சேவைக்காலக் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதை இயலுமானவரை தவிர்த்துக்கொள்கிறார்கள். செயற்பாட்டுத்திட்டம் எழுதுவதைக்கூடப் பலர் தவிர்த்துக்கொள்கிறார்கள். அர்ப்பணிப்பு என்பதற்கப்பால் காலம் கடத்துவதற்காகக் கடமை புரிபவர்களாகவே பல ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். இவர்களைக் கண்டிப்பது தவறா? எனக் கேட்டார்.

இது பற்றி ஒரு சிரேஷ்ட ஆசிரியரிடம் கேட்ட போது "இக்கூற்று எல்லா ஆசிரியர்களுக்கும் பொருத்தமானதல்ல இதற்கு மாறாக உண்மையான அர்ப்பணிப்புடன் பாடசாலையைத் தமது சகவாழ்வின் ஒரு அங்கமாகக் கருதும் ஏராளமான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களைச் சுதந்திரமாகச் சேவையாற்றச் சக ஆசிரியர்கள் விடுவதில்லை. பல வழிகளில் ஏளனம் செய்பவர்களாகவும், விமரிசிப்பவர்களாகவும் உள்ளனர். அதிபரின் கையாட்கள் என முத்திரை குத்துகிறார்கள் இதனால் அவர்களும் படிப்படியாகக் கடைமையிலிருந்து ஒதுங்கும் நிலை காணப்படுகிறது." என்றார் கல்வியியலில் சிறப்புப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் திறமைச் சித்தி பெற்ற ஆசிரியர்கள், கல்வி முதுமாணிப்பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இத்தொழிலில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்கின்றனர். ஓய்வு பெறும் வரை ஆசிரியராகவே இருத்தல் வேண்டும் என்கிறார்கள். தாம் தினமும் மனவருத்தத்துடனேயே பாடசாலைக்குச் செல்வதாகப் பல ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து மாற்றம் பெறுவதற்காக அதிபர் பரீட்சை, கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை போன்றவற்றிற்கு விண்ணபித்துவிட்டு அதற்குத் தயாராவதற்கே தமது பாடசாலை நேரத்தில் பெருமளவைக் கழிக்கிறார்கள்.

பரீட்சைகளில் வெற்றி பெறாதவர்கள் அல்லது அவற்றில் வெற்றிபெற முடியாது எனக் கருதுபவர்கள் அடுத்த தெரிவாகக் கொள்வது ஆசிரிய ஆலோசகர் தொழிலையாகும். பல ஆசிரியர்களுக்கு ஆசிரிய ஆலோசகர் தொழில் ஒரு கனவுத் தொழிலாகவே விளங்குகிறது. அவர்கள் பாடசாலைகளில் வலம் வருவதையும், அவர்களது குறைவான வேலைப் பழுவையும், அவர்களது அதிகார தோரணைகளையும் பார்க்கும்போது ஆசிரியர்களுக்கு அத்தொழில் மீது ஒரு பொறைமையும், விருப்பும் தோற்றம் பெறுகிறது. இதனால் ஆசிரிய ஆலோசகர் ஆவதற்குப் பல வழிகளிலும் முயற்சிக்கின்றார்கள். ஆனால் பல்வேறு பிரயத்தனங்களின் பின் ஆசிரிய ஆலோசகர் ஆகிய ஒரு ஆசிரியரிடம் அவரது தொழிலின் நிலை பற்றி விசாரித்தபோது தான் "சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்துவிட்டதாகச்" சுருக்கமாகக் குறிப்பிட்டார். ஏன் இவ்வாறு குறிப்பிடுகிறீர்கள் என விசாரித்தபோது அவர் சில காரணங்களை முன்வைத்தார். அவையாவன:

- எங்களுக்கென்று ஒரு சேவை இல்லாதது மிகவும் பாதிப்பான ஒரு விடயமாகும் இதனால் நாங்கள் ஆசிரியர் சேவையில் இருந்து கொண்டு ஆசிரியர்கள் அனுபவிக்கின்ற எந்தவித சலுகைகளையும் அனுபவிக்காமல் ஆசிரிய ஆலோசகர்களாக இருக்கின்றோம். இதனால் அடிக்கடி எங்களுக்கு நாங்கள் ஆசிரியர்களா? அல்லது ஆசிரிய ஆலோச கர்களா? என்ற சந்தேகம் தோன்றிக்கொண்டே இருக்கிறது.
- ஆசிரியத் தொழில் காலை 7.30க்குத் தொடங்கி 1.30க்கு முடிந்துவிடும். ஆனால் வலயக் கல்வி அலுவலகத்துக்கு வரும் நாட்களில் நாங்கள் 4.30 வரை அலுவலகத்தில் இருக்க வேண்டும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் தவணை விடுமுறை எங்களுக்குக் கிடைப்பதில்லை இக்காலங்களில் தவறாது தினமும் அலுவலகத்துக்கு வருகை தந்து 4.30 வரை வெட்டியாகப் பொழுதைப் போக்குதல் வேண்டும் இக்காலங்களில் பிரதான பரீட்சை மேற்பார்வையாளர்களாகச் சேவையாற்றும் சந்தர்ப்பங்கள் எங்களில் ஒரு சிலருக்குக் கிடைத்து வந்தது அவர்களுடன் இணைந்து ஏனையவர்களும் பணியாற்றுவோம். ஆனால் அதையும் தற்போது பாடசாலை அதிபர்கள் எதிர்க்கிறார்கள்.
- மாகாணத்துக்கு மாகாணம், வலயத்துக்கு வலயம் ஆசிரிய ஆலோசகர் நடைமுறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

- புதன்கிழமைகளைத் தவிர ஏனைய நாட்களில் நாங்கள் பாடசாலை மேற்பார்வைக்காகச் செல்லுதல் வேண்டும் அங்கும் பாடசாலை முடியும் வரை காத்திருக்க வேண்டியநிலை காணப்படுகிறது. அதாவது வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர்களுக்கான கூட்டத்தில் பாடசாலை முடியும் வரை ஆசிரிய ஆலோசகர்களின் வரவுச் சான்றிதழில் கையொப்பமிட வேண்டாம் என உத்தரவிட்டுள்ளார். அதனால் குறிப்பிட்ட பாடத்துக்கான ஆசிரியரைப் பார்வையிட்டபின் பாடசாலையில் வெறுமனே அமர்ந்திருக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் பாடசாலை ஆசிரியர்கள் எங்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு அல்லது புன்னகைத்துவிட்டுச் செல்வது ஏளனமாக எங்களைப் பார்த்துச் சிரித்துவிட்டுச்செல்வது போல் இருக்கும்.

- தற்போது எமது வலயத்தில் தினமும் ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரின் கீழ் மூவர் அல்லது நால்வர் அடங்கிய குழுவாகப் பாடசாலைகளுக்கு மேற்பார்வைக்குச் செல்லுமாறு பணிக்கிறார்கள் இதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக மனைப் பொருளியல் பாடத்துக்குரிய ஒரு ஆசிரிய ஆலோசகர் ஒரு குழுவில் ஒரு பாடசாலையை மேற்பார்வையிடச் செல்கின்றார் என வைத்துக்கொண்டால் அப் பாடசாலையில் மனைப் பொருளியல் பாடம் இல்லாவிட்டால் அல்லது மனைப் பொருளியல் ஆசிரியை இல்லாவிட்டால் அன்று முழுவதும் அவர் வெறுமனே பொழுதைப் போக்க வேண்டியவராக இருக்கின்றார். இங்கு மனித வளம் வீணே விரயமாகின்றது என்பதையே நான் சுட்டிக்காட்டுகின்றேன்.

- வலயக் கல்விக் காரியாலயமும், மாகாணக் கல்விக் காரியாலயமும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் எங்களைப் பற்றிய தப்பான அபிப்பிராயங்களை ஏற்கனவே தம்முள் பதித்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவு அர்ப்பணிப்புடன் சேவையாற்றினாலும் அவர்களது கண்களுக்கு அது தப்பாகவே தெரிகிறது. அதிகாரிகளும் எங்களில் எவ்வாறு பிழை பிடிப்பது என்ற எண்ணத்திலேயே எப்போதும் இருக்கிறார்கள் எங்களுக்கு உதவி செய்யும் அல்லது எங்களை வழிப்படுத்தும் எண்ணம் அவர்களிடம் குறைவாகவே காணப்படுகிறது.

- எங்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகளில் நீண்டகாலமாக எந்த மாற்றங்களும் இல்லை குறைந்தளவு தொகையே வழங்கப்படுகிறது. அதிலும் வலயங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன.

- ஆசிரிய ஆலோசகர்களில் ஒரு சிலர் பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் இவர்களில் சிலர் நீண்ட காலமாகச் சேவையாற்றுகிறார்கள் இவர்களும் ஆசிரிய சேவையிலேயே இருப்பதால் தாங்கள் ஆசிரியர்களா? ஆசிரிய ஆலோசகர்களா? அல்லது உதவிக் கல்விப் பணிப்பாளர்களா? என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். தம்மை உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் என்று சமூகத்தில் அறிமுகப்படுத்தும் வேளை உண்மையான உதவிக் கல்விப் பணிப்பாளர்களா? எனச் சிலர் விசாரிக்கும்போது அவர்களுக்கு அவமானமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் தற்போது ஆசிரிய ஆலோசகர்களில் சிலர் மூப்பின் அடிப்படையில் இணைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள் எனினும் இப் பதவிக்கும் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

- வலயக் கல்வி அலுவலகத்தால் எங்களுக்கென்று எந்தவிதமான காகிதாதிகளும் வழங்கப்படுவதில்லை. இவற்றை நாம் எமது சொந்தப் பணத்திலேயே பெற்றுக்கொள்கிறோம். போக்குவரத்துக்குச் செலவிடும் உண்மையான செலவுகூட எங்களுக்குக் கிடைப்பதில்லை. அதாவது நாங்கள் மிகத் தொலைவிலுள்ள பாடசாலைகளுக்கு மோட்டார் சைக்கிள்களில் செல்கிறோம். ஆனால் அதற்குச் செலவிடும் உண்மையான எரிபொருளுக்குரிய பணம் எங்களுக்குக் கிடைப்பதில்லை.

- பாடசாலை மேற்பார்வை முடிவுற்றதும் இடம் பெறும் கூட்டத்தில் நாங்கள் ஆசிரியர்களின் குறைகளைக் குறிப்பிடும்போது அவர்கள் எங்களை விரோதிகளைப் போல் பார்க்கிறார்கள். நன்றாகக் கதைத்தவர்கள் கூட முகத்தைத் திருப்பிக்கொண்டு செல்கிறார்கள். எங்களைத் தனிப்பட்ட ரீதியில் விமர்சிக்கிறார்கள். நாம் ஆசிரியர்களாக இருந்த போது விட்ட சிறு தவறுகளைக்கூடப் பெரிதாக்கிப் பேசுகிறார்கள்.

- மற்றொரு ஆசிரிய ஆலோசகர் நான் 18 வருடங்களாக ஆசிரிய ஆலோசகராகச் சேவையாற்றுகிறேன். ஆனால் இதுவரை எந்தவொரு முன்னேற்றமும் இல்லை குறிப்பாக இது ஒரு தொழிலே இல்லை என்றார். அத்துடன் தான் மீண்டும் ஆசிரியராவதற்கே விரும்புவதாகவும் ஆனால் கௌரவம் அதற்கு இடம்கொடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

- ஆசிரிய ஆலோசகராகப் 10 வருடங்களுக்குமேல் சேவையாற்றிவிட்டு மீண்டும் ஆசிரியராக மாறிய ஒருவர்தான் தற்போது நிம்மதியாகச் சேவையாற்றுவதாகக் குறிப்பிட்டார். அவர் ஆசிரிய ஆலோசகரை விட ஆசிரியராக இருப்பது எவ்வளவோ மேல் என்றார்.

இது தொடர்பாக ஒரு ஆசிரியரிடம் விசாரித்த போது அவர் இதற்கு எதிர்மாறான கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

- ஆசிரிய ஆலோசகர்கள் எங்களுக்கு உதவி செய்வதை விட எங்களில் பிழை பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டு மேற்பார்வை செய்கிறார்கள். சிலர் தமக்குப் பொருத்தமில்லாத பாடங்களை மேற்பார்வை செய்கிறார்கள், அவர்கள் வழங்கும் ஆலோசனைகள் அதிகமான சந்தர்ப்பங்களில் ஆக்க ரீதியானதாக இருப்பதில்லை. அதிகமாகத் தங்களது கடந்தகால அனுபவங்களையே மிகைப்படுத்திக் கூறுகிறார்கள்.
- ஒரு சிறப்பு விஞ்ஞானப் பட்டதாரியை ஒரு விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஆசிரிய ஆலோசகர் மேற்பார்வை செய்ய முடியுமா? என அவர் வினா எழுப்பினார்.
- கற்பித்தலில் உள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டுபவர்கள் ஒரு மாதிரிப் பாடத்தைக் கற்பித்துக் காட்டுகிறார்களில்லை. உதாரணமாகப் பல்லூடக எறிவை போன்ற நவீன கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்துக் காட்டுவார்களாக இருந்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.
- பாட மேற்பார்வையின்போது சில ஆசிரிய ஆலோசகர்கள் தொடர்ச்சியாகக் கைபேசியில் உரையாடிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இறுதியாக இடம்பெறும் கருத்துரைப்புக் கூட்டத்தில் எங்களைப் பற்றிப் பெருமளவு குறைபாடுகளை அடுக்குகிறார்கள். வகுப்பில் இடம்பெறாத சம்பவங்களைக்கூடக் குறிப்பிடுகிறார்கள்.
- சிலர் பாடம் ஆரம்பித்து ஒரு சில நிமிடங்கள் பாட மேற்பார்வையில் ஈடுபட்டுவிட்டு இடையில் எழுந்து சென்றுவிடுகின்றனர் இதைப்பற்றிக் கேட்டால் ஒரு கற்பித்தலை ஒரு சில நிமிடங்கள் பார்த்தாலே பூரணமான கற்பித்தல் விளங்கிவிடும் என்கின்றனர். ஆனால் சில ஆலோசகர்கள் பாடம் முடியும் வரை இருந்து பார்க்கிறார்கள் அவர்கள் வழங்கும் கருத்துக்கள் பயனுள்ளதாக இருக்கிறது.
- கற்பித்தலின்போது இடையில் குறுக்கிட்டு வகுப்பிலுள்ள மாணவர்களிடம் வினாக்களைக் கேட்கிறார்கள் அதுவும் கடைசி வரிசையில் இருக்கும் மாணவர்களிடம் வினாக்களைக் கேட்கிறார்கள். அவர்கள் சரியாக விடைகூறாவிட்டால் வகுப்பறையிலுள்ள அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் எங்களைக் குறை கூறுகிறார்கள். அனைத்து மாணவர்களையும் ஆகக் குறைந்த அடைவு மட்டத்தை அடைவிக்க வேண்டும் என்கிறார்கள். இவர்கள் ஆசிரியர்களாக இருந்தபோது இதைச் சாத்தியமாக்கினார்களா? இவ்வாறு இவர்கள் குறை கூறிச் சென்றபின் மாணவர்கள் எங்களை மதிப்பார்களா?
- பல ஆசிரிய ஆலோசகர்கள் கண்ணியமாக உரையாடும் அதேவேளை சிலர் பொருத்தமற்ற வார்த்தைகளை உபயோகித்துத் திட்டுகிறார்கள் பிழை விடுவது மனித இயல்பு அதற்காகத் திட்டுவது அநாகரிகமான செயற்பாடாகும். இறுதியாக இடம்பெறும் கூட்டத்தில் கருத்துரை வழங்கும்போதும் சிலர் தலைகுனிவை ஏற்படுத்துமாறு கருத்துக்களை வழங்குவதையும் அவதானிக்க முடிகிறது. இவர்களது தொழிலே ஆலோசனை கூறுவதுதான் என்பதைப் பலர் மறந்துவிடுகிறார்கள். கல்விப் பணிப்பாளர்களைப் போலவே நடந்து கொள்கிறார்கள்.
- ஆசிரிய ஆலோசகர்களுக்கு பிரத்தியேக வருமானங்கள் அதிகமாகக் கிடைக்கிறது அதாவது அவர்கள் ஒரு வாரத்துக்குரிய பாடசாலைத் தரிசிப்புக்களை ஓரிரு நாட்களில் பூர்த்தி செய்து விடுகிறார்கள் ஏனைய நாட்களில் தமது சொந்த வேலைகளைப் பார்க்கிறார்கள் சிலருக்கு இது ஒரு உப தொழிலாகவே உள்ளது பிரதான தொழிலாக விவசாயமோ அல்லது வியாபாரமோதான் உள்ளது. ஆனால் இக்கூற்றை மற்றொரு ஆசிரியர் மறுத்தார் "தற்போது பாடசாலை அதிபர்கள் இறுக்கமாக இருப்பதால் இது சாத்தியமில்லை. சில வேளை தொலை தூரங்களில் இது சாத்தியமாகலாம்" என்றார்.
- வருட இறுதியில் பெருமளவு சேவைக்காலச் செயலமர்வுகளை நடாத்துகிறார்கள் இதில் அதிகளவு வருமானத்தை ஈட்டுகிறார்கள். ஆசிரியர்களாக இருந்தால் இவ்வளவு வருமானத்தைப் பெறமுடியுமா?

இரு தரப்புக்களின் கூற்றுக்களிலும் நியாயங்களும், நியாமின்மைகளும் காணப்படுகின்றன ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களது பெருமளவு பிரச்சினைகளை அதிபர்களே தீர்த்துவைக்க முடியும்.

- ஆசிரியர்களை அடிக்கடி அதிபர் பாராட்டுதல் வேண்டும். அவர்களது செயற்பாடுகளுக்கு நிறைவான கணிப்பினை வழங்குதல் வேண்டும். ஆசிரியர் தினத்தில் பாராட்டுவதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஒவ்வொரு ஆசிரியரையும் பாராட்டப்படவேண்டிய சந்தர்ப்பங்களை உருவாக்கித் தனித்தனியே பாராட்டுதல் வேண்டும் அப்போது அவர்களுக்கு ஆசிரியத் தொழிலே நிறைவானதாகத் தோன்றும்.
- ஆசிரியர் - அதிபர், ஆசிரியர் - ஆசிரியர், அசிரியர் - மாணவர்கள் இடைத்தொடர்பினை விருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆசிரியர்கள் தாங்கள் பாராட்டப்படவில்லை அல்லது தங்களது செயற்கருமங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனக் கருதினால் அவர்கள் பூரணமாகத் தமது உழைப்பினை வழங்கமாட்டார்கள் என்பதை அதிபர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.
- ஆசிரியர்களின் வருடாந்தச் சம்பள உயர்ச்சிகளை உடனுக்குடன் பெற்றுக்கொடுக்க அதிபர் முன்னின்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்துடன் அவர்களது தொழில் வாண்மையை விருத்தி செய்யக் கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

- ஆசிரியர்களின் தகைமைகளைக் கவனத்தில் கொண்டு பாடசாலையிலுள்ள பதவிகளை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். நடைமுறையில் சேவை மூப்பை மாத்திரமே கவனத்தில் கொள்வதால் தகுதியானவர்களுக்குப் பதவிகள் கிடைக்காமலே போகிறது சேவை மூப்பில் நியமனம் பெறுபவர்கள் தமது கடமைகளை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் ஆற்றமுடியாதவர்களாக இருக்கின்றனர்.
- பெற்றோர் ஆசிரிய சங்கக் கூட்டங்களில் திறமையான ஆசிரியர்களுக்குப் பாராட்டுதல்கள் வழங்குதல் வேண்டும்.
- ஆசிரியத் தொழில் மகத்தானதாகும், அதற்கு எந்தத் தொழிலும் ஈடாக முடியாது, ஏனைய தொழில்கள் ஒரு குறுகிய வட்டத்துக்குள் உட்பட்டதாகும். ஆனால் ஆசிரியத்தொழில் பரந்த சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். ஆசிரிய ஆலோசகர்களைப் பொறுத்தவரையில் அவர்களைக் கண்டிப்பாக ஒரு சேவைக்குள் உள்வாங்குதல் வேண்டும் அல்லது ஆசிரிய அலோசகர் சேவையை உருவாக்கி அதற்குப் பொருத்தமான சம்பளத் திட்டத்தையும், பதவி உயர்வுகளையும் உருவாக்குதல் வேண்டும்.
- ஆசிரிய ஆலோசகர்களுக்கென ஒரு கடமை அட்டவணையை உருவாக்குதல் வேண்டும் அலுவலகங்களில் அவர்களுக்குத் தேவையான பௌதீக வளங்களை ஏற்பாடு செய்து கொடுத்தல் வேண்டும்.
- ஆசிரிய ஆலோசகர் தெரிவிலும், மாதாந்தக் கொடுப்பனவுகளிலும் பொதுவான விதிமுறைகளை நாடு முழுவதிலும் கடைப்பிடித்தல் வேண்டும்.
- பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுதல் வேண்டும். கடந்த காலங்களில் திட்டமிடல் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பின்னர் நிரந்தர உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் சில விசேட பாடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட (கலை, தொழில்நுட்பம்) ஆசிரிய ஆலோசகர்களும் பின்னர் நிரந்தர உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

  நீண்ட காலமாகத் தாம் நிரந்தமாக்கப்படுவோம் என்ற நம்பிக்கையிலேயே பல பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தற்போதும் சேவையாற்றி வருகிறார்கள். இதனால் அவர்களுக்குக் கிடைத்த பல உயரிய சந்தர்ப்பங்களை இழந்துவிட்டே அவர்கள் சேவையாற்றுகிறார்கள். இவர்களைப் போல் நம்பிக்கையுடன் சேவையாற்றிய பல பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நிரந்தரமாக்கப்படாமலேயே ஓய்வூதியம் பெற்றுச் சென்று விட்டார்கள். இதே நிலை தற்போதிருப்பவர்களுக்கும் வராத வகையில் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ஆசிரிய ஆலோசகர்கள் அடிக்கடி தங்களைச் சுயமதிப்பீடு செய்துகொள்ளுதல் வேண்டும். தமது கடமைகள் தொடர்பாகவும் அவற்றின் வரையறைகள் தொடர்பாகவும் நன்கு தெரிந்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும் தான் ஒரு பாடத்தை மேற்பார்வை செய்வதற்குப் பொருத்தமானவர்தானா? என்பதை உறுதிப்படுத்திய பின்னரே மேற்பார்வையில் ஈடுபடுதல் வேண்டும்.
- பிள்ளை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்ற அனைத்துக் காரணிகள் தொடர்பாகவும் ஆய்வு செய்வதையும், அவற்றை விருத்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நிபுணத்துவ சேவையே ஆலோசகர் சேவையாகும் என W.H பேர்டின், L.J. புரூக்கர் ஆகியோர் குறிப்பிடுவதற்கேற்ப ஒரு ஆசிரிய ஆலோசகர் கற்பித்தல் மேற்பார்வையுடன் மாத்திரம் நின்றுவிடாமல் மாணவர்களது செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், பொருத்தமான கற்றல் சூழல் நிலவுகிறதா? என்பதை அவதானித்தல், பொருத்தமான தர உள்ளீடுகளைத் தயாரிப்பதற்கு ஆசிரியர்களுக்கு உதவுதல், ஆசிரியர் தனது கற்பித்தலைத் திட்டமிடுதற்கும், தனது கற்பித்தலை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் (Presentation) உதவுதல், கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுவதில் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்றவற்றிலும் ஈடுபடுதல் வேண்டும்.
- ஒரு ஆசிரிய ஆலோசகர் ஏற்கனவே ஒருவரில் கொண்டுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படையில் அவரை மேற்பார்வை செய்தல் கூடாது. நடுநிலைமையானவராக, ஆணவப்போக்கு, ஆத்திரப் போக்கு இல்லாதவராக இருத்தல் வேண்டும். ஜனநாயக ரீதியாக ஒத்துழைப்புடன் செயற்படுபவராக நட்புறவுடன் பழகுபவராக, ஆசிரியரின் கருத்துக்களைச் சிரத்தையுடன் செவிமடுப்பவராக, சொல்சார்ந்த, சொல்சாரா தொடர்பாடலை விருத்தி செய்து கொள்பவராக, மனிதத்துவத் தொடர்பை விருத்தி செய்பவராகச், சொல்வளமுள்ளவராக விளங்குதல் வேண்டும். அல்லது இக்குணாம்சங்களை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
- ஒரு ஆசிரிய ஆலோசகர் பாட நிபுணத்துவத்தில் மாத்திரம் தங்கியிருத்தல் கூடாது கல்வி அமைப்பினுள் காணப்படுகின்ற சீர்திருத்தங்கள், நம்பிக்கைகள், புதிய நுட்பங்கள் தொடர்பாக நன்கு அறிந்த பின்னரே மேற்பார்வைப் பணியில் ஈடுபடுதல் வேண்டும். ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கற்றல் கற்பித்தல் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்ற அனைத்துச் செயற்பாடுகளையும் ஆய்வு செய்து அவற்றை விருத்தி செய்தலே ஒரு சிறந்த மேற்பார்வையாகும் என சாம். எச் மூறார் (Sam H.Moorar) வெளிப்படுத்துவதற்கேற்ப ஒரு ஆசிரிய

ஆலோசகர் விசேடமாகக் கலைத்திட்டம், கற்பித்தல் முறைமைகள், மதிப்பீட்டு முறையியல்கள், தர உள்ளீடுகள், பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போன்றவற்றை நன்கு அறிந்திருப்பதுடன் அவற்றில் பரீட்சயத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் ஆசிரியர்கள் மத்தியில் தலைகுனிய நேரிடும்.

- கற்பித்தல் மேற்பார்வை என்பது ஒரு பாடசாலை ஆசிரியரின் வளர்ச்சிக்காகத் தொடர்ச்சியாக வழிகாட்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற, ஒரு செயன்முறையாகும். பாசனும் புருக்கரும் (Barson and Burckner) குறிப்பிடுவதன்படி கற்பித்தல் மேற்பார்வை ஒரு நிபுணத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப சேவையாகும் இதன் அடிப்படைக் குறிக்கோள் மாணவர்களின், வளர்ச்சிக்கும், விருத்திக்கும் அடிப்படையாகவுள்ள அனைத்துக் காரணிகளையும் கூட்டாக இணைந்து விருத்தி செய்வதாகும். இதன்படி ஒரு ஆசிரியருக்கு ஒரு ஆசிரிய ஆலோசகர் வழங்கும் ஆலோசனை வினைத்திறனுள்ளதாகவும், விளைதிறனுள்ளதாகவும் அமைகிறதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

- ஒரு ஆசிரிய ஆலோசகர் தான் மேற்பார்வைக்குச் செல்லும் பாடசாலையின் அன்றாடச் செயற்பாடுகள் தொடர்பாக முன்கூட்டியே அறிந்திருத்தல் வேண்டும் இல்லையேல் அன்றைய தினம் அவரது நிகழ்ச்சித்திட்டத்தில் மாற்றம் செய்யவேண்டிய நிலை ஏற்படலாம். உதாரணமாக அவர் மேற்பார்வைக்குச் செல்லும் தினம் குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் டெங்கு ஒழிப்புக்காக கிராமச் சுத்திகரிப்புக்குச் சென்றிருக்கும் தினமாக அல்லது பாடசாலையில் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெறும் தினமாக இருந்தால் அன்றைய தினம் அவரது தயார்ப்படுத்தல்களில் பிரச்சினைகள் தோன்றலாம்.

- டிக்கி (Dicky) என்பவர் கற்பித்தலை விருத்தி செய்வதற்காக ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டமே கற்பித்தல் மேற்பார்வையாகும் என்கிறார். அதன்படி மேற்பார்வை தொடர்பாக பூரணமான ஆயத்தத்துடன் செல்லுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு நியதிகளைக் கைவசம் வைத்திருத்தல் வேண்டும். தனது தொழில் வாண்மையைப் பேணுபவராகவும், தொழில் ஒழுக்கத்தை எப்போதும் பின்பற்றுபவராகவும், தனது மேற்பார்வைத் திறன் வளர்ச்சியடைந்து கொண்டு செல்லும் போக்கினை சுயமதிப்பீடு செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.


- ஒரு ஆசிரிய ஆலோசகர் ஆசிரியரை மதிப்பிடுவதற்குத் தேவையான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். நல்ல கற்பித்தலைச் செய்து காட்டுபவராக (Demonstrate) இருத்தல் வேண்டும். ஆசிரியர்களைச் செயல்நிலை ஆய்வினை மேற்கொள்வதற்குத் தூண்டுபவராக இருத்தல் வேண்டும். தனது கற்பித்தலைச் சுயமதிப்பீடு செய்ய உதவுதல் வேண்டும். சக ஆசிரியர்களுடன் இணைந்து கருமமாற்ற உதவுதல் வேண்டும்.

**ஒரு ஆசிரிய ஆலோசகர் ஆசிரியரை மதிப்பிடுவதற்குத் தேவையான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். நல்ல கற்பித்தலைச் செய்து காட்டுபவராக இருத்தல் வேண்டும். ஆசிரியர்களைச் செயல்நிலை ஆய்வினை மேற்கொள்வதற்குத் தூண்டுபவராக இருத்தல் வேண்டும்.**

- கற்பித்தல் மேற்பார்வை என்பது சுயவிமரிசனம், சுயமதிப்பீடு, சுயவிருத்தி என்பவற்றுக்கு வழிகாட்டுகின்ற நிபுணத்துவ சேவையாகும் என S.K. கோச்சர் குறிப்பிடுவதற்கேற்ப ஒரு ஆசிரிய ஆலோகசகர் நிபுணத்துவம் வாய்ந்தவராக தன்னைக் கல்விச் சமூகத்துக்கு வெளிப்படுத்திக் காட்டுதல் வேண்டும்.

- நிலைமாற்று வகிபாகத்தை ஏற்கும் ஒரு ஆசிரியர் மாணவர்களை ஆய்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதுடன் தான் ஒரு வசதியளிப்பவராகவும் தொழிற்படுதல் வேண்டும். ஆனால் நடைமுறையில் வகுப்பறைகளில் விரிவுரை சார்ந்த கற்பித்தல் முறையியல்களையே அவதானிக்க முடிகிறது. அவ்வாறான கற்பித்தல் முறையியல்களையே ஆசிரிய ஆலோசகரும் மேற்பார்வையிடுவதை அவதானிக்க முடிகிறது. மாணவர்களின் ஆற்றலைச் செயற்பாடுகளினால் விருத்தி செயவதினூடாக ஆசிரியரினுள் ஊக்கலை ஏற்படுத்துகின்ற இணைப்புச் சேவையே ஆலோசனைச் சேவையாகும் என பிறிஜசும், ஜஸ்மினும் குறிப்பிடுகிறார்கள். இதன்படி ஒரு ஆசிரிய ஆலோசகர் கூடுமானவரை செயற்பாடு சார்ந்த கற்பித்தல் முறையியலை மேற்கொள்ள ஆசிரியர்களை வழிப்படுத்துதல் வேண்டும்.

எனவே எந்த ஒரு சேவையிலும் பற்றும், மனவுறுதியும், நம்பிக்கையும், அர்ப்பணிப்பும் கொண்டு அச்சேவையை ஆற்றும்போது அதில் குறைவை விட நிறைவே தென்படும். கல்வித் துறையிலுள்ள எந்தவொரு சேவையும் மாணவர்களுக்கானதே என்பதை எவரும் மறந்துவிடுதல் கூடாது. இதில் ஏற்றத்தாழ்வுகளோ, பதவிநிலைகளோ கிடையாது. நமது பதவிகளை மாண்புறச் செய்வது நமது நடத்தைகளிலேயே தங்கியுள்ளது. யார் மாணவர்களின் மனங்களில் வாழ்கிறார்களோ அவர்களே மாண்புடையவர்களாவர். என்றென்றும் மாணவர்களின் மனங்களில் வாழ்பவர்கள் ஆசிரியப் பெருந்தகைகளே என்றால் அது மிகையாகாது.



அன்பு ஜவஹர்ஷா

# ஆசிரியைகளும் ஓய்வு பெறுதலும்

இலங்கை அரச சேவையில் உள்ள ஆசிரியர்களில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கினர் ஆசிரியைகளாவர். புதிதாக நியமனம் பெறுகின்றவர்களில் கூட அதிகமானவர்கள் ஆசிரியைகளாகவே உள்ளார்கள்.

எழுபதுகளில் 20,21 அல்லது 22 வயதிலேயே பெரும்பாலானவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வந்து விடுவார்கள். இதன் காரணமாக 40 வருட சேவைக்காலத்துடன் ஓய்வு பெற்று வந்தார்கள். ஆனால் தற்போது 25 வயதுக்கு மேல்தான் இந்தத் தொழிலுக்கு வரமுடிகின்றது. புதிதாக வருகின்றவர்கள் முப்பது வருட சேவையாற்றுவதே கஷ்டமாகவுள்ளது. 10, 15 அல்லது 20 வருடங்களில் தொழில் விட்டுச் செல்கின்றவர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. இவர்களில் கணிசமான தொகையினர் ஓய்வு பெறாமலே தொழிலை விட்டுச் செல்கின்றார்கள். இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அதை ஆராய முன்னர் பெண் அரசாங்க ஊழியர்களின் ஓய்வுபெறுதல் தொடர்பான விடயங்களை முன்னர் அறிந்து கொள்வோம்.

அரச சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் ஓய்வூதியத்தைப் பெற ஓய்வூதிய பிரமாணக் குறிப்பான இரண்டாவது பிரிவின் படி பின்வரும் மூன்று விடயங்களையும் கட்டாயமாக நிறைவு செய்து இருக்க வேண்டும்.

- ஓய்வூதிய உரித்துடைய பதவியை வகித்திருக்க வேண்டும்.
- அப்பதவியில் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- 120 மாதங்களுக்கு மேல் அதாவது பத்து வருடங்களிற்கு மேல் சேவையாற்றிருக்க வேண்டும்.

இவைகள் பொதுவான ஓய்வூதியத்திற்கான தகைமையாகும். இதை அடிப்படைத் தகைமையாகக் கொண்டு காலத்திற்கு காலம் அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களின் படி சுற்றறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. இதன் அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட்டு தேவைகளைப் பொறுத்து அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெற வைக்கப்பட்டார்கள்.

*1988.08.30ஆம் திகதி வெளியிடப்பட்ட 30/88 இலக்கம் கொண்டதும் 1990.07.19ஆம் திகதி வெளியிடப்பட்ட 30/88 (1) இலக்கம் கொண்டதுமான பொது நிருவாக சுற்றறிக்கையின்படி இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர் அரசாங்க ஊழியர் ஓய்வு பெறலாம்.*

*ஆனால் 55 வருடங்கள் வயதடைந்த பின்னரே, ஓய்வூதியம் பெற முடியும். இது 1989.07.20 தொடக்கம் செயல்பட்டது. 1990.01.01 தொடக்கம் 1996.12.31 வரை அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கான பல்வேறு சலுகைகள் வழங்கி 44/90 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. ஓய்வூதியத்திற்கு,*

**அட்டவணை - 01**

| | குறைக்கப்பட்ட | குறைக்கப்படாத |
|---|---|---|
| 1. 120 மாதத்திற்கு 240 மாதத்திற்கும் இடைப்பட்ட சேவைக்காலத்தை உடையோர் | 80 | 90 |
| 2. 240 மாதத்திற்கும் 360 மாதத்திற்கும் இடைப்பட்ட சேவைக்காலத்தை உடையோர் | 80 | 90 |
| 3. 360 மாதத்திற்கு மேல் சேவைக்காலத்தை உடையோர் | 90 | 90 |

*ஓய்வூதியம் பெறும்போது பெற்றுக்கொண்ட சம்பளம் மிக முக்கியமானதாகும்.*

*1991.01.01 தொடக்கம் 1996.12.31 வரை ஆறு ஆண்டுகள் அரசாங்க ஊழியர்களுக்கு ஓய்வு பெறுவதற்கு பலவிதமான சலுகைகளை இந்த சுற்றறிக்கைகள் வழங்கியதோடல்லாமல் அரசாங்க சேவையாளர்களின் எண்ணிக்கைகள் குறைக்குமுகமாக செய்யப்பட்ட ஏற்பாடு காரணமாக ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் ஓய்வும் பெற்றார்கள்.*

*44/90 இலக்கச் சுற்றறிக்கையால் 20 வருடம் முடிந்தவுடன் சகலருக்கும் ஓய்வூதியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. அத்தோடு 1ஆம் அட்டவணையில் உள்ளது போல சேவைக்காலம் குறைந்தால் ஓய்வூதியம் குறையாது என்ற நிலையும் இருந்தது. 30 வருடம் சேவை செய்தால் அல்லது 30 வருடத்திற்கு பின்னர் பெற்ற சம்பளத்தில் 90 வீதம் ஓய்வூதியமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லாமல் சகல வகையான அரசாங்க ஊழியர்களும் ஓய்வுபெற்று 20 வருடங்கள் சேவைக் காலம் இருந்தால் கணிசமான ஓய்வூதியம் பெறும் அனுகூலம் இருந்தது. இவற்றையெல்லாம் இரத்துச் செய்து 1996.11.12ஆம் திகதி 32/96 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டு, 30/88 இலக்க பழைய சுற்றறிக்கையின் விதிமுறைகள் அமுல்படுத்தப் பட்டுள்ளது. 1934.02.03 தொடக்கம் உருவாக்கப்பட்ட ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் விதிமுறைகள் அமுலாக்கப்பட்டாலும் 1988.08.30 ஆம் திகதிய 30/88 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி 20 வருட சேவைக் காலத்தின் பின்னர் ஓய்வுபெற விருப்புத் தெரிவிக்கும் உரிமை தொடர்ந்து இருப்பதோடு அப்படியான உத்தியோகஸ்தர் ஓய்வூதியம் பெறும் உரிமை 55 வயதுக்குப் பின்னரே கிடைக்கும். 1991இற்கு முன்னர் இருந்தது போல 1997 இற்கு பின்னரும் 20 வருடக்காலத்திற்குப் பின்னர் ஆண், பெண் இருபாலாரும் ஓய்வு பெறலாம். ஆனால் ஓய்வூதியம் 55 வயதுக்குப் பின்னரே கிடைக்கும். 1997.01.01 முதல் இந்த விதிமுறைகள் அமுலில் உள்ளன.*

*சுமார் 105 பக்கங்களைக் கொண்ட 1972.05.05 வரை தற்காலப்படுத்தப்பட்டுள்ள பிரமாணக் குறிப்பில் ஓய்வூதியம் தொடர்பான சகல விடயங்களும் உள்ளன. இதற்குப் பின்னர் கடந்த 39 ஆண்டுகளில் பல விடயங்கள் மாற்றப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவையில் பெண்களின் தொகை அதிகரித்து வருகின்றது. ஆசிரிய சேவையில் இது முக்கிய பகுதியாகி விட்டது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் அரசாங்க சேவையில் சம்பளம் வழங்கப்பட்டாலும் பிரசவ லீவு உட்பட பல வகையான சலுகைகள் அவர்களுக்கு (பெண்களுக்கு) உள்ளன. பொதுவாக 55 வருடங்களுக் குப் பின்னர்தான் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என விதி இருந்தாலும் ஓயவூதியப் பிரமாணக் குறிப்பில் இரண்டாம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவின்படி சில பெண் சேவையாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த மேற்றன்கள், தாதி சகோதரிகள், மருத்துவிச்சிகள், கல்வி அமைச்சை சேர்ந்த ஆசிரியைகள், தபால் திணைக்கள சேவகிகள் ஆகியோர் ஐம்பது வயது அல்லது 20வருட சேவைக் காலம் இரண்டில் முந்திவரும் சேவைக்காலத்தில் ஓய்வு பெறலாம் என அந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. இந்த நடைமுறையின்படியே 1991இற்கு முன்னும் 1997இற்கு பின்னும் மேற்சொல்லப்பட்ட பெண் சேவையாளர்கள் ஓய்வு பெற்று வருகின்றார்கள்.*

*1991 தொடக்கம் 1996 வரை ஓய்வுபெற்ற ஆண், பெண் ஊழியர்களுக்கு கிடைத்த ஓய்வூதியத்தைவிட குறைவான ஓய்வூதியமே 2:14 பிரிவின்படி ஓய்வு பெறும் குறித்துரைக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பெண் அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் மேலே சொல்லப் பட்ட பிரிவில் உள்ளவர்களுடன் 2009.10.08ஆம் திகதிய 17/2009 இலக்க ஓய்வூதியத் திணைக்களச் சுற்றறிக்கையின்படி 20 வருட சேவைக்காலத்தை அல்லது 50 வயதுடைய பெண் பொலிஸாரும் ஓய்வு பெற வசதி செய்யப் பட்டது. மேற்சொல்லப் பட்டவர்களை விட வேறு எந்தப் பெண் அரசாங்க ஊழியரும் ஓய்வுபெற்றால் 55 வயதிற்குப் பின்னரே ஓய்வூதியம் பெற முடியும்.*

அட்டவணை - 02

# 20 வருட சேவைக்காலத்தில் ஓய்வுபெறுவோர்களுக்குக் கிடைக்கும் ஓய்வூதியம்

| சேவைக்காலம் | 20 வரு | | 20 வரு 06 மாத | | 21 வருட | | 21 வரு 06 மாத | | 22 வரு | | 22 வரு 06 மாத | | 23 வரு | | 23 வரு 06 மாத | | 24 வரு | | 24 வரு 06 மாத | | 25 வரு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஓய்வு பெறும் போது பெற்ற மாதாந்தச் சம்பளம் | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட | கழிக்கப்படாத | கழிக்கப்பட்ட |
| ரூபா 13,280 ற்கு கீழ் | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 80% | 71% | 80% | 72% | 80% | 73% | 80% | 74% | 80% | 75% |
| 13,280 ற்கு மேல் | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 80% | 71% | 80% | 72% | 80% | 73% | 80% | 74% |
| 13,520 ற்கு மேல் | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 80% | 71% | 80% | 72% | 80% | 73% |
| 13,880 ற்கு மேல் | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 80% | 71% | 80% | 72% |
| 14,260 ற்கு மேல் | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% | 80% | 71% |
| 14,600 ற்கு மேல் | 70% | 60% | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% | 80% | 70% |
| 16,780 ற்கு மேல் | 69% | 59% | 70% | 60% | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% | 79% | 69% |
| 22,680 ற்கு மேல் | 68% | 58% | 69% | 59% | 70% | 60% | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% | 78% | 68% |
| 30,030 ற்கு மேல் | 67% | 57% | 68% | 58% | 69% | 59% | 70% | 60% | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 66% | 77% | 67% |
| 31,965 ற்கு மேல் | 66% | 56% | 67% | 57% | 68% | 58% | 69% | 59% | 70% | 60% | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 65% | 76% | 56% |
| 37,805 ற்கு மேல் | 65% | 55% | 66% | 56% | 67% | 57% | 68% | 58% | 69% | 59% | 70% | 60% | 71% | 61% | 72% | 62% | 73% | 63% | 74% | 64% | 75% | 55% |

மேற்சொல்லப்பட்ட வகையான பெண் அரசாங்க ஊழியர்கள் 10 வருட சேவைக்காலத்தைக் கொண்டு இருந்தால் ஐம்பது வயதாகி இருந்தால் அல்லது 20 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து இருந்தால் ஒய்வு பெறலாம். ஆனால், இவர்களுக்கு இதில் கிடைக்கும் நன்மைகள், தீமைகள் என்ன என்பதை அறிய வேண்டும். தற்போது 1997.01.02 தொடக்கம் ஓய்வு பெற்றவர்களுக்கு 30 வருட சேவைக் காலத்தை நிறைவுசெய்து இருந்தால் சம்பளத்தைப் பொறுத்து 75 தொடக்கம் 85 குறைக்கப்பட்ட ஓய்வூதியமும் 85 தொடக்கம் 90 வீதம் வரையிலான குறைக்கப்படாத ஓய்வூதியமும் வழங்கப்படும். இதை எல்லோரும் முழு ஓய்வூதியம் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆனால், மேற்சொல்லப்பட்ட சில சேவை பெண் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளின் படி ஓய்வு பெற்றால் 50 வயதோடோ அல்லது 20 வருட சேவைக்காலத்துடனோ ஓய்வூதியம் கிடைக்கும். நன்மை இருந்தாலும் குறைவாக ஓய்வூதியமே கிடைக்கும்.

**அங்கீகரிக்கப் பட்ட சுற்றறிக்கைகள் பொது நிருவாக அமைச்சால், அல்லது ஓய்வூதியத் திணைக்களத்தால் வெளியிடப்படாவிட்டால் எந்தவித மாற்றமும் நடைபெறாது. தற்போது அமுலில் உள்ள சுற்றறிக்கைகளின் படியே இக்குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. இவைகளில் இதுவரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.**

20,000/- மாதாந்த சம்பளம் பெற்றுக்கொண்டு இருக்கும் ஒரு தாதி அல்லது ஆசிரியை இருபது வருட சேவையின் பின்னர் ஒய்வுபெற்றால் அவருக்கு 59 வீதம் அல்லது 11,800 ரூபாவே மாதாந்த ஓய்வூதியமாகக் கிடைக்கும். இவர் 30 வருட சேவைக் காலத்தில் ஓய்வு பெற்றால் 79 வீதம் அல்லது 15,800 ரூபா மாதாந்த ஓய்வூதியம் கிடைக்கும். பணிக்கொடையும் கூட குறையும். 20 வருடமாயின் 3,31,200 ரூபா பணிக் கொடையாகவும், 30 வருட சேவைக்காலமாயின் 4,27,200 ரூபா பணிக்கொடையாகவும் கிடைக்கும்.

இந்த இரண்டாம் இலக்க அட்டவணையை உற்றுப்பார்த்தால் ஆறுமாத சேவைக்காலத்திற்கு ஒரு வீதம் குறைவானதைக் காணலாம். பணிக்கொடையானது குறைக்கப்படாத ஓய்வூதியத்தில் 24 மாதகால அதிகரிப்பாகும்.

பத்துவருட சேவையை நிறைவுசெய்த பெண் ஊழியர் ஐம்பது வயதை அடைந்து ஓய்வு பெறவிரும்பினால் அவருக்கு 39 வீதமே கிடைக்கும். அதாவது மேல் சொல்லப்படாத உதாரணத்தின்படி 7,800 ரூபாவே ஓய்வூதியமாகக் கிடைக்கும். ஓய்வுபெற்று பத்துவருடகாலத்திற்குப் பின்னர் இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பத்து வீதத்தால் அதிகரிக்கப்பட்ட கழிக்கப்படாத ஓய்வூதியமாகக் கிடைக்கும்.


இவைகளே பெண் ஊழியர்கள் ஓய்வூதியம் தொடர்பான தகவல்களாக உள்ளது.

இந்த விதிகளும் இலாப நட்டங்களும் ஆசிரியைகளுக்கே மிகப் பொருத்தமானதாகும். அறுபது எழுபதுகளில் இருந்த கல்வி சூழ்நிலையும் பொருளாதார நிலையும் இன்று இல்லை. முன்னர் சொந்த ஊரை அல்லது வசிப்பிடத்தை விட்டு தூர இடங்களுக்குச் சென்று வேலை பார்க்கும் நிலை இருந்தது. இன்று ஊரோடு உத்தியோகம் என்ற நிலையே உள்ளது. இதன் காரணமாக எல்லா ஆசிரியர்களும் வீட்டு அருகாமையில் வேலை பார்க்கவே விரும்புகின்றார்கள். இதற்குப் பிரயாணம் செய்தோ வெளியிடங்களில் தங்கியோ வேலை செய்ய பொருளாதார நிலை இடங்கொடுக்காமைக்கு ஒரு காரணம் என்று கூட சொல்லலாம். நோய், கணவர் உறவினர் வெளிநாடுகளில் இருப்பது, பிள்ளைகளின் எதிர்காலம் போன்ற பல்வேறு காரணங்களால் ஆசிரியைகள் 55 வயதுக்கு முன்னரே ஓய்வு பெற விரும்புகின்றார்கள்.

ஓய்வூதியம் தொடர்பாக பல்வேறு வகையான கதைகள் காதுக்கு காது செல்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் பொது நிருவாக அமைச்சால், அல்லது ஓய்வூதியத் திணைக்களத்தால் வெளியிடப்படாவிட்டால் எந்தவித மாற்றமும் நடைபெறாது. தற்போது அமுலில் உள்ள சுற்றறிக்கைகளின் படியே இக்குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. இவைகளில் இதுவரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

எந்தக் காரணத்திற்காகவும் சம்பளமற்ற விடுமுறை பெற்று இருந்தால் ஓய்வூதியம் செய்வதற்காக சேவைக் காலத்தைக் கணக்கிடும்போது அதைக் குறைத்தே கணக்கிடுவார்கள். உதாரணமாக ஒரு ஆசிரியையின் மொத்தச் சேவைக்காலம் 27 வருடங்களாகும். அவர் மூன்று முறை வெளிநாடு செல்வதற்காக மொத்தமாக 2 1/2 வருடங்கள் விடுமுறை பெற்று இருந்தார். சுகவீனம் காரணமாக மேலதிகமாக 1 1/2 வருடம் விடுமுறை பெற்று இருந்தார். ஆகவே இரண்டையும் நான்கு வருடங்கள் கழிக்கப்பட்டே 23 வருடங்களுக்கு ஓய்வூதியம் கழிக்கப்படும்.

தீர்மானம் எடுக்கின்றவர்களுக்கு வசதியாகவே இத்துடன் உள்ள அட்டவணை கட்டுரையாளரால் தயாரிக்கப்பட்டுள்ளது. மற்ற அரசாங்க ஊழியர்களை விட ஆசிரியர்கள் கல்வித்துறையில் இருப்பதால் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் அதிகமாக இருக்கும் என்று எண்ணப்படுவதால் அவர்கள் தமது எதிர்காலம் பற்றி சரியான தீர்மானம் எடுப்பதற்காகவே இவைகள் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன.




ஏ.சி.எல்.அமீர் அலி

## தடையற்ற சந்தைப் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியும்

# பொருளியற் கல்வித்துறையின் படுதளர்ச்சியும்

சந்தைச் சக்திகளான கேள்வி, நிரம்பல், விலை ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு மனிதர்களின் தன்னிச்சைப்படி அரசின் தலையீடின்றி இயங்கும் ஒரு பொருளாதாரத்தைத் தடையற்ற சந்தைப் பொருளாதாரம் என்பர். பொருளாதாரங்கள் எவ்வாறு இயங்குகின்றன. அவை எவ்வாறு இயங்க வேண்டும், என்ற வினாக்களை மையமாக வைத்து ஆய்வு செய்யப்படும் கலையைப் பொருளியல் என்பர். மானிட அறிவின் ஒரு தனிப்பட்ட துறையாகப் பொருளியற்றுறை இன்று விளங்குகின்றது.

உயர் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் மாணவர்கள் பொருளியலை ஒரு தனிக்கலையாகக் கற்கின்றனர். பல்கலைக்கழகங்களில் பொருளியலுக்கென ஒரு தனித்துறையே உண்டு. அரசாங்க அமைச்சுகளிலும் பொருளாதார விவகாரங்களுக்கென ஒரு தனி அமைச்சே அநேகமான நாடுகளில் இயங்குவதைக் காணலாம். பொருளியல் வல்லுனர்களுக்கு நொபேல் பரிசுகூட இப்போது வழங்கப்படுகின்றது.



இருப்பினும் கடந்த சில தசாப்தங்களாக வளர்ச்சியடைந்த நாடுகளில் இக்கலையின்மீது மாணவர்களின் கவர்ச்சி குறைந்துள்ளதைக் கல்விக்கூடப் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, மேற்கு அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வுக்குப் பொருளியலை ஒரு பாடமாகக் கற்ற மாணவரின் எண்ணிக்கை 1960-1970 காலப்பகுதிக்கும் 2000-2010 காலப்பகுதிக்குமிடையே சுமார் ஐம்பது விழுக்காடுகளாற் குறைந்துள் ளது. இதே நிலையை அவுஸ்திரேலியா வின் இதர மாநிலங்களிலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பல்கலைக்கழகங்களிற் பொருளியற்றுறையிற் சேரும் மாணவர் தொகையும் அதன் விளைவாக விரிவுரையாளர்களின் தொகையும் ஆண்டுதோறும் சரிவடைந்து வருகின்றன. சில மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பொருளியல் துறையையே மூடிவிடும் அளவுக்கு இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளதென்றால் அது மிகையாகாது.

அதேவேளையிற் சந்தைப் பொருளாதாரமுறை 1980க்குப் பின்னர் பூகோளமயமாக்கப்பட்டு ஒரு மறுமலர்ச்சியைக் கண்டுள்ளதெனலாம். இதைப்பற்றி இக்கட்டுரை விரைவில் விபரிக்கும்.

இது ஒருபுறமிருக்க, மனிதர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளோ என்றுமில்லாத அளவுக்கு தற்போது மோசமடைந்துள்ளதும் கண்கூடு. செல்வ ஏற்றத்தாழ்வுகள், வறுமை, பட்டினி, சூழற் பாதிப்பு, மூலவளக்குறைவு, வேலையற்றோர் படைப்பெருக்கம் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகள் மிக நெருக்கடியான ஒரு கட்டத்தை அடைந்துள்ளன. இவ்வாறு பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ள ஒரு காலப்பகுதியிற் பொருளியற் கலையின் மௌசு குறைவதன் காரணமென்ன? இவ்வினாவுக்குரிய விடையை ஆராய்வதற்கு முன் பொருளியற் கலையின் வரலாற்றைச் சுருக்கமாக விளங்கவேண்டியது அவசியம்.

மானிட சமுதாயத்தின் பொருளாதார அலுவல்களிற் சந்தைச் சக்திகளின் ஊடுருவல் மத்தியகாலத்துக்கு முன்னரே ஏற்பட்டுவிட்டதெனினும் அச்சக்திகளை அத்திவாரமாகக் கொண்ட ஒரு பொருளாதாரத்தின் முழு அமைப்பையும் அதன் பண்புகளையும் தத்துவார்த்த அடிப்படையிலும் தர்க்கரீதியாகவும் முதன்முதலில் ஆராய்ந்து அவ்வாய்வினை நூலாக வெளியிட்ட பெருமை ஸ்கொத்லாந்தைச் சேர்ந்த அதம் சுமித் (1723-1790) என்பவரையே சாரும். சந்தைச் சக்திகளை அத்திவாரமாகக் கொண்டு இயங்கும் பொருளாதாரத்துக்கு முதலாளித்துவப் பொருளாதாரம் என்று இன்னுமொரு பெயருண்டு. எனவே அதம் சுமித்தை முதலாளித்துவத்தின் ஆதிபிதா என்றும் அவர் எழுதிய "The Wealth of Nations" என்னும் நூலை முதலாளித்துவத்தின் வேதநூல் அல்லது பைபிள் என்றும் பொதுவாக அழைப்பர்.

எனினும் அதம் சுமித் ஒரு பொருளியற் பேராசிரியரல்லர். ஒழுக்கவியற் துறையிலேயே அவர் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். அவர் வெளியிட்ட முதலாவது "The Theory of Moral Sentiments" என்னும் நூலும் ஒழுக்கவியலைச் சார்ந்த ஒன்றே. சுமித்தின் கருத்துக்களைத் தழுவிச் சந்தைப் பொருளாதாரப் பண்புகளையும், நியதிகளையும் மேலும் ஆழமாக ஆராய்ந்து நூல் வெளியிட்டவர்களுள் டேவிட் றிக்காடோ (1772-1823), வண.தொமஸ் மோல்தஸ் (1766-1834), ஜோன் ஸ்ருவர்ட் மில் (1806-1873), வில்லியம் நசோ சீனியர் (1790-1864) ஆகிய நால்வரும் முக்கிய இடம்பெறுவர். சுமித்துடன் சேர்த்து இவ்விருவரையும் பழம்பொருளியலாளரென அழைப்பர்.

இவர்களில் எவருமே பொருளியலை இன்று கருதுவது போன்று ஒரு தனிப்பட்ட கலைத் துறையாகக் கருதவில்லை. பொருளாதார நடவடிக்கைகள் அரசியற் கொள்கைகளுடன் இரண்டறக் கலந்துள்ளதால் "அரசியற் பொருளாதாரம்" (Political Economy) என்றே தமது வெளியீடுகளுக்கு நாமமிட்டனர். உதாரணமாக, றிக்காடோவின் நூலுக்கு "On the Principles of Political Economy and Taxation" என்றும், சீனியரின் நூலுக்கு "An Outline of the Science of Political Economy" என்றும் பெயரிடப்பட்டன. சுமித்தின் நூலும் பொருளாதார வளர்ச்சி பற்றியதொன்று. மோல்தஸ் சனத்தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையேயுள்ள தொடர்பையே பிரதானமாகத் தனது நூலில் விளக்கினார். பொருளியலின் தோற்றம் பற்றிய இச்சுருக்கத்திலிருந்து அறியக்கூடிய ஒருண்மை என்னவெனில் இக்கலை தனக்கென ஒரு தனிப்பட்ட படிவத்துடனும், செய்முறையுடனும் ஜனிக்கவில்லை. அது அரசியல், ஒழுக்கவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த ஓர் இயலாகவே பிறக்கலாயிற்று.


பொருளியல் என்ற பதமே கிரேக்க மொழி வேரிலிருந்து தளைத்தபோதும் அதைப்பற்றிய வரைவிலக்கணம் 1890ஆம் ஆண்டு அல்பிரட் மார்ஷல் தனது "Principles of Economics" என்ற நூலை வெளியிடும்வரை எழுதப்படவில்லை. பொருளியலாளரென்று இக்கலை வல்லுனர்களை அழைக்கும் வழக்கமும் 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியிலேதான் பிரித்தானியாவில் ஆரம்பமானது. ஆனாலும் பிரான்ஸ் நாட்டின் பிசியோக்கிரதர்கள் தம்மைப் பொருளியலாளர்களெனப் (Les Economistes) பதினேழாம் நூற்றாண்டிலேயே அழைத்துக்கொண்டரென அறியக்கிடக்கின்றது. எனினும் அறிவுலகு இவர்களைப் பிசியோக்கிரதர்களெனவே இன்றுவரை பிரபல்யப்படுத்துகின்றது.

சுமித்தினது பொருளாதார நூல் 1776இல் வெளிவந்து சுமார் நூறு வருடங்களின் பின்னர் பொருளியல் ஒரு தனிப்பட்ட கலையாகப் பரிணமிக்கத் தொடங்கிற்று. இந்தப் பரிணாம வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கியவர்கள் இன்று புதுப்பழம் பொருளியலாளர்கள் (Neo - Classical Economists) என அழைக்கப்படும் குழுவினரே. இக்குழுவினருள் இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்ரான்லி ஜெவொன்ஸ் (1835-1882), ஆஸ்திரியாவைச் சேர்ந்த கார்ள் மெங்கர் (1840-1921), பிரான்ஸைச் சேர்ந்த லியோன் வால்றஸ் (1834-1910), அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் பேற்ஸ் கிளார்க் (1847-1938) ஆகியோர் விசேட இடம்பெறுவர். இவர்கள் மனிதனது பொருளாதார நடவடிக்கைகளை உளவியல் ரீதியாகவும் கணித ரீதியாகவும் ஆய்வுசெய்து, பொருளியலைத் தனிப்பட்டதொரு விஞ்ஞானக் கலையாகப் படம்பிடித்துக் காட்டினர்.

இன்று பொருளியல் மாணவர் கற்கும் பயன்பாகுபாட்டுத் தத்துவம் (Utility Theory), எல்லையுற்பத்திக் கோட்பாடு (Marginal Productivity Theory), சமநிலை விளக்கம் (Equilibrium Analysis) ஆகிய பாடங்களெல்லாம் புதுப்பழம்பொருளியலாளர்கள் அறிமுகப்படுத்தியவையே. இவர்களது கருத்துக்களையெல்லாம் ஒன்று

திரட்டி ஒரு முழுமையான கட்டுக்கோப்புக்குள் பொருளியலை ஒரு பாடநூலாக முதன்முதலில் வெளியிட்டவர் இங்கிலாந்தைச் சேர்ந்த அல்பிரட் மார்ஷல் (1842-1924) என்பவராவர்.

இவ்வாறான ஒரு பரிணாம வளர்ச்சியின் மத்தியிலேதான், அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பொருளியலுக்கெனத் தனிப்பட்ட ஒரு துறையைத் தாபித்து அதனைத் தலைமை தாங்கவெனப் பொருளியற் பேராசிரியர்களையும் நியமிக்கலாயின. இன்றையப் பொருளியலாளர் பெரிதும் போற்றிக் கௌரவிக்கும் அமெரிக்கப் பொருளியற் சங்கமும் 1885ஆம் ஆண்டிலேயே உருவாகியதென்பதும் இங்கு நோக்கற்பாலது.



பழம்பொருளியல்வாதம் பெரும்பாகப் பொருளியற் (Macro economics) பிரச்சினைகளை, அதாவது முழுப்பொருளாதாரம் ஒன்றின் மொத்த வளர்ச்சியை முன்வைத்துத் தமது ஆய்வுகளை நடாத்த, புதுப்பழம்பொருளியலாளர்களோ நுண்பாகப் பொருளியலுக்கு (Micro economics) அதாவது, தனிப்பட்ட ஒரு நுகர்வோன், தனிப்பட்ட ஒரு நிறுவனம், தனிப்பட்ட ஒரு தொழிலாளி, என்றவாறு ஒரு பொருளாதாரத்தின் நுணுக்கமான தனிப்பட்ட அங்கங்களுக்கு முதலிடம் வழங்கினர். கணிதவியலின் பல்வேறு உத்திகள் இவர்களின் ஆய்வினை ஆழமாக நடாத்துதற்கு ஏதுவாக இருந்தமையாற் பொருளியலும் காலவோட்டத்திற் கணிதவியலின் சாயலைப் பெரிதும் தழுவலாயிற்று. அட்சரகணிதச் சமன்பாடுகளும், கேத்திரகணித வரைவுகளும் பொருளியற் பாடநூல்களை அலங்கரிக்கலாயின.

இருப்பினும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை பொருளியல் தனது ஆய்வுப் பரப்பைக் குறுக்கிக் கொள்ளவில்லை. பெரும்பாகம், நுண்பாகம் என்ற பிரிவுகூட ஜோன் மெய்னாட் கீன்ஸ் (1883-1946) எழுதிய "General Theory of Employment Interest and Money" என்ற 1936ஆம் வருட நூலுக்குப் பின்னர் எழுந்ததொன்றே.

இது இப்படி இருக்க, உலகப் பொருளாதார வளர்ச்சியிற் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் பிரித்தானியாவுக்குச் சொந்தமானவையெனின் அது மிகையாகாது. சர்வதேச வர்த்தகத்தினூடாகவும், கைத்தொழிற் புரட்சி மூலமாகவும், குடியேற்ற நாடுகள் வழியாகவும் பெருஞ் செல்வம் திரட்டி "உலகத்தின் தொழிற்சாலையாக" அன்று விளங்கிய வல்லரசு பிரித்தானியா. செல்வச் செழிப்பிலும், படைப்பலத்திலும் ஒப்பற்றதொரு நிலையை எட்டிப் பிடித்த பின்னர் ஏனைய நாடுகளைப் பார்த்துத் தலையிடாக் கொள்கை (Laissez - Faire) என்ற தாரக மந்திரத்தைப் போதித்த நாடும் அதுவே. அதாவது, மானிடரின் பொருளாதார அலுவல்கள் அவரவர் சுயநயங் கருதி நடைபெற்று, நாடுகளுக்கிடையேயுள்ள வர்த்தகத் தடைகளும் நீக்கப்பட்டு, ஒவ்வொரு நாடும் அவ்வவற்றின் ஒப்பீட்டு நலன் (Comparative Advantage) அடிப்படையில் உற்பத்திகளையும் மேற்கொண்டால் உலகமே பொருளாதாரச் செழிப்பில் மிதக்கும் என்ற வாதத்தை ஒரு வல்லரசு உலகுக்குப் போதித்ததென்றால் அவ்வாதத்தில் அவ்வல்லரசின் சுயநயமும் பொதிந்துள்ளதென்பதை அதே வாதம் உணர்த்துகின்றதல்லவா? இருந்தும் அவ்வல்லரசின் போதனைகளுக்குத் தத்துவப் பலத்தை ஈத்தன புதுப்பழம்பொருளியலாளரின் பொருளியற் கோட்பாடுகள். சந்தையின் மகிமையையும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஒப்பற்ற திறமையையும் பறைசாற்றுவனவாக மிளிர்ந்தன அப்பொருளியற் கோட்பாடுகள்.

தடையற்ற சந்தைப் பொருளாதாரம் ஏற்படுத்தும் சீரழிவுகளையும், முதலாளித்துவத்தின் தீங்குகளையும், தர்க்கரீதியாகவும், தத்துவார்த்த அடிப்படையிலும் சுட்டிக்காட்டி ஒரு மாற்றுப் பொருளாதார முறையின் தீர்க்கதரிசியாக விளங்கிய கார்ள் மார்க்ஸ் (1818-1883) எழுதி "Das Kapital" என்னும் நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவிற் பரபரப்பை ஏற்படுத்தியபோதும், பல்கலைக்கழகப் பொருளியற் துறைகள் மார்க்ஸின் கருத்துக்களை ஒரு பொருட்டாக

அப்போது மதிக்கவில்லை. சந்தைப் பொருளாதாரமே மக்களின் சுபீட்ச வாழ்வுக்குச் சஞ்சீவியென்று கூறிய பொருளியலாளர்களே புகழடையலாயினர். பிரித்தானியாவின் வளர்ச்சி அவர்களின் கூற்றுக்குச் சான்று பகர்ந்தது. கணிதவியலின் ஆய்வுக்கருவிகள் அவர்களின் விளக்கங்களுக்கு விஞ்ஞான மெருகூட்டின. பல்கலைக் கழகங்களும் பொருளியற் துறையை வளர்க்கலாயின.

1930களில் மேற்குலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் புதுப்பழம்பொருளியலாளர்களின் சந்தைப் பொருளாதார விளக்கங்களுக்கெதிராகப் பல கேள்விகளை எழுப்பின. சந்தைச் சக்திகள் ஏற்படுத்தும் சமநிலை (Equilibrium) வரவேற்கப்பட வேண்டிய தொன்றா? மந்த நிலையை அடைந்துவிட்ட ஒரு பொருளாதாரத்தை இச்சக்திகள் எவ்வளவு விரைவாகவும் உறுதியாகவும் மீண்டும் செழிப்படையச் செய்யும்? சந்தைகளைச் சுயமாக இயங்காவிட்டால் ஒரு பொருளாதாரத்தின் வளர்ச்சி இன்னொரு பொருளாதாரத்தின் வீழ்ச்சியின் மூலமே சாத்தியமாகுமா? அல்லது எல்லாப் பொருளா தாரங்களும் சமகாலத்திற் சுபீட்சம் அடையலாமா? இவ்வாறான கேள்விகளை முன்வைத்துத் தலையிடாக் கொள்கையையும் புதுப்பழம் பொருளியலையும் தட்டிக் கேட்கலானார் ஜோன்மெய்னாட் கீன்ஸ். ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்ட அவரது 1936ஆம் வருட நூலுக்குப் பின்னர் பொருளியற்கலை மீண்டும் பெரும்பாக அடிப்படையில் ஒரு புதிய உத்வேகத்தைப் பெறலாயிற்று.

சந்தைச் சக்திகளுக்குப் பூரண சுதந்திரம் வழங்குதல் ஆபத்தானதென்றும், அரசு பொருளாதார அலுவல்களிற் தலையிட்டுச் சந்தைச் சக்திகளை வழிப்படுத்தல் வேண்டுமென்றும் இவரது ஆய்வுகள் முடிவுகூறின. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் கீன்ஸியப் பொருளியல் என்ற புதுப் பிரிவொன்றும் பொருளியற் கலையிற் தோன்றலாயிற்று.

கீன்ஸின் கருத்துக்களுக்கு மேலும் வலுவூட்டின இன்னும் சில சம்பவங்கள். முதலாவதாக, கார்ள் மார்க்ஸின் பொருளாதாரக் கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு 1917ஆம் ஆண்டுக்குப் பிறகு பொதுவுடமைப் பொருளாதார அமைப்பொன்று அப்போதைய சோவியத் குடியரசில் உறுதிகொள்ளலாயிற்று. இவ்வமைப்பு முதலாளித்துவச் சந்தைப் பொருளாதார அமைப்புக்கு நேரெதிரானது மட்டுமல்லாமல், அதன் பண்புகளும் கொள்கைகளும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் பொதுவாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயும் வசீகரம் பெறலாயின. இதனால் பொதுவுடமைவாதமும், பொதுவுடமைப் புரட்சியும் முதலாளித்துவப் பொருளாதார நாடுகளிற் பரவக்கூடிய வாய்ப்பு உண்டென்பதை அந்நாட்டு அரசுகள் உணர்ந்தன. எனவே, அரசாங்கங்கள் பொருளாதார விவகாரங்களிற் தலையிட்டு சந்தைப் பொருளாதார அமைப்பின் சீர்கேடுகளைக் குறைக்க வேண்டும் என்ற கொள்கை பொருளியலாளர்கள் மத்தியில் வலுவடையலாயிற்று. கீன்ஸியக் கருத்துக்கள் இவ்வுணர்வுக்கு வலுவூட்டின.

இரண்டாவதாக, இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் குடியேற்ற நாடுகளில் அரசியற் சுதந்திர வேட்கை ஊற்றெடுக்கத் தொடங்கிற்று. பனிப்போர் தொடங்கியவுடன் சோவியத் குடியரசின் ஆதரவு இச்சுதந்திர வேட்கைக்குப் பக்கபலமாய் அமைந்தமையையும் மறக்கலாகாது. இந்நாடுகள் குடியேற்ற ஆட்சிக் காலத்தில் வல்லரசுகளின் பொருளாதாரச் சுரண்டலுக்குப் பலியாகிய நாடுகளாகும். இங்கேயும் பொதுவுடமை வாதம் நிலைகொள்ளக்கூடிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்ததை ஐரோப்பிய வல்லரசுகள் உணரத் தொடங்கின. எனவே, புதிதாய்ச் சுதந்திரமடைந்த இந்நாடுகளிலும் வெறுமனே சந்தைச் சக்திகளை நம்பியிருக்காமல் கீன்ஸியப் பொருளியலின் அடிப்படையில் அரசாங்கங்கள் பொருளாதார அபிவிருத்தியில் நேரடியாகத் தலையிடுவதை மேல்நாட்டு அரசியற் தலைவர்கள் வரவேற்றனர். அதற்காக வெளிநாட்டு உதவி என்ற பெயரில் சலுகை நிரம்பிய கடன்களையும் அவை வழங்க முன்வந்தன. சர்வதேச நாணய நிதி, அன்றிருந்த புனர்நிர்மாண அபிவிருத்திச் சர்வதேச வங்கி (International Bank for Reconstruction and Development) ஆகிய தாபனங்களிலும் கீன்ஸின் பொருளியற் கொள்கைகள் 1950களிலும் 1960களிலும் செல்வாக்குப் பெறலாயின.

இவ்வாறு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் அரசாங்கங்கள் பொருளாதாரத் துறையில் நேரடித் தலையீடு செய்ததாற் பொருளியலாளருக்குப் பரவலான மதிப்பும், உயர்வருமானமுள்ள அரசாங்க உத்தியோகங்களும் உருவாகின. பல்கலைக் கழகங்களிலும் பொருளியற் துறைக்கு அதிகளவு மாணவர்கள் சேரலாயினர். பெரும்பாகப் பொருளியல், அபிவிருத்திப் பொருளியல், சர்வதேசப் பொருளியல், பொருளியற் தத்துவம் போன்ற புதுப்புதுப் பாடங்கள் பொருளியற் கல்வியிற் புகுத்தப்படலாயின. மாணவர் தொகை அதிகரிப்புடன் விரிவுரையாளர் தொகையும் கூடவே அதிகரிக்கலாயிற்று.

இப்படியாக 1950, 1960களிற் பொருளியற் கலை செழிப்பான ஒரு வாழ்வை அனுபவித்த அதேவேளையில், வேறொரு வழியிலும் அக்கலையின் வளர்ச்சி ஒரு புதிய பாதையில் நடைபோடத் தொடங்கியது. புதுப் பழம்பொருளியலாளர் பொருளியலில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியுள்ளரெனப் பொதுவாகக் கூறுவதுண்டு. அப்புரட்சியின் ஓரங்கம் என்னவெனில் பொருளியலைக் கணிதவியலின் கட்டுக்கோப்புக்குள் வைத்து ஆய்வு செய்யக்கூடிய ஒரு விஞ்ஞானக்கலைத்துறையாக

மாற்றிவிட்டமையாகும். தற்காலப் பொருளியற் பாட நூல்கள் எவ்வாறு அட்சரகணித, கேத்திரகணித உத்தி களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

இவ்வாறு பொருளியலைக் கணிதமயமாக்கும் போக்கு அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் தலைமை யில் 1960, 1970களில் மிகவேகமாக வளரலாயிற்று. கணிதப் பொருளியல் (Mathematical Economics), தொகைவாரிப் பொருளியல் (Quantitative Economics) கணிப்பொருளியல் (Econometrics), புள்ளிவிபரப் பொருளியல் (Statistical Economics) என்று பல்வேறு நாமங்களுடன் பொருளியல் கணிதமயமாகத் தொடங் கிற்று. பொருளாதார மதிப்பீடுகளை அச்சொட்டாகக் கணிப்பதற்கும், அம்மதிப்பீடுகளின் அடிப்படையிற் பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதற்கும் மேற்காட் டிய கணிதமயப் பயிற்சியும் பாடங்களும் உகந்தன என்று பெரும்பான்மையான பொருளியற் பேராசிரியர்கள் கருதியமையால் மேற்கூறிய போக்கு மேலும் துரித மடைந்தது. இக்காலகட்டத்திற் கணினியின் கண்டுபிடிப் பும் அதன் உபயோகமும் இப்போக்கின் வேகத்தினை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

பொருளியல் கணிதமயமாக்கப்பட்டதால் அதற்கும் அரசியல், சமூகவியல், ஒழுக்கவியல் போன்ற சமூக ஞானங்களுக்குமிடையேயுள்ள பிணைப்பு பொருளியலா ளர்களின் ஆய்வுகளிற் பிரதிபலிப்பது குறைவடையலா யிற்று. பொருளியலின் ஆரம்பகாலத் தோற்றத்தை நாம் விளக்கியபோது பழம்பொருளியலாளர் பொருளாதார நடவடிக்கைகளை அரசியற் சமூகப் பின்னணியில் வைத் துத்தான் ஆராய்ந்தனரென்பதைத் தெளிவுபடுத்தினோம். பொருளியலைத் தனிப்பட்ட ஒரு துறையாகவே அவர் கள் கருதவில்லையென்பதையும் எடுத்துக் காட்டினோம். இப்போது இப்பிணைப்பு தளரத் தொடங்கிப் பொருளி யலும் பௌதிகவியல், இரசாயனவியல், கணிதவியல் போன்று அச்சொட்டான கணிப்புக்கு ஏதுவான ஓரியல் என்ற நிலை ஆய்வாளர் மத்தியிற் காலூன்றலாயிற்று. பொருளியற் கல்வியும் பொருளியல் ஆய்வுகளும் புறமெய்மைப் பொருளியல் (Positive Economics) என்ற பிரிவையே சார்ந்தவையாகத் தொடரலாயின. இது ஒரு துர்ப்பாக்கியமான மாற்றமாகும்.

பொருளியலின் கணிதமயப்போக்கு ஆபத்தான தென்பதை இற்றைக்குச் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அல்பிரட் மார்ஷல் எச்சரித்திருந்தபோதிலும், அதே எச்சரிக்கையை 1950க்குப் பின்னரும் ஜோன் கெனத் கல்பிரைத் (1908-2006), குணார் மிர்டால் (1898-1987) போன்ற பொருளியலாளர்கள் விடுத்திருந்த போதிலும் கணிதமயம் கட்டற்றுச் சென்றதை இக்கால ஆய்வு வெளியீடுகள் தெளிவுபடுத்துகின்றன.

இதன் விளைவென்னவெனில் பொருளியல் ஆய்வுகள் கையாண்ட மாதிரிகளும் உத்திகளும் யதார்த் தத்தை விட்டும் வெகுதூரம் விலகலாயின. பொருளியற் பண்டிதர்களின் மதிப்பீடுகளும் யூகங்களும் பெரும்பா லும் ஏட்டுச் சுரைக்காய்களாகவே பொருளாதாரத்துக்குள் நுழைந்து நடமாடிய பெரும்பாலான உற்பத்தியாளர் களுக்கும் நுகர்வோருக்கும் முதலீட்டாளர்களுக்கும் தென்படலாயின. அடர்ந்த பனிமண்டலத்துக்குள்ளே ஆடித்திரிந்த ஒரு பறவையொன்றை துருப்பிடித்த துப்பாக்கியொன்றாற் சுடுவதுபோற் தோன்றின பொருளி யலாளர்களின் பெரும்பான்மையான ஆய்வு மாதிரிகளும் அவை காட்டிய தீர்வுகளும். 1973இல் ஏற்பட்ட எண்ணெய் விலையேற்றம், 1978இல் வீழ்ந்த ஈரானிய ஷா மன்னராட்சி, 1987இல் ஆரம்பித்த பங்குச் சந்தை வீழ்ச்சி, 1997இல் ஏற்பட்ட ஆசிய நிதி நெருக்கடி போன்ற சம்பவங்கள் உலகப் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதித்தன.

ஆனால் இச்சம்பவங்களைப் பற்றி எந்தப் பொரு ளியலாளனும் யூகிக்கவுமில்லை; அவர்களின் மாதிரி களில் இவை ஒரு காரணியாக இடம்பெறவுமில்லை. சம்பவங்கள் நடந்துமுடிந்தபின் அவற்றிற்குரிய காரணங்களையும், அவற்றால் ஏற்பட்ட தாக்கங்களையும் பற்றி ஆய்வு நடத்துவதிற் பொருளியலாளர்கள் கைதேர்ந் தவர்கள். ஆனால் அச்சம்பவங்களைப் பற்றி முன்கூட் டியே அறிவதற்கு அவர்களின் பொருளியற் தத்துவம் இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்றே கூறவேண் டும். இவ்வாறு உண்மைச் சம்பவங்களுக்கும் பொரு ளியல் ஆய்வுகளின் முடிவுகளுக்கும் இடையேயுள்ள வெளிவிரிடைந்ததால் பொருளியற் கலையே அதன் பிரபல்யத்தை இழக்கத் தொடங்கிற்று. இது ஒருபுற மிருக்க, 1980க்குப் பின்னர் ஏற்பட்ட சந்தைப் பொருளா தார மறுமலர்ச்சியும் பொருளியற் கல்வித் துறையின் சரிவுக்குத் தூபமிடலாயிற்று. இதைப்பற்றி இனி விளக்குவோம்.

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் பொருளாதார வரலாற்றிற் பிரித்தானியாவுக்குச் சொந்தமானதென்றால் இருபதாம் நூற்றாண்டு அமெரிக் காவுக்குச் சொந்தமானதாகும். பத்தொன்பதாம் நூற்றாண் டின் இறுதிக் கால்வாசியிற் பிரித்தானியா பொருளாதார வளர்ச்சியிற் பெற்றிருந்த தலைமை இடத்தைச் சிறிது சிறிதாக அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், ருஷ்யா போன்ற நாடுகளுக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதா யிற்று. பொருளாதார வளர்ச்சியிற் பிந்திக் காலடியெடுத்து வைக்கும் நாடுகளுக்கு இயற்கையாகவே சில அனுகூலங் கள் எப்போதும் உண்டென்பதை கேர்ஷன்குரோன் என்ற பொருளாதார வரலாற்றாசிரியர் நிறுவியுள்ளார். இவ்வுண்மையைப் புதிதாய்க் கைத்தொழில்மயமாகிய ஜப்பான், ஹொங்கொங், தென்கொரியா, தைவான்,

சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வரலாறும் உறுதிப்படுத்துகின்றன.

இருப்பினும் கடந்த நூற்றாண்டின் முதற் பாதியில் ஏற்பட்ட இரண்டு உலகப் போர்களும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாரிய நஷ்டத்தை உண்டுபண்ணின. குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் எல்லா ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும் மிகுந்த சீரழிவை எதிர்நோக்கிய நிலையில் அமெரிக்காவே அவ்யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படாது தன்னிகரற்ற ஒரு பொருளாதார வல்லரசாகத் தோற்றமெடுத்தது. இந்தப் பொருளாதாரப் பலமே அதை இருபதாம் நூற்றாண்டின் தலையாய ஏகாதிபத்திய அரசாகவும் மாற்றிவிட்டது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் கீன்ஸியப் பொருளியற் கொள்கைகள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தமையை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். அதே கொள்கைகள் அமெரிக்காவையும் 1950, 1960 களிலும் 1970இன் முதற்பாதியையும் ஆட்கொண்டன. சந்தைச் சக்திகளுக்கே முதலிடம் கொடுத்து இயங்கிய முதலாளித்துவப் பொருளாதாரங்களின் போட்டி உலகப் போருக்கே வழிவகுத்தமையையும், இதனால் மாற்றுப் பொருளாதார முறையொன்றை சோவியத் குடியரசு உலகுக்கு வழங்கியமையையும், அம்முறை வறிய நாடு களையும், வறுமைப்பட்ட மக்களையும் வசீகரித்தமை யையும் அமெரிக்க அரசியற் கட்சிகளும் அவற்றின் தலை வர்களும் உணரத் தவறவில்லை. எனவே தாராண்மைக் கொள்கைகளைக் கைக்கொண்டு கீன்ஸியப் பொருளிய லின் அடிப்படையில் அரசின் பொருளாதாரத் தலையீட் டுடன் முதலாளித்துவத்துக்குப் புதுமெருகு பூசும் பான்மையில் அமெரிக்கப் பொருளாதாரக் கொள்கைகள் 1950, 1960களில், உருவெடுத்தன.

அமெரிக்க நாணயமான டொலருக்கு பொன் போன்ற மதிப்பு உலகளாவிய ரீதியில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இடம்பெற்றதும் அந்நாட் டின் பொருளாதாரத்தை மேலும் வளம்பெறச் செய்தது. அமெரிக்கப் பொருளாதார உதவியுடனும், அதன் இராணுவப் பாதுகாப்புடனும் ஏனைய மேற்கை ரோப்பிய நாடுகளும், ஜப்பானும் இக்காலப் பகுதியிற் பொருளாதார வளர்ச்சி கண்டன. 1960கள் முடியும்வரை அமெரிக்காவும் மேற்கைரோப்பிய நாடுகளும், ஜப்பானும் நிறைதொழில் கண்ட பொருளாதாரங்களாக மிளிர்ந்தன.

1970களுக்குப் பின்னர் இச்செழிப்பு நீடிக்கவில்லை. வியட்னாமில் அமெரிக்கா எதிர்கொண்ட படுதோல்வி யும், எண்ணெய் விலையேற்றமும், அமெரிக்க டொலரின் பொன்மாற்று விதி நீக்கமும், அந்நாட்டின் தேசியக் கடன் சுமையும் ஒருங்கிணைந்து உலகளாவிய ரீதியிற் பொருளா தார மந்த நிலையையும், பணவீக்கத்தையும், தொழில் வாய்ப்புக் குறைவையும் ஏற்படுத்திவிட்டன. 1930களின் பொருளாதார மந்தச் சூழலில் சஞ்சீவி மாத்திரையாகிய விளங்கிய கீன்ஸின் பொருளாதாரக் கொள்கைகள் 1970இன் நிறைதொழிற் சூழலில் நஞ்சென மாறியதை மில்டன் பிறீட்மென் போன்ற நிதிசார் கொள்கைப் பொருளியலாளரும், மாட்டின் பெல்ட்ஸ்ரைன் போன்ற நிரம்பல்சார்ப் பொருளியலாளரும் சுட்டிக்காட்டினர். பணவீக்கமும் தொழிலின்மையும் ஒருங்கே நிலவிய தேக்கவீக்கம் *(Stagflation)* தோன்றியதற்குக் கீன்ஸியப் பொருளாதாரக் கொள்கைகளே காரணமென இவர்கள் வாதிட்டனர்.

அரசுகள் பொருளாதார அலுவல்களில் நேரடித் தலையீடு செய்தமையால் அரசின் செலவினங்கள் அதிகரித்து, வரிகளும் உயர்ந்து, முதலீட்டாளர்களிடையே ஊக்கமும் குறைந்தமையாற் பொருளாதாரங்கள் முடங் கிக் கிடக்கின்றன என்று இவர்கள் மேலும் விளக்க மளித்தனர். இந்நிலை மாறவேண்டுமெனின் அரசு பொருளாதார விவகாரங்களிற் தலையிடுவதை நிறுத்தித் தனியார் துறைக்கு முழு ஊக்கமுமளித்துச் சந்தைச் சக்தி களுக்கெதிரான எல்லாத் தடைகளையும் அறுத்தெறிய வேண்டுமென இவர்கள் பரிகாரம் வழங்கினர். இவர்களது கருத்துக்களிற் புதுப்பழம்பொருளியல் மறுபிறவி எடுத்துள்ளதை எளிதிற் காணலாம்.

இருப்பினும், இப்பொருளியலாளர்களின் கருத்துக் களை முற்றாகச் செயற்படுத்துவதற்கு அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் முன்வந்தன. 1980களில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற றொனால்ட் றீகனும் பிரித்தானியப் பழமைக்கட்சியின் தலைவியாகத் தெரிந் தெடுக்கப்பட்டுப் பிரதமராகவும் பதவியேற்ற மாகரற் தச்சரும் புதுப்பழம்பொருளியலின் ஒப்பற்ற பிரச்சாரகர்க ளாகவும் அதன் செயலாக்க வீரர்களாகவும் திகழ்ந்தனர். 1970, 1980களில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றங்களும், விசேடமாகத் தொலைத்தொடர்பு சாதன, போக்கு வரத்துத் துறைகளில் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியும் பன்னாட்டு நிறுவனங்களின் பொருளாதாரப் பலத்தை வலுவடையச் செய்து அரசாங்கங்களையே அவற்றின் காலடியில் மண்டியிடச் செய்தன.


சோவியத் ஒன்றியத்தின் அரசியற் பொருளாதாரச் சீர்குலைவு கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சீரழியச் செய்தமையாற் பொதுவுடமைப் பொருளியலும் புறக்கணிக்கப்பட வேண்டியதொன்றாக இவ்வாண்டு களில் மாறிற்று. இறுதியாக, குறைவுவிருத்தி நாடுகளின் கடன் சுமையும், பொருளாதார நெருக்கடியும் அந்நாடு களை உலக வங்கி, சர்வதேச நிதித்தாபனம் ஆகியவற்றின் செல்வாக்கினுட் சிக்கவைத்தன. இத்தாபனங்கள் முதலா ளித்துவ வல்லரசுகளினதும், பன்னாட்டு நிறுவனங்களி னதும் ஆதிக்கத்தினுள் இயங்குவனவால் அவைகளின் பொருளாதார உத்திகளையே குறைவுவிருத்தி நாடுகளின்

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் பரிகாரமாக இத்தாபனங்கள் வழங்கின. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாகத் தோன்றியதே 1970க்குப் பின்னர் ஏற்பட்ட சந்தைப் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சி.

பொருளாதாரங்களுக்குள் முதலின் தடையற்ற நுழைவுக்கும், அகல்வுக்கும், போக்குக்கும் முற்றான சுதந்திரம்; தொழிலாளிகள் போராட்டங்களுக்கும் தொழிற் சங்கங்களின் இயக்கத்துக்கும் எதிராகத் தடைகள்; பன்னாட்டு நிறுவனங்கள் உள்நாட்டுக்கு நுழைவதற்குப் பூரண அனுமதி; ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துக்கும் அதற்கு வேண்டிய அன்னியச் செலாவணிக்கும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை முற்றாக நீக்குதல்; தனியார்மயக் கொள்கைக்கு அரசின் பூரண ஆதரவு வழங்கல்; அரசாங்கச் செலவினங்களைக் குறைத்தல்; கல்வி, சுகாதாரம் போன்ற பொதுநலத் துறைகளையும் தனியார்மயப்படுத்தல்; வரித்தளப் பரவலாக்கம் என்ற பெயரில் நேர் வரிகளைக் குறைத்து நேரில் வரிகளை விஸ்தரித்தல்; அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் மிகையையும் அது முடியாத பட்சத்தில் சமநிலையையும் நாடுதல்; ஆகிய இன்னோரன்ன அம்சங்களை உள்ளடக்கியதாக எழுந்ததே இச்சந்தைப் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சி. இவற்றின் விளைவுகளையோ இவை பற்றிய பொருளியற் சித்தாந்தங்களையோ ஆழமாக விளக்கின் இக்கட்டுரை நீண்டுவிடும். எனவே இம்மறுமலர்ச்சியினாற் பொருளியற் கல்வித்துறை எவ்வாறு பாதிப்படைந்துள்ளது என்பதை மட்டும் இனி ஆராய்வோம்.

எல்லாமே சந்தையை மையமாகக் கொண்டே செயற்பட வேண்டும் என்ற சித்தாந்தமே சமூகத்தில் மேலோங்கி நின்றதால் கல்விக்கூடம் கடைச் சரக்காய் மாறிவிடத் தொடங்கிற்று. "கல்வி கல்விக்காக" அல்லது "அறிவைத் தேடுவது அறிவுக்காக" என்ற உயரிய நோக்கு இன்று செல்லாக் காசாக மாறி, கல்வி கற்பது ஊதியத்துக்காக அல்லது வருமானத்துக்காக என்ற நிலை வந்துவிட்டதால் தொழிற் சந்தையிலே விலைபோகும் துறைகளையே மாணவரும் விரும்பிக் கற்கின்றனர். வாங்குவோனையும் விற்போனையும் இணைப்பதுவே சந்தை. குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்து கூடிய விலைக்கு விற்று உச்சலாபத்தை அடைவதே அச்சந்தைக்குள் நுழையும் ஒவ்வொரு பகுத்தறிவாளனதும் இலட்சியமாகும். இச்சந்தையிலே கல்விக்குப் பெறப்படும் விலை அக்கல்வி எந்த அளவுக்குக் கொள்வனவு, விற்பனை, உற்பத்தி ஆகிய துறைகளுக்குப் பயனுள்ளது என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

இவ்வாறான ஒரு சந்தையிலே பொருளியலின் பல்வேறு பிரிவுத் துறைகளுக்கு மதிப்புண்டா? சந்தைப் பொருளாதார மறுமலர்ச்சியிற் தனியார் துறைக்கு மதிப்புப் பெருகிய அதேவேளையில் பொதுத் துறைக்கு மதிப்புக் குறைந்ததில் எவ்வித ஆச்சரியமுமில்லை. பொருளாதார விவகாரங்களிற் பொதுத்துறை மிகக் குறைந்த அளவே பங்கு கொள்ள வேண்டுமென்பதுதான் சந்தைப் பொருளியலின் தாரக மந்திரம். இதனாற் பொதுத் துறைப் பொருளியல், பொதுத்துறையுடன் நெருங்கிய பொருளாதார அபிவிருத்திக் கோட்பாடு ஆகிய துறைகளுக்கு அறிவுச் சந்தையிலே மதிப்புக் குறையலாயிற்று.



மேலும், பொருளியற் சிந்தனை (Economic Thought), பொருளாதார வரலாறு (Economic History), மார்க்ஸிப் பொருளியல், ஒப்பீட்டுப் பொருளாதார அமைப்புகள் (Institutional Economics) போன்ற பொருளியலின் உபபிரிவுகளுக்கும் பல்கலைக்கழக மாணவரிடையே விருப்புக் குறையலாயிற்று. இவற்றிற்குப் பதிலாக சந்தையோடு சம்பந்தப்பட்ட இயல்களான முகாமைத்துவப் பொருளியல் (Managerial Economics), நிதிப்பொருளியல் (Monetary Economics), சர்வதேச நிதியியல் (International Finance), சுற்றுலாப் பொருளியல் (Economics of Tourism), சூழற் பொருளியல் (Environmental Economics) போன்ற பல புதுப் பிரிவுகள் இன்று மகிமை பெற்றுள்ளன. கணிதப் பொருளியல், தொகைவாரிப் பொருளியல் போன்ற பிரிவுகளுக்கும் இன்று மாணவரிடையே மதிப்பில்லை. புதியன புகுதலும் பழையன கழிதலும் வழக்கென்பதற்கேற்ப இம்மாற்றங்களை நோக்கினாலும் பொருளியலே மொத்தத்தில் மௌசு குறைந்த ஒரு அறிவுத் துறையாக நலிவடைந்தமைக்கு வேறேதும் தனிப்பட்ட காரணங்களுண்டா? என்ற கேள்வியும் எழுகின்றது.

இன்று பல்கலைக்கழகங்களில் விரைவாக வளர்ந்து வரும் ஒரு துறை வர்த்தகவியற் துறையாகும். வர்த்தகவியலுக்குள்ளேயே முகாமைத்துவம், வங்கி இயல், நிதி இயல், சந்தை இயல் என்று பல உபபிரிவுகள் விசேட துறைகளாக வளர்ந்துள்ளன. இவையெல்லாமே சந்தைப் பொருளாதாரம் விரும்புகின்ற திறன்களை மாணவர்களிடையே புகட்டி அவர்களைச் சந்தைச் சரக்குகளாக மாற்றும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளன. இதில் ஒரு வேடிக்கை என்னவெனில் இப்பிரிவுகள் எல்லாமே பொருளியலுடன்

நெருங்கிய சம்பந்தமுள்ளவை. 1950, 1960 களில் பொருளியற் துறையின் ஓர் அங்கமாகவே வர்த்தகத்துறையும் அதன் உபபிரிவுகளும் இயங்கின.

ஆனால் அறுபதுகளுக்குப் பின்னர் பொருளியல் கணிதமயமாகி அந்தப் போக்கிலேயே சில விசேட பிரிவுகளையும் ஏற்படுத்தி நடைமுறைக்கு ஒவ்வாத கோட்பாடுகளைச் சித்தரிப்பதிற் கூடிய கவனம் செலுத்தியதால் நடைமுறைக்குத் தேவையான துறைகளைப் பொருளியற் கலை தன்னிடமிருந்து நழுவ விட்டுவிட்டது. இதனால் பல வளர்ச்சியடைந்த நாடுகளின் பல்கலைக்கழகங்களிற் பொருளியல் வர்த்தகத் துறையின் ஓர் உட்பிரிவாகக் கருதப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பொருளியற் கல்வித் துறையின் தளர்ச்சி வெளிப்படையாகவே மேற்கு நாடுகளின் அறிவுக்கூடங்களிற் தென்படுவதை அவதானிகள் அறிவர்.

பொருளியல் கணிதமயமாகவும் தொகைவாரியகவும் மாறியதில் இன்னுமொரு உண்மையும் மறைந்து கிடக்கின்றது. 1960களின் பிற்பகுதியிலும் 1970களின் முற்பகுதியிலும் மேற்குநாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான ஒரு பரவலான ஆர்ப்பாட்டத்தை வியட்னாமியப் போரை மையமாக வைத்து எதிர்நோக்கலாயின. இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமைதாங்கியவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். அதிலும் பொருளியல், அரசியல், சமூகவியல் போன்ற பாடங்களைக் கற்ற மாணவர்களே இதை முன்நின்று நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தை இராணுவ பலம்கொண்டே அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அரசாங்கங்கள் அடக்க வேண்டி இருந்தது. அந்தச் சம்பவத்துக்குப் பிறகு இனிமேலும் பல்கலைக்கழகங்கள் புரட்சிக்கூடங்களாக மாறாமலிருக்க அரசும் பல்கலைக்கழக அதிகாரிகளும் பரிகாரம் தேடினர். அந்தப் பரிகாரங்களுள் ஒன்றுதான் பாடநெறிகளில் ஏற்பட்ட மாற்றமும், ஏன் எதற்காக என்று கேட்டுச் சந்தேகங்களையும் தர்க்கங்களையும் வளர்ப்பதைவிட மாணவர்கள் எப்படி நடைமுறையுடன் ஒத்து நடைபோட வேண்டும் என்ற மந்திரத்தையே அறிவுக் கூடங்கள் புகட்ட வேண்டும் என்ற கொள்கை கல்வித்துறையிற் காலூன்றலாயிற்று. பொருளியலும் அதற்கேற்பத் தன்னை மாற்றிக் கொண்டது.

1970களுக்குப் பிறகு தோன்றிய சந்தைப் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியும் கணினிமயமான தொழில்நுட்பப் புரட்சியும் இந்த மாற்றத்துக்குப் பக்கபலமாய் அமைந்தன. இருந்தபோதும் தடையற்ற சந்தைப் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சியும் அதற்குத் தத்துவப்பலம் வழங்கும் புதுப்பழம்பொருளியலின் மறுமலர்ச்சியும் நீண்டகாலம் நிலைத்திருக்குமா என்பது சந்தேகம். தொழில்நுட்ப வளர்ச்சியாற் தேசியப் பொருளாதாரங்களின் எல்லைகள் உடைத்தெறியப்பட்டு உலகமே ஒரு கிராமாகவும், பாரிய சந்தையாகவும் சுருங்கியமை சந்தைப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்துள்ளது என்பது உண்மை. எனினும் இதே வளர்ச்சி உலகப் பொருளாதார வளத்தைச் சமமற்ற முறையில் சமூகங்களுக்கிடையே பங்கிடுவதையும் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கிறது.

உலக மொத்த வளத்தின் எண்பது விழுக்காட்டை உலகச் சனத்தொகையின் கால்வாசியினரும் மிகுதி இருபது விழுக்காட்டை ஏனைய முக்காலவாசியினரும் அனுபவிப்பதைச் சந்தைப் பொருளாதார வளர்ச்சி தடுக்கும் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் இதுவரை இல்லை. பொருளாதார அல்லது வருமான ஏற்றத் தாழ்வுகள் மக்களிடையே விரிகின்றதேயன்றிச் சுருங்குவதாயில்லை. தேசிய ரீதியில் சீனா இந்தியா போன்ற நாடுகளின் அண்மைக்காலப் பொருளாதார எழுச்சி இக்கருத்தை மறுப்பதுபோலிருந்தாலும் அந்தந்த நாடுகளுக்குள்ளேயும் வருமான ஏற்றத் தாழ்வுகள் விரிவடைகின்றதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலை தொடருமானால் கீன்ஸியப் பொருளாதாரக் கொள்கைகள் தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்த ஒரு பொருளாதார மந்தச் சூழல் மீண்டும் உருவாகக் கூடிய சாத்தியமுண்டு. 2008இல் அமெரிக்காவில் ஆரம்பித்த பொருளாதார வீழ்ச்சியுடன் அப்படிப்பட்ட ஒரு சூழல் ஏற்கெனவே உருவாகிவிட்டதென்றும் பலர் இப்போது கருதுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றைச் சற்று நுணுக்கமாக ஆராய்ந்தால் பொதுவுடைமைப் புரட்சிகள் தோன்றுவதற்கும் மேற்கூறிய சூழலொன்றே காரணியாக இருந்ததென்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே சந்தைச் சக்திகளைக் கட்டுப்படுத்தி அரசுகளும் பொருளாதார அலுவல்களில் ஈடுபட்டு மக்கள் நலனையே பிரதான இலக்காகக் கொண்ட ஒரு கலப்புப் பொருளாதாரம் மீண்டும் உருவாகக்கூடிய சாத்தியங்கள் இந்த நூற்றாண்டிலும் ஏற்படலாம். அவ்வாறான ஒரு பொருளாதார அமைப்பை ஆராய்ந்து பொருத்தமான கொள்கைகளை வகுக்கக்கூடிய ஆற்றலுள்ளவர்களைத் தோற்றுவிக்கும் வகையிற் பொருளியற் கல்வியும் மாற வேண்டும்.

இந்த மாற்றத்தின் அடிப்படையாகப் பொருளியல் இதுவரை தான் நடந்துசென்ற குறுகிய பாதையை விட்டும் விலகி அவ்வியலின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் எவ்வாறு அது அரசியல், ஒழுக்கவியல், சமூகவியல் போன்ற துறைகளையும் உள்ளடக்கிய ஒரு விரிந்த துறையாக மிளிர்ந்ததோ அதே நிலையை மீண்டும் அடைய வேண்டும். அதற்குரிய சாயல்கள் ஏற்கனவே ஹாவார்ட் போன்ற பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களில் ஏற்படத் தொடங்கியுள்ளன.

ஏ.சி.எல்.அமீர் அலி
பொருளியல் பேராசிரியர்
மேர்டொக் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

சந்தா விண்ணப்பப் படிவம்

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

# ஆசிரியம்

"Aasiriyam" 180/1/50 People's Park, Colombo -11,
Tel: 011-2331475 E-mail :aasiriyam@gmail.com

முழுப் பெயர் ..........................................................................

..........................................................................

பாடசாலை முகவரி ..........................................................................

..........................................................................

அலுவலக முகவரி ..........................................................................

..........................................................................

தொலைபேசி/தொலைநகல் இல ..........................................................................

மின்அஞ்சல் முகவரி ..........................................................................

ஆசிரியம் அனுப்ப வேண்டிய முகவரி ..........................................................................

..........................................................................

இத்துடன் ரூபா..........................................................க்கான பணம்/ காசோலை

* காசோலை இலக்கம் .............................................. இணைத்துள்ளேன்.

*Commercial Bank: A/C No : 1120017031 (Chemamadu B/C)*

திகதி : கையொப்பம்

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.



## 'ஆசிரியம்'


| விளம்பரக் கட்டணம் | சந்தா விபரம் |
| --- | --- |
| பின் அட்டை - 10,000/- | தனி இதழ் - 50/- |
| உள்ளட்டை முன் - 8,000/- | ஆண்டு சந்தா - 600/- |
| உள்ளட்டை பின் - 5,000/- | ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) - 1,000/- |

**மேலதிக தொடர்புகளுக்கு :**


| | |
| --- | --- |
| தெ.மதுசூதனன்<br>077 1381747 / 011 2366309/ 021 2227147<br>மின்னஞ்சல்: *mathusoothanan22@gmail.com* | காசுபதி நடராஜா<br>0777 333890<br>மர்ஜும் மௌலானா<br>077 4747235 |

"ஆசிரியம்" - படைப்புகள் அனுப்ப : *aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*


# சேமமடு பதிப்பகம்




**விலை: 360.00**




**விலை: 340.00**




**விலை: 300.00**

## CHEMAMADU BOOK CENTRE

UG.50 People's Park, Colombo -11
Tel:011-2472362, 2321905 Fax: 011-2448624
E-Mail:chemamadu@yahoo.com, chemamadu50@gmail.com,
Website:www.chemamadu.com

# ஆசிரியம் தொடர்புகளுக்கு...

<u>வவுனியா</u>

| | |
|---|---|
| தா.அமிர்தலிங்கம் | 071-8457290 |
| ஆ.விஜேந்திரன் | 077-4412518 |
| சி.ரமேஸ் | 077-4744810 |
| சு.பரமானந்தம் | 071-8457260 |
| ந.பார்த்தீபன் | 077-6231859 |
| அறிவாலயம் புத்தகநிலையம் | 024-4920733 |

<u>மட்டக்களப்பு</u>

| | |
|---|---|
| கி.புண்ணியமூர்த்தி | 077- 7034528/065-2250114 |
| ச.ஜெயராசா | 065- 2225812/077-7249729 |
| ச.மணிசேகரன் | 065- 2248334/077-6635969 |
| டிகநாதன் | 077- 2482718 |

<u>யாழ்ப்பாணம்</u>

| | |
|---|---|
| புக்லாப் (பரமேஸ்வராச் சந்தி) | 021- 2227290 |
| ரி.ரவீந்திரன் | 077- 1285749 |
| ந.அனந்தராஜ் | 077- 8293366 |
| நெடுந்தீவு மகேஷ் | 077- 4687873 |

<u>கிளிநொச்சி</u>

| | |
|---|---|
| பெருமாள் கணேசன் | 077- 0789749 |

<u>ஹட்டன்</u>

| | |
|---|---|
| முரளி புத்தக நிலையம் | 05- 7911571/ 051-7911311 |

<u>கொழும்பு</u>

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை | 011- 2504266/ 011- 4515775 |
| பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு | 011- 2422321 |

<u>அம்பாறை</u>

| | |
|---|---|
| அமீர் அலி | 077-2224025 |

<u>அனுராதபுரம்</u>

| | |
|---|---|
| அன்பு ஜவஹர்ஷா | 071- 8489797 |

<u>திருகோணமலை</u>

| | |
|---|---|
| இ.புவனேந்திரன் | 026 -2222426 |
| ஆ.செல்வநாயகம் | 026 -2222765 |
| ச.தேவசகாயம் | 026 -2227345 |
| சத்தியன் | 077 -7294287 |

மூதூர்

| | |
|---|---|
| க.கனகசிங்கம் | 077 -8730736 |

மன்னார்

| | |
|---|---|
| ஜோதி புத்தக நிலையம் | 023 -2222052 |